# நான் அவள்...





குறுங்கதைகள் 64

திருமலை
சுந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்.. அவள்..

குறுங்கதைகள்

**64**

## திருமலை சுந்தா

வெளியீடு – 11

அம்மா பதிப்பகம்,

17௨, பிரதான வீதி, திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான்..... அவள்....

## குறுங்கதைகள்

உள்ளே....


1. பழசுகள்
2. கடவுள்
3. நம்பிக்கை
4. பூட்டுக்கள்
5. கடைசிக்கழுதும்
6. என் அக்காவுக்கு கல்யாணம்
7. ஆண்மகள்
8. கொடுத்து வைத்தவள்
9. நாங்க இருவரும்
10. சமுத்து மருமகள்
11. சமாதானம்
12. இதுவும் ஒரு சோதனை
13. நாகரீகம்
14. விலை
15. குமிழிகள் உடைகின்ற வேகம்
16. இரண்டு தடவை
17. நெக்கிலஸ்
18. இவர்களுக்கும் திருவிழா
19. விருந்துக்கு வராதவள்
20. இனியொரு
21. பொங்கல் எங்களுக்கல்ல
22. பத்தரை மாற்றுத் தங்கம்
23. வேலி
24. அட்வான்ஸ்
25. ஏன் இப்படி
26. முடியாததொன்று
27. வெற்றிலைச் சுருள்
28. சின்னக்குறும்பு
29. கொடைவள்ளல்
30. பொங்கலுக்காகவல்ல
31. முப்பத்தைந்து சதம்
32. சுயவிமர்சனம்
33. நீங்களும் நாங்களும்
34. பொய்
35. நான் அவள்
36. சுனாமி
37. ஞானோதயம்
38. தெய்வங்கள்
39. வித்துக்கள்
40. சில்லறைக்கடை
41. பயம் எனும் பாம்பு
42. முதல் ஆள்
43. சுவாமி... சுவாமி..
44. இப்படியும் ஒரு
45. சுத்தம்
46. ஒரு அப்பா
47. மசைக்கோழி
48. அப்பாவின் தவிப்பு
49. காரணிகள் இரண்டு
50. நம்புட்டான்
51. உணர்ச்சி
52. அதிர்வுகள்
53. மனக்குறை
54. நாகரீகம் என்று
55. ஒரு சோடிச் செருப்பு
56. கோபம்
57. போராளிகள்
58. மழை வருகின்றது
59. சங்கமம்
60. முடியாது முடியாது
61. நியாயங்கள்
62. தண்டனை
63. ஒரு டயறி
64. செந்தணல்



✹ குறுங்கதைகள் – 64 ✹ திருமலை சுந்தா

✹ 11.01.2009 ✹ பிரதிகள்: 500 ✹ விலை– 200/-

✹ பதிப்பு:– சி. சுந்தரலிங்கம் அம்மா பதிப்பகம் 172, பிரதான வீதி, திருக்கோணமலை. ✹ பதிப்பு; அஸ்ரா பிரிண்டர்ஸ், திருமலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இது.........
முகவுரையோ
நயவுரையோ
அல்ல....
இத்தொகுப்புக்கு
என்னுரையே
போதும்.

# நான்... அவள்..

எனது ஐம்பத்தெட்டாவது வயதில் இதுவரை எத்தனை 'மனிதர்கள்' என்னோடு கை கோர்த்து இருந்திருப்பார்கள்.

அவர்களோடு பழகிய நாட்கள்அவர்களை பிரிந்த வேதனை..... என் சொல் கேளாமல் வீட்டில் பூச்சி மாதிரி போனவர்கள்......

நான் கவலைப்படுவதில்லை 'கவலை' என்ற வார்த்தை எனக்குப் பிடிக்காது. நடப்பது நடக்கட்டும். எதிர் கொள்ள நான் தயார் என்ற வேகம் இயலாமையில் தவிக்கும் என்னுள் இப்போதும்..... இப்போதும்.....

என் எழுத்துக்களைப் பார்த்து விட்டு எவர் எவரோ உதவ முன் வந்தார்கள். கை நீட்ட என்னால் முடியாது.

அப்படி என் எழுத்துக்களை விற்க முடியாது. என் வாதம் நடைமுறைக்கு சரிப்படாதது என்று எனக்கு தெரியும். நானென்ன செய்ய?

நான் அப்படி வாழ்ந்து விட்டேனே!

இத்தொகுப்பு வெளிவர.......

என்னுள்ளும் ஒரு 'விருப்பம்' என்றும் நினைக்க வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்புகளை அடக்கி ஆழ்பவன் நான். கவலைகளை காலடியில் மிதித்தவன் நான். என்னுள் நானா?? எனக்கே புரியவில்லை.

நாளிதழ் சஞ்சிகைகளில் வெளிவந்த எனது 'குறுங்கதைகள்' தொகுக்கப்பட்டுள்ளன. இன்னும் உண்டு. விரும்பியோ விரும்பாமலோ நடந்த சோதனை முயற்சி இது.

'அவன் பெரியவனாகி விட்டான்? என்ற நாவல்....

வீட்டை விட்டு ஓடிப்போனவன் திரும்பவும் வீட்டுக்கே வருகின்றான் எப்படி... எப்படி....

'மனிதத்தை' சரியாக இனங்கண்டவனாக. சமுதாய போராளியாக வருகின்றான்.

'இன்றே......' என்ற கவிதைத் தொகுப்பு.....

நினைவுகள் கனவுகள் அல்ல மறந்து போக...? என்று பேசி நிற்கின்றன இக்கவிதை வரிகள்.

இரண்டு நூல்களும் வெளிவர காத்திருக்கின்றன. எழுதப்பட்ட ஆண்டு 1974.

இக்குறுங்கதைகளை பிரசுரம் செய்த பத்திரிகைகள், சஞ்சிகைகளின் ஆசிரியர்கள்.... ஓவியர்கள்.....

தொகுப்பு ஆக்கம் செய்து தந்த செல்வி தி. பிரியந்தி....

படங்களை சரிபார்த்து எழுத்து பிழைகளை திருத்தி தொகுப்பு ஆக்கத்திற்கு உதவிய திருமதி சுந்தர ஜெயலெட்சுமி.....

அச்சு வாகனமேற்றி, அழகுற நூலாக்கித் தந்த 'அஸ்ரா பிரிண்டர்ஸ்'....

இவர்கள் என்றுமே
என் நினைவினில்......

நடப்பது நடந்தே தீரும் தானே.
இனி அவனை அல்லது என்னை
குறுங்கதைகளில் கண்டு பேசி
மகிழுங்களே! தொடருவேன்....

'நன்றி'

31/1. சமாது ஒழுங்கை,
திருக்கோணமலை.

திருமலை சுந்தா
11.01.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழசுகள்

மத்தியானம் இரண்டு மணி தாண்டி இருக்கும். பசியோடு வீட்டுக்கு வந்தேன் காலையில் கூட சிவபட்டினி. சிறுகுடலை பெருங்குடல் விழுங்கிக் கொண்டிருந்தது. "சாப்பாட்டை போடப்பா...." என்று விட்டு அவசர அவசரமாக உடுப்புக்களை கழற்றி எறிய அறைக்குள் போனேன்.



எல்லாம் என்ற ஒரு கையால வேலை செய்ய வேணும் நாளைக்கு பொங்கல். இது கூட நினைவு இருக்குமோ என்னவோ .........." சமையல் அறையில் இருந்து மனைவியின் அர்ச்சனை என் காதுகளுக்கு எட்டியது. அவசரமாக அறையை விட்டு வெளியே வந்தேன். ஆத்திரம் அணையை மீறிக் கொண்டிருந்தது. "மனிதன் படுகிற அலைச்சல் தெரியாமல்.... ஏதோ றோட்டு அளந்து விட்டு வாறவனுக்கு மாதிரி புறு.... புறுத்தால்...." சமையல் அறையை எட்டிப் பார்த்தேன். என் கண்கள் ஒரு முறை வீட்டை மேய்த்துவிட்டு வந்தன.

"பாவம்.... இன்று இவள் தனியாக இந்த வீட்டோடு கஷ்டப்பட்டிருப்பாள். ஒரு துணையும் இல்லை. வீடு வாசல் கழுவி.... பழைய துணிமணிகளை தோய்த்து ...... பொங்கலுக்கு ஆயத்தம் பண்ணுவதென்றால்..." என் பலயீனம் அவளின் பலமாக இருந்தது. என் ஆத்திரமும் அணையத் தொடங்கியது.

"இப்ப என்ன கடைக்கு போய் பொங்கல் சாமான்கள் வாங்க வேண்டும் அவ்வளவுதானே!" நான் என் மனைவியை சமாளித்தேன்.

இப்ப வேண்டி...... இனி எப்ப ....... இந்த வேலைகளைப் பார்ப்பது... நேற்று படிச்சு... படிச்சு... சொன்னேனே கேட்டால் தானே.... தான் பிடிச்சது தான் சரி...."

எனக்கு ஒரு புறம் பசி மற்றப்பக்கம் போன ஆத்திரம் மீண்டும் வந்து விடுமோ என்ற பயம். 'பசிக்குது.... சாப்பாட்டைப் போடன்....' நான் என் பசியை அவளிடம் உணர்த்தினேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏதோ புறு.... புறுத்தபடி அவள் சாப்பாட்டை' போட்டாள்.

'இன்னும்.... கோபம் போகவில்லை போலும்... ஏனப்பா நீ இன்னும் சாப்பிட வில்லையோ.... சாப்பிடன்.... சாப்பிட்டால் பசியும் போக.... கோபமும் போய்விடும். அதுக்கு மேல இருந்தால் சாப்பிட்டு விட்டு சண்டை போடலாம்...' சாப்பாட்டு தட்டு என் கைக்கு மாறியது. நான் இறால் குழம்பை பதம் பார்க்க தொடங்கினேன்.

அவள் என்னை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'சாப்பிடன் அப்பா...' நான் அவளை அழைத்தேன்.

சாப்பிட எனக்குத் தெரியும்..."

'இஞ்ச கோவிக்காத... நாளைக்கு பொங்கல்... அதுக்கு சாமான்கள் வேண்டவில்லை. அதுதானே உன்ர கோபம்'

அவள் என்னை முறைத்துப் பார்த்தாள்.

'நீ.... நாளைக்கு பொங்காதை...' நான் சிரித்தபடி சொன்னேன்.

'என்ன...' அவள் குரல் கீச்சிட்டது.

'நாங்கள் ஏன் பொங்க வேணும்'

'நாங்கள் தமிழர்கள். எங்கட கலாசாரம் இது. இதை எப்படி மாற்றுவது...' என் மனைவி வாயினைத் திறந்தாள்.

"எங்கட கலாசாரம் என்று சொல்லுறியே எத்தனை நாள் நீ அடுப்பில் சோறு... கறி ஆக்கி கண்டறியாத 'கேஸ் குக்கர்' தானே ... எல்லாம்... நாளைக்காவது அடுப்பை மெழுகு... சுத்தம் செய்து சோறு... கறி... ஆக்கினால் என்ன...?

தமிழர்களின் கலாசாரம் பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்றால் .... கேஸ் குக்கருக்கு ஒரு நாள் ஆவது விடுதலைகொடன்...' சாப்பாட்டை உள்ளே தள்ளிக் கொண்டே சொன்னேன்.

மனைவி வாய்விட்டுச் சிரித்தாள்.

"என்ன ...' நான் ஆர்வமுடன் கேட்டேன்.

"உண்மை தாங்க... பொங்குறது எவ்வளவு முக்கியமோ..... அதைவிட பழசுகளை மறந்து போறதும்..." நான் ஆச்சரியத்துடன் மனைவியைப் பார்த்தேன்.

அம்மா.... அடுப்பை.... மெழுகட்டோ... சட்டி பானைகளை இருட்டு அறையில் இருந்து எடுக்கட்டோ..." எனது மகள் பிரியா தாயிடம் கேட்டாள்.

நான் மகளை பார்த்தேன்

மனைவி என்னைப் பார்த்தாள்...

பிறகென்ன

நாளைக்கு எங்களுக்கு பொங்கல் தானே!

அதுவும் கலாசாரப் பொங்கல்.... சரிதானே!

-வீரகேசரி வாரவெளியீடு-

10.01.1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள்

"கடவுளை உன்னால் காட்ட முடியுமா?" நான் சிவராமனிடம் கேட்டேன்.

"காட்டமுடியும்....

"எப்படி?

நான் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும்.

கேள்

"உனக்கு மூளை உண்டா?"

"உண்டு..."

எங்கே அதை எனக்கு காட்டு பார்க்கலாம்..?

சிவராமனின் கேள்வி என்னை திகைக்க வைத்தது.

"இது முட்டாள்தனமான கேள்வி" சிவராமன் சிரித்து விட்டு சொன்னான்.

"எனது கேள்வி முட்டாள் தனமானது என்றால் உனது கேள்வியும் முட்டாள் தனமானது தான்.

உனது மூளையையே காட்ட முடியாத நீ கடவுளைக் காட்டு என என்னிடம் கேட்டதும் மூளையற்ற முட்டாளின் கேள்வி தான்.."

என்னால் ஏதும் பேச முடியவில்லை.

-சிவநெறி - 2002-

## நம்பிக்கை

எனக்கு சுகப்பிரசவம் நடக்க வேண்டுமென்றால் வளவு வைரவருக்கு தேங்காய் உடைத்துக் கற்பூரம் ஏற்றுங்கள். உங்கள் வரட்டுத் தத்துவங்கள் என்னைக் காப்பாற்றா...?

பிரசவ வாட்டில் மனைவியை மகப்பேற்றுக்கு சேர்த்து விட்டு வந்த பின் அந்தக் குரல் விடாது துரத்திக் கொண்டிருந்தது.

ஐந்து வருடங்கள் பிள்ளை இல்லாமல் தவித்த எங்களுக்கு இது முதற் பிரசவம்.

"காளி ஆச்சியிடம் நான் மடியேந்தின வரம் என்றாள் என் மனைவி"

"இல்லை இடைவிடாத மருத்துவ முயற்சி என்றேன் நான்.

நாளும்பொழுதும் எங்களிருவருக்கும் உள்ள சண்டையும் இதுதான்.

இன்று என் மனைவியின் அந்த ஒரே ஆசை விருப்பம், நம்பிக்கை.

"அப்படி கடவுளை நீங்க நம்ப வேண்டாம் எந்தவொரு செயலுக்கும் நம்பிக்கை ஒன்று தேவையல்லவா! இந்த நம்பிக்கை இல்லாது போனால் செயல் நடக்குமோ? இந்த நம்பிக்கை எனக்கு இறைவனாகத் தெரிகிறது. இதையாவது நம்புங்கள்.

என்னை அவளின் நம்பிக்கை வார்த்தைகள் கட்டிப் பிடித்தன.

"ஐந்து ஆண்டு வயசு முப்பத்து மூன்று கவனமாக இருக்க வேண்டும். டாக்டரின் ஆலோசனை என்னை சத்திர சிகிச்சை செய்து கொண்டிருந்தது.

என்னால் அந்தக் கதிரையில் இருப்புக் கொள்ள முடியவில்லை.

என்னுள் நான் நம்பாத அந்த மனைவியின் "நம்பிக்கை ஆசை" படரவா தொடங்குகின்றது?

கற்பூரம், தேங்காய், தீப்பெட்டி இவைகளை நான் தேட ஆரம்பித்தேன்.

-சிவநெறி - 2002-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டுக்கள்

கோவில் வாசலை மிதித்த போது முன்னால் உள்ள பெரிய கதவில் தொங்கிக் கொண்டிருந்த ஐந்து கிலோ எடை யுள்ள பெரிய ஆமைப் பூட்டுத்தான் என் கண்களுக்கு தெரிந்தது.

கண்களை நிலத்தில் பதித்த போது உண்டியலுக்கு காவலாக போடப் பட்டிருந்த பெல்ஜியம் நிக்கல் இரும்புப் பூட்டுத் தெரிந்தது.

பூசை நேரம் பற்றிய விளம்பரப் பலகைக்கு நூறு கிராம் பூட்டு காவலாக இருந்தது. அன்று எங்குமே என் கண்களுக்கு பூட்டுக்கள் மயம் தான்

"இறைவா உன் சந்நிதியிலும் பூட்டுக்களா?"

இரு கரம் தூக்கி, தலையில் இருத்தி ஆசைதீர இறைவனை வணங்க வேண்டும் போல் இருந்தது.

**-சிவநெறி - 2002-**

# கடைசிக் கடிதம்

சோதிநாதன் பலதடவைகள்.. பலதடவைகள்... தன்மனைவி எழுதிய அந்த வெளிநாட்டுக் கடிதத்தை படித்துப் பார்த்து விட்டான்.

அதிர்ச்சிமேல் அதிர்ச்சியாக அந்த கடிதம் அவனுக்கு இருந்தது. அவனது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவனை யறியாமல் கரங்கள் நடினமாடிக் கொண்டிருந்தன.

முளை வெகு வேகமாக இயங்கிக் கொண்டிருந்தது. கண்கள் கண்ணீரைச் சிந்தத் தொடங்கின அப்படியே அந்த சாய்மனைக் கதிரையில் சாய்ந்தே விட்டான்.

கடிதம் மட்டும் அவனது கரத்தில் இருந்து விடுபடாமல் படபடத்துக் கொண்டிருந்தது.

"நீங்கள் பணத்திற்காக என்னை அனுப்பினீர்கள். நான் பணத்திற்காக இங்கு விலைபேசப்பட்டு விட்டேன். என்னை இழந்து உங்களை ஏமாற்ற நான் விரும்பவில்லை. என்னுடைய தொடர்பை இனி அறுத்து விடுங்கள் நீங்கள் நான் உழைத்து அனுப்பிய பணத்தைக் கொண்டு சுகமாக வாழுங்கள். பிள்ளைகள் என்னைக் கேட்டால் நான் விபத்தில் இறந்து விட்டதாகச் சொல்லுங்கள்.



இது என் கடைசிக் கடிதம் என்னை இனி நினைக்கவே வேண்டாம். இப்போ நான் பலபேருக்கு சொந்தக்காரி......"

இந்தக் கடிதவரிகள் இந்தக் கடிதவரிகள்.....

"டேய் பொம்பிளைகளின்ர உழைப்பில் சீவிக்கக் கூடாதடா..." சோதிநாதனின் தாய். அவன் தன் மனைவியை வெளிநாட்டுக்கு வேலைக்கு அனுப்ப முயன்ற போது சொல்லிய வார்த்தைகள்.... இன்றும்... இன்றும்...

சோதிநாதன் காதுகளை இறுக பொத்திக் கொண்டான். பொத்திக் கொண்ட போதிலும் அதனால் எழுந்த இரைச்சலில்...

அவன் மனைவி.. தாய்... பிள்ளைகள்... எல்லோரும் நிறைந்தே இருந்தார்கள்.

**ஜனனி: 1995**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அக்காவுக்கு கல்யாணம்

லிசாவின் சந்தோஷத்துக்கு அளவே இல்லை. வாய் முழுவதும் பல்லாய் சிரித்துப் பார்த்தாள். வயிறு நொந்ததுதாள் மிச்சம்.

காரணம் வேறு ஏதும் இல்லை. அக்காவுக்கு வரன் தேடி... மாப்பிள்ளையின் படத்தைப் பார்த்த போதுதான் லிசாவுக்கு அந்த பொல்லாத சிரிப்பும் பொத்துக் கொண்டு வந்தது.

"என்னடி இப்படி சிரிக்கிறாய்..?" லிசாவின் தாய் கேட்டபோது... "இல்லை அம்மா... என்னை குண்டு... குண்டு... தடிமாடு... என்பீர்கள்... இப்ப அக்காவுக்கு வாரவரைப் பார்க்கும் போதுதான்..." லிசா மீண்டும் தன் அழகான சிரிப்பை உதிர்த்தாள்.

தாய்க்கும் சிரிப்புதான் வந்தது. கஷ்டப்பட்டு அடக்க லிசாவின் அம்மா முற்பட..." பிறகென்ன... அம்மாவை இனி எங்க பிடிக்கிறது. மூத்த மகளோட



கொஞ்சி குலவ கனடா போய்விடுவா... நாங்கதான்... இஞ்ச இருந்து ..." லிசா வார்த்தைகளை உதிர்த்த போது... தபால்காரனின் மணியோசை கேட்கவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாக இருந்தது.

துள்ளிப் பாய்ந்து தெருவுக்கு ஓடிய லிசா கடிதத்துடன் திரும்பி வந்தாள். "அம்மா அக்காவின் கடிதம்..." கடிதத்தைப் பிரித்தாள்.

ஒரு பக்கத்தில் அழகான முத்து முத்து எழுத்துக்களில் கடிதம் எழுதப்பட்டிருந்தது. "என்னவாம்...?" தாயின் குரலுக்கு ஏதும் சொல்லாதவளாய் லிசாவின் கண்கள் அந்த கடித வரிகளுடன் மொய்த்துக் கொண்டிருந்தன.

"என்னடி கடிதத்தில எழுதி இருக்கு?... கொண்டுவா அதை..." லிசாவின் தாய் கதிரையில் இருந்து எழ முற்பட்ட போது...

"அம்மா... அக்காவுக்கு வாற மாதம் லீவாம். இன்னும் இரண்டு வருடத்துக்குப் பிறகு படிப்பு முடிந்த பின்பே... கல்யாணத்தைப் பற்றி சிந்திக்கலாம்..." கடிதத்தை தாயிடம் கொடுத்துவிட்டு வானத்தைப் பார்த்தாள். முன் முற்றத்தில் கதலி வாழை பெரிய குலையொன்று போட்டிருந்தது. நல்ல குண்டு குண்டான வாழைக்காய்கள்... பார்ப்பதற்கு அழகாக மட்டுமல்ல... ஆனந்தமாகவும் இருந்தது. லிசாவுக்கு. ஆனால்... ஆனால்... அவள் முகத்தில் ஐந்து நிமிடங்களுக்கு முன்பிருந்த அந்த ஆனந்தம்... பெருமிதம்... அளவற்ற மகிழ்ச்சியின் சாயல்... எல்லாமே இப்போது அந்த முற்றத்து கதலி வாழையுடன் ஒட்டியாகிவிட்டது.

அக்காவின் கல்யாணத்தை நினைத்து அந்தரத்தில் பறந்த அவளுக்கு... அக்காவின் கடித வரிகள்.. அவளது கற்பனை நினைவுகளை வெட்டியா விட்டன?

"ஏனம்மா... அக்காவுக்கு இந்த சம்பந்தம்...? நல்ல இடம் அல்லவா? தேடிப் போனாலும் இப்படி வருமா? கல்யாணத்தைச் செய்துபோட்டும் படிப்பை முடிக்கலாம் தானே. அதுக்கும் அவையள் ஓமென்று சொல்லுகினத்தானே...? அக்கா ஏன் இப்படி எழுத வேணும்?" லிசா ஆத்திரத்தோடுதான் தாயிடம் கேட்டாள்.

ஆனால் அந்த ஆத்திர உணர்வின் சாயல் லிசாவின் தாய் தங்கரத்தினத்தின் முகத்தில் எள்ளளவும் இல்லை. கலவரம்தான் புகுந்து விட்டிருந்தது. சிந்தனைக் கோடுகள் முகத்தில் மாறி... மாறி... அழ.. அழகான வண்ணப் படங்களை கீறி... கீறி... அழித்துக் கொண்டிருந்தன.

உச்சி வெய்யில் அந்த தகர வீட்டை மட்டுமல்ல... அவர்கள் இருவரினதும் தலைகளையும் சூடாக்கியே கொண்டிருந்தது.

"எப்ப பார்த்தாலும் இந்த அக்கா இப்படித்தான். எதைச் செய்யப் போனாலும் அதுக்கு ஒரு எதிர்ப்பு. அப்பா எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த கல்யாண சம்பந்தத்தைப் பேசி முடித்தார். பாவம் அவர். இவ இரண்டு வரியில தப்பப் பார்க்கிறா... வாசிற்றியில படிச்சா என்ன பெரிய மனிசி என்ற நினைப்போ! இல்லாட்டி கொஞ்சம் "பஸ்" அடிச்சுதான் எங்களுக்கு பெரிய மனிசாகக் காட்டுற நினைப்போ... சே..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிசா தன் வார்த்தைகளை எண்ணைச் சட்டியில் போட்டு பொரிக்கத் தொடங்கினாள்.

"லிசா... சும்மா இரு. கதைக்காத..."

"என்னண்டு கதைக்காமல் இருக்க. என்ர ஸ்கூல் பிள்ளைகளிட்ட அக்காவுக்கு கலியாணம்... அக்காவுக்கு கலியாணம் என்று எத்தனை தடவைகள் சொல்லிப் போட்டன். இனி எப்படி அவையள் முகத்தில முழிக்கிறது? அம்மா! எங்கட பிரின்சிபல் அடிக்கடி சொல்லுவா. 'பிள்ளைகள் வாழ்க்கைதான் முக்கியம். படிப்பல்ல. இந்த படிப்பு அந்த வாழ்க்கையை செப்பனிட உதவ வேண்டும்' என்று...

"அக்காவும் முதலில வாற நல்ல வாழ்க்கையை தான் நேசிக்க வேண்டுமே ஒழிய படிப்பு.. படிப்பு... என்று வாழ்க்கையையே பாழாக்கக்கூடாது. படித்திருக்கிறாவாம்... படிப்பு... கண்டிறியாத படிப்பு.."

"லிசா சும்மா இரு... கதைக்காத.."

"உங்களுக்கு மூத்த மகள் என்ற போதும் அவ என்ன செய்தாலும் சரிதான்.. நான்.."

லிசா சத்தம் போடாதை.. கொஞ்சம் யோசித்துப் பார். நாங்க இருக்கிறது திருகோணமலையில... அவ இருக்கிறது யாழ்ப்பாணத்தில. நாங்க யுத்தமில்லாத ரவுண் பகுதியில புளிச்சல் வாழ்க்கை வாழ்கிறம். அவ யுத்தம் நடைபெறும் பயங்கர பூமியில் வாழுகிறா. எங்களுக்கும் அவவுக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கு. இதில கொஞ்சம் யோசிக்க வேண்டும்.

"அவவின் முடிவை ஒட்டித்தான் நாங்களும் முடிவு எடுக்க வேண்டும்.

தாய் தங்கரத்தினம் மெதுவாக சொன்னது லிசாவின் காதுகளில் வேகமாக நுழைந்து கொண்டது.

"அப்ப அக்காவின் கலியாணம்.... அப்ப அக்காவின் கலியாணம்.."

சுருதி இல்லாத வார்த்தைகள் லிசாவின் வாயில் இருந்து வந்த போது...

"லிசா... அப்பாவை ஒருக்கா யாழ்ப்பாணம் அனுப்பி என்னண்டு பார்ப்பம்."

அம்மாவின் வார்த்தைகள்...

லிசாவின் காதுகளில்...

வானின் உச்சத்தில் பறந்த அந்த போர் விமானம் சுப்பர் சொனிக்... தன் உச்சமான குண்டுகளை பொழிந்துவிட்டு மின்வெட்டில் மறைந்தது போலிருந்தது.

(தினமுரசு 6.12.1994)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்மகள்

பாவம் அப்பா. என்ன ஆசையாக இந்த வீட்டைக் கட்டி முடித்தார். என்னப்பா இவள் ரேகா கம்பசால வரப்போகிறாள். நீங்கள் உங்கள் பாட்டில் வேலை... வேலை... என்று இருந்தால்... இந்த தகரக் கொட்டகையையோ கொடுப்பது அவளுக்கு...? அதுவும் அவள் ஒரு என்ஜினியர். வரப்போறவரும் என்ஜினியர்.




இப்படித்தான் அம்மா: அப்பாவுடன் நாளாந்தம் சண்டைபோட்டு இந்த அழகான வீட்டை கட்டி முடிக்க தூண்டுதலாக இருந்திருப்பாள். அப்பாவிடம் காசு இல்லை என்று சொல்வதற் கில்லை. யாழ்ப்பாணத்து அம்மாவின் சீதன காணி: பூமிகளையும் தன் முதிசங்களையும் பத்து வருசத்துக்கு முன்பே விற்று வங்கியில் ஃபிக்சற் டிப்போசிற்றில் போட்டிருந்தார்.

இரண்டு தோணியில் கால் வைக்கக் கூடாது ஒன்றில் யாழ்ப்பாணம் இல்லாட்டி திருகோணமலை. முடிவாக திருகோணமலையில் தான் வாழ்வது என்ற முடிவு ஏற்பட்ட போதுதான்... யாழ்ப்பாண சொத்துக்களை விற்க அப்பா முடிவு செய்தார். அம்மாவும் தலையாட்டினாள்.

"என்னடி ரேகா ரோஜா பூவுடன் ஏதோ கதைக்கிறாய்...?"

ரேகா ரோஜா பூவுடன் கதைத்துக் கொண்டிருப்பதை தாய் கேட்டுவிட்டே கேட்டாள்.

"இல்லை அம்மா... மனிசரைப் பார்க்கிலும்... இந்த பூ...செடி... கொடி... மரங்கள் எல்லாம் எவ்வளவோ உயர்ந்ததம்மா... எந்த ரகசியத்தையும் பயமில்லாமல் நாங்கள் சொல்லலாம் நல்ல நண்பர்கள் அம்மா இவர்கள்..."

ரேகாவின் பேச்சு... பார்த்த பார்வை... வார்த்தைகள் வந்த தொனி... ரேகாவின் அம்மாவை ஏதோ செய்திருக்க வேண்டும். இவளுக்கென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததென்ற நினைவுடன்

"என்னடி உனக்கு...? ரேகாவின் அருகினில் ஓடி வந்தாள் கட்டியணைத்து "உனக்கென்னடி... அப்படி...?" அழத்தொடங்குகிறாள் அம்மா.

ரேகாவுக்கு தாயைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. "அம்மா... எனக்கு விசர்.. கிசர்... இல்ல... நல்ல சுயநினைவோடுதான் இருக்கேன். நீ அழ வேண்டாம்." ரேகா ஆறுதல் சொன்னாள்.

நீ எனக்கு ஆறுதல் சொல்லுறாய்... என்ன... நீ படிச்சனி. இன்னும் மூன்று மாதத்தில் என்ஜினியர் உத்தியோகம்...இப்படி சின்னப் பிள்ளையாட்டம்.." ரேகாவுக்கு அவளின் தாய் எதையோ நினைவூட்டினாள்.

"ஓம் அம்மா... கிணற்றடியில் நின்று கொண்டு வசனம் பேசியதும்: வாழைமரங்களோடு சண்டை பிடிச்சது: பூனைக் குட்டிகளோடு செல்லங் கொஞ்சியதும்: குருவி: லவ் பேட்சுகளுடன் அவைகளின் மொழியில் பேசி மகிழ்ந்ததுவும்: பாட்டு பாடினதும்: ஓம் அம்மா... அந்த ஏழு எட்டு வயது... என்ன இனிய நாட்கள் அம்மா, அப்ப எனக்கு விசரா அம்மா... அதுக்கு பின்னால் தானே நான் படிச்சு... இப்போ சொல்லுறியே... என்ஜினியராக வரப்போறன் என்று... அம்மா நீ ஒன்றுக்கும் பயப்படாத எனக்கு விசர் இல்லை. அந்த ஏழு, எட்டு வயது நினைவில் என் பழைய சிநேகித்ர்களுடன் பேசி மகிழ்கிறேன். அவ்வளவுதான்..." ரேகா தாயிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

"கம்பசால வந்த கையோட... லீவுக்குள்ள... எங்கயாவது... ஒரு சேஞ்சுக்கு கூட்டிக்கொண்டு போய்விட்டு வாங்க...

ரேகாவின் தோழி பரிமளம் சொன்னது தாய்க்கு உறுத்தியது.

"என்னம்மா யோசிக்கிறாய்...? நீ மூளையை விட்டுப் போடாதை... நீ விட்டால் அப்பா பாவம். எனக்கு பின்னாடி கலியாண கனவோடு நித்தம் வாழும் நித்யா பாவம். வேலை வேலையென்று அலையும் தம்பியன் கலங்கிப் போவான்..... வீடே தலைகீழாக போகும். அம்மா தயவு செய்து என்னை மட்டும் தனியா விட்டுடுங்க என்றால் பெரிய புண்ணியம் அம்மா... இந்த ரேகா பூவிடம் யோசனை கேட்பேன். மாதுளம் பழத்திடம் வழியைக் கேட்பேன்... எனக்கு எல்லாம் சரியாப் போயிடும் அம்மா..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவள் எங்கட சொல்ல கேட்கிறாள் இல்ல... சாவகச்சேரி என்ஜினியர் பெடியனை விசாரித்துப் பார்த்தன். நல்ல கொடி: கோத்திரம். ஆனால் குடும்பம் கொஞ்சம் பெரிசு நாலு வயதுக்கு வந்த தமக்கை: தங்கச்சிமார். வேற ஆண் பிள்ளைகளோ துணையோ இல்லை. இவரையும் இவரின் உழைப்பையும் நம்பித்தான் அந்த குடும்பம் இருக்கு. தகப்பன் போன வருடம் கிளாலி மோதலில் ஆளே இல்லை. அவங்கள்... கேட்கிற மாதிரி ஐந்து இலட்சத்தையும் இந்த வீட்டையும் கொடுக்க ஓம்படுவம். வேற வழி இல்ல. நாங்கள் இழுத்தடித்தோம் என்றால் இவள் ரேகாவின் மனமும் பேதலித்து... விசரி ஆகிடுவாள். சின்னவள் நித்யாவுக்கும் சீதனம் கொடுக்க இருக்குதுதானே? இனி தம்பியன் உழைப்பான்.."

ரேகாவின் தாய் தன் கணவரின் வார்த்தைகளை யோசித்துப் பார்த்தாள்.

ரேகா அந்த ரோஜாப் பூவுடன் சிரித்து... சிரித்து... என்னவோ பேசுவதைப் பார்த்தாள்...

"ஓம்பட வேண்டியதுதான். இல்லாட்டி இவளுக்கு..." முடிந்த முடிவோடு ரேகாவின் முதுகினில் கையினை வைத்து "ரேகா... நான் கேட்பேன் பிடிவாதமாக இருக்காமல் பதிலைச் சொல்லு..." என்று விட்டு பூமரச்சாடிக்கு பக்கத்தில் கிடந்த மணல் திடலில் அமர்ந்து கொண்டாள்.

"என்ன கேட்கப் போகிறாய்? அவர்கள் கேட்கிற முழுச் சீதனத்தையும் கொடுக்கிறன் எண்டு தானே!" ரேகா சிரித்தாள்.

"என்னடி சிரிக்கிறாய்...?"

"அப்ப என்ன அழவா சொல்கிறாய்...? என்ன இந்த மூன்று வருசமாக காதலித்தாரே... அதுக்கு..." ரேகா விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

"என்னடி... ஏன் அழுகிறாய்...?"

"அழ இல்லை அம்மா... இந்த உலகத்தில் வாழும் ஆம்பிளையளை நினைச்சுதான் அம்மா..."

"உன்ர அப்பா... உன்ர தம்பி... எல்லோரும் ஆம்பிளையள் தானே?"

"ஏன் ரஞ்சனும் ஆம்பிளதான் அம்மா..."

ரேகாவின் ரஞ்சன் என்ற சொல் தாயை உலுப்பி எடுத்தது.

ரஞ்சன் கிட்டடி சொந்தக்காரன். ரேகா கம்பசுக்கு போகும்வரை... ரேகாவின் பெற்றோரும்: ரஞ்சன் ரேகாவுடன் நெருங்கிப் பழகுவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசமாக பார்க்கவில்லை. ரேகாவின் மனம் மாறிய பின்புதான் ரஞ்சனை அவர்கள் தள்ளி வைத்தார்கள். கம்பசில் உள்ள என்ஜினியர் மாப்பிள்ளை எங்கே? தாய் தகப்பன் சொத்தில் சாப்பிட்டுக் கொண்டு திரியும் ரஞ்சன் எங்கே...? ரேகாவின் இழப்பால் ரஞ்சன் ஏதோ வேலையென வெளிநாடு போனான். சிலர் அவன் ஏதோ இயக்கத்திற்கு போய் விட்டதாகச் சொன்னார்கள். "உங்கட படிச்ச மோளால எங்கட பெடியனை தாரை வார்த்திட்டு தவிக்கிறம். இந்த பாவம் உங்களை சும்மா விடுமா...?" ரஞ்சனின் தாய் ரேகாவின் தாயைக் கண்டால் இதைத்தான் திருப்பி திருப்பி சொல்லுவாள்.

மாயமாக போன ரஞ்சன் ஒரு நாள் ஊருக்கு வந்தான். ஆட்டோ ஓட்டிக் கொண்டு திரிகிறான். சில சமயங்களில் வழி தெருவில் ரேகாவின் தாயைக் கண்டால்...

"வாங்க மாமி...வாங்க... வீட்டுக்கு கொண்டு போய் விடுறன்... ரேகாவைப் பற்றி நினைக்காதீங்க... அவ படிச்சவ... நான்...?" என அன்பாக கதைத்து: பண்பாக நடப்பான்.

"என்னம்மா... ரஞ்சன் என்றவுடன்... யோசிக்கிறீங்க...? இந்த விஷயமாக நான் ரஞ்சன் குடும்பத்துடன் பேசிப்போட்டன்..." ரேகா நிமிர்ந்து இருந்த தலையினை மேலும் நிமிர்த்திச் சொன்னாள்.

"ரஞ்சனோட பேசிப் போட்டியா...? எதைப் பேசினாய்?" தாய் அதிர்ச்சியுடன் கேட்ட போது...

எதுவித அதிர்ச்சியும் இல்லாமல் ரேகா சொன்னாள்... "நான் கும்புடுகிற காளி ஆச்சி... சத்தியமாய் நான் முடிச்சால்... ரஞ்சனைத்தான் முடிப்பன்..."

"என்ன...?" தாய் மிளாத அதிர்ச்சியோடு மணல் திட்டில் இருந்து எழும்பிய போது...

"அம்மா இரு... அடிக்கடி மனதை மாத்த நான் ஆண்மகன் அல்ல. வாசிற்றியிலே அவர் சொன்ன வார்த்தைகள்... சத்தியங்கள்... 'எங்கட சம்பந்தத்துக்கு சீதனம் என்ற பேச்சே வேண்டாம். உங்கட குடும்ப நிலவரம் தெரியும். நான் உழைப்பேன்... உங்கட குடும்பத்தையும் பின்னோக்கி போக விடமாட்டேன். என் பெற்றோரும் உங்கட குடும்பத்தை தாள விடமாட்டார்கள். என்னை நம்புங்கள்...' என்று அவருக்கு எத்தனை தடவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிச்சு... படிச்சு சொன்னேன்.

"கல்யாணத்துக்கு முதல் பேசிற பேச்சை பேசிப் போடவேணும். பிறகு அதற்காக சண்டை சச்சரவு செய்ய முடியாது. இப்படி யாரோ அவையளின் தாய்க்கு குத்தி விட்டிருக்கினம். இவரும் இதை பிடிச்சுக் கொண்டு... தாய் வழி நின்றால்...?

"என்னோடு இனி வாழப் போறாளே இவள். சுகம் துக்கம் எல்லாம் இவளோடு தானே என்ற எண்ணம்... இவருக்கு சிறிதளவாவது இருக்கா அம்மா?

"என்னை நம்பாதவர்... என் பேச்சை ஏற்காதவர்... இவரை நான் மணந்தால் நெடுக குடும்பத்துக்க சண்டைதான் அம்மா..."

ரேகா வார்த்தைகளை நிறுத்திய போது...

"அப்ப... ரஞ்சனையா முடிக்கப் போறாய்...?"

தாய் சத்தமாகக் கேட்டாள்.

"ஆம்...ஆம்...ஆம்..." ரேகா அதே சத்தத்துடன்பதிலைச் சொன்னாள்.

"என்னடி... உனக்குப் பைத்தியமா பிடிச்சுப் போச்சு...? நீ என்ஜினியர்... படிச்சனி... இவன்...?

ரேகா வாய்விட்டு சிரித்தாள்.

"ரோஜா.. மலரே... நீ... சொல்லு... ரஞ்சனை... நான் முடிக்க... உனக்கு... சம்மதம்... தானே...?"

"ரோஜா... நீ ஆண்மகன் அல்ல... ஆண்மகள்..." ரோஜா மலர் சொன்னது.

ரோஜா... இப்போது... ரோஜா மலருடன் சேர்ந்து சிரித்துக் கொண்டாள். ஆண்மகள் ஆக... ரேகாவின் தாய்....

**(தினக்குரல். 24.12.1994)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுத்து வைத்தவன்

பரமசிவம் சொன்னது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"நான் சொன்னால் நம்ப மாட்டீங்க. ஒரு நாளைக்கு வீட்ட வந்து பாருங்க. அப்ப உண்மை தெரியும்." தான் சொன்ன கதையை உறுதிப்படுத்த தன் கையை நீட்டி சத்தியம் செய்தான் பரமசிவம்.

பரமசிவம் மாட்டு வண்டில் வைத்திருப்பவன் . ஆளைப் பார்த்தால் குளிச்சு ஆறுமாத ஆள் என்று சொல்லலாம். காவி கலர் சரம் கட்டி இருப்பான். நெஞ்சிலை அடர்ந்து பற்றை போல படர்ந்திருக்கும் உரோமம். எப்ப பார்த்தாலும் செக்கச் சிவந்த தன் மேனியை தடவிக் கொண்டே இருப்பான். சினிமா கதாநாயகன் போல தாடி, மீசை வைத்திருப்பான். தலை மட்டும் வெண் மண்டை பேருக்கு நாலைந்து மயிர்கள்.

ஆள் ஊத்தையன் என்றாலும் நல்ல உடல் கட்டான ஆம்பிளைதான்... அவன் சொன்னது சரியாகத்தான் இருக்கும் எனக்குள் நான் எண்ணிக் கொண்டாலும் என் உடம்பிலும் ஆத்திரம் இனந்தெரியாமல் பீறிட்டுக் கொண்டிருந்தது.

உண்மையில் இவன் கொடுத்து வைச்சவன் தான். படிப்பு இல்லை அறிவும் இல்லை. நல்ல தண்ணிச்சாமி, கஞ்சா, அபின் பேர்வழி எப்ப பார்த்தாலும் குடி வெறியில் தெருவோரங்களில் தெரு நாய்கள் போல படுத்து சுகம் காணுபவன்.



தெருவை கடந்து மற்றப்பக்கம் வந்தேன். தெருவின் பக்கத்தில் நின்ற பேரீச்சமர நிழல் இதமாக இருந்தது. பேரீச்ச மரத்தை அண்டி இருந்த "பாறுக்கு" தண்ணிபோட போன ஒருத்தரை இதில் நின்றால்தான் வளைச்சுப் பிடிக்கலாம்.

என்ன இதில...? என்னை தெரிந்தவர் கேட்டுட்டுப் போகிறார். நானும் தண்ணிபோட வந்ததாக நினைத்து கேட்டிருக்கலாம் அல்லது வேறு ஏதாகிலும் நினைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்து என்னை......

அவர் என்னை பார்த்தது கேட்டது... கொஞ்சம் காரமாக இருந்தாலும் இந்த காரத்தை விட இவன் பரமசிவம் சொன்ன கதை இருக்கே... அதை நினைக்க... எல்லாவற்றையும் விட அவன் பரமசிவம் தான் கண்ணுக்குள் நின்று கொண்டிருந்தான்.

அவனது மனைவியை யோசித்துப் பார்த்தேன். இரண்டு மூன்று முறை கண்ட ஞாபகம், சரியான ஞாபகம் இல்லை. அவள் மெல்லிய கறுப்பி, மற்றப்படி ஏதும் அவளைப்பற்றி நினைவில்லை. இனி ஒரு தடவை அவளை சரியாக பார்க்க வேண்டும் என்ற நினைப்பும் இப்போது மேலிட்டது.

இந்த காலத்தில் இப்படியும் ஒருத்தியா? என்னுள் பரமசிவம் அவன் மனைவி... நன்றாக சிரித்து சிரித்து பேசுகிறார்கள்.

தம்பி உதில தான் ஐஞ்சு நிமிசம் பொறும் டக்கென்று வந்திடுவன்...

என்னை காக்க வைத்துவிட்டு போனவர் பத்து நிமிசமாகியும் என்னை காக்கவே வைத்துக் கொண்டிருந்தார்.

என்னைப் பொறுத்தவரை கொஞ்சம் பொறுமை கூட. எந்த விஷயத்திலும் அந்த பொறுமையை கடைசி வரை பிடித்துப் பார்ப்பேன். வெற்றி எனக்குத்தான். சில வேளை மற்றவையளுக்கு இந்த பொறுமை என்னை பேயனாக்கி விடுவதும் உண்டு.

தண்ணிபோட போனவரால் எனக்கு விஷயம் ஒன்று ஆக வேண்டும் என்ன செய்வது?

"யாரைப் பார்க்கிறீங்க... உங்களோட வந்து உள்ளுக்குள் போனவரையா? இப்ப அவர் வாற மாதிரி இல்லை நின்று பாருங்கவன்...?" அந்த பேரீச்சம் மர நிழலில் தள்ளு வண்டிலை நிறுத்தி விட்டு: அதில் அமர்ந்து இருந்த சவரி என்னிடம் சொன்னான்.

தள்ளுவண்டில் தள்ளி பிழைக்கும் சவரி: இவன் பரமசிவம் நான் எல்லோரும் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள்.

இவர்கள் கூலிப்பிழைப்பை நம்பி இருக்கிறார்கள். நான் படித்த பாடசாலையிலேயே ஆசிரியராக இருக்கிறேன்.

மேலே பேரீச்ச மரத்தை அண்ணார்ந்து பார்த்தேன். சவரி... இந்த மரம் காய்க்கிறதில்லையா..."

"என்ர காலத்தில் பார்த்திட்டன் மாஸ்டர்... ஒருக்காலும் காய்க்கவில்லை... அங்க சோனக வாடியில ஒரு பேரிச்ச மரம் நின்றது. அது அப்ப காய்த்தது. இப்ப அந்த மரம் இல்லை..."

'எனக்கும் அது தெரியும்... அன்வர்தீன் வீட்டுக்கு முன்னால..." நான் சொன்னேன்.

"மாஸ்டர்... யார் அன்வர்தீன் ஓ... பிரின்சிபல் அன்வர்தீனத் தான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுறீங்க.

"ஓம்... ஓம்

"நீங்க... மாஸ்டர். அன்வர்தீன் சேர் பிரின்சிபல்... நான் தள்ளுவண்டில்காரன் இவன் மூதேவி பரமசிவம் வண்டில் மாட்டுக்காரன்..." தன் பாடசாலை சிநேகிதர்களை சவரி நினைவூட்டினான்.

நான் சிரித்துக் கொண்டேன்

"ஏன் சிரிக்கிறீர்கள் என்றான் சவரி

"இல்லை... எங்கள் எல்லோரையும் மிகவும் மரியாதையாகச் சொன்னாய் ஆனால் இவன் பரமசிவத்தை மட்டும் "மூதேவி" என்கிறியே. அதுதான் நான் சிரிச்சன்.

"ஏன் அவன் அப்படிப்பட்டவன் தானே..."

"என்ன..." நான் என் நினைவில் அமிழ்ந்து கொண்டிருந்த பரமசிவத்தை தடவிக் கொடுத்தபடியே கேட்டேன்.

"பின்ன என்ன அவன் ஒழுங்காக இருந்தால்தானே..." சவரி சலித்தபடி சொன்னான்.

"அவன் ஒழுங்கில்லாமலா அவனை இப்படி அவன் மனைவி பார்க்கிறாள்." நான் இறுக்கமாக சவரியிடம் சொன்னேன்.

"மனைவி பார்க்கிறாளா? எப்படி பார்க்கிறாள்?" தள்ளுவண்டில் தண்டில் குந்தியிருந்த சவரி எழுந்து கொண்டான். சிரித்தபடியே மடிக்குள் இருந்து ஒரு பீடியை எடுத்து பற்றினான். ஒரு தம் இழுத்து விட்டான். மற்ற தம்மை வாயால் மிக... மிக... மெதுவாக விட்டுக் கொண்டே

"நானும் பார்த்தனான் இவன் பரமசிவத்தோட நீங்க கொஞ்ச நேரம் அலட்டிக் கொண்டு நிண்டதை நல்லா அளந்து கொட்டி இருப்பான். சவரி மீண்டும் மீண்டும் சிரித்தான்.

எனக்கு ஏதுமே புரியவில்லை. பரமசிவம் தன்னைப் பற்றியும் தன் மனைவி பற்றியும் கொஞ்ச நேரத்துக்கு முதல் சொன்னதை நினைத்துப் பார்த்தேன்.

"மாஸ்டர் உங்கள் மனிசி உங்களோட எப்படி மாஸ்டர்.."

ஏன் கேக்கிறாய் இதை?

"இல்ல மாஸ்டர் என் மனிசியின் நினைப்பு வந்தது சொன்னன் அவள் ஊருக்கு தன் தமக்கையின் மகளின் கலியாண வீட்டுக்குப் போயிட்டாள் அதுதான்.."

"இப்ப என்ன அதுக்கு நான பரமசிவத்தின் பேச்சை முறித்த போது அவனே சொன்னான்.

"மாஸ்டர் உங்களுக்கென்ன என் மனிசியின் அருமை தெரியும்?

"அப்படி என்ன"?

"மாஸ்டர் உங்கட மனிசி உங்களை சவுக்காரம் தடவி... குளிப்பாட்டி விடுகிறவா"

நான் பதில் சொல்லாமல் சிரித்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செய்திருக்க மாட்டா மாஸ்டர் ஆறு பிள்ளைகளுக்கு நான் தகப்பன். நாற்பத்து மூன்று வயசாகப் போகுது எனக்கு... இப்பவும் மாஸ்டர் அவதான் கிணத்தில தண்ணி அள்ளி தந்து என்னை குளிப்பாட்டி விடுகிறவ..."

"என்ன யோசிக்கிறீங்க..." சவரி என்னை தட்டினான்.

"இல்ல பரமசிவம் சொன்னதையும் நீ அவனைப்பற்றி சொல்லுவதையும் நினைத்துப் பார்த்தேன்.

"அப்படி அவன் என்ன சொன்னான்" சவரி பரமசிவத்தின் மனைவி இப்பவும் அவனை குளிப்பாட்டி விடுகிறவவாம் கிணத்தில தண்ணி அள்ளி அவதான் ஊத்திருவவாம் என்ன பெருமையாகச் சொல்றான் பார் எங்கட மனிசிமாரும் இப்படியோ"

சவரி வாய் விட்டுச் சிரித்தான் "உங்களுக்கு வேற வேலை இல்ல அவன் சொல்லுறதை கேட்டு விட்டு வாறிங்க..."

"ஏன் அவன் என்ன பொய்யா சொல்றான்?"

நான் அப்பாவித்தனமாக கேட்டபோது

சவரி சொன்னான் "மாஸ்டர் இவன் நாளாந்த குடி மன்னன் உழைக்கிற முழுகாசையும் இஞ்ச பக்கத்தில கொண்டு வந்து தண்ணியாக வயிற்றுக்குள்ள ஊத்திப் போடுவான். மனைவி, மக்கள் பிறகென்ன பட்டினிதான் இவன் மனைவி இவனை தேடி வந்து அப்பப்ப காசை பறிச்சால் தான் வீட்டில அவர்களுக்குக் கால் வயிறாவது நிரம்பும்"

"அப்ப..." நான் காதுகளை கூர்மைப்படுத்தி சவரியை தட்டிக் கொடுத்தேன்.

"இவன் வீட்ட போவது அபூர்வம் குடிச்சா நடுத்தெருதான் அவன் வீடு மூணுமாதத்துக்கு ஒருக்கா இவன்ர கோலத்த பார்க்க சகிக்காம மனைவி மக்கள் தான் இழுத்துக் கொண்டு வீட்டுக்கு போவார்கள்

நல்ல வெறி முறிய கிணத்தடி தொட்டிக்குள்ள இவனைப் போட்டு தண்ணியை வார்: வாரென வார்த்து ஊத்தை போக சன்லைற்றால தேய்தேயென்று தேய்த்து குளிக்க வைப்பினம் இதத்தான் மாஸ்டர் பெருமையாக உங்களிட்ட இவன் அலட்டி இருக்கிறான் மனிசி இவரை இந்த பெரிய மனிசரை குளிப்பாட்டுறாவாம்.

சவரி வயிறு குலுங்க சிரித்தான்

எனக்கு சிரிப்பு வருமா?

எரிச்சலோடு பரமசிவத்தை நினைத்தேன். அவன் என்னைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தான்.

*(வீரகேசரி வாரவெளியீடு : 01.12.1994)*

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்க இருவரும்



'என்ன...?' கடைப்படி ஏறிய மணியனையும், சுனிலையும் வரவேற்றார் கடை முதலாளி.

சுனிலும், மணியனும் ஆளுக்காள் பார்த்துக் கொண்டார்கள். தங்களுக்குள் புரியும் படியான சிரிப்பையும் வரவழைத்துக் கொண்டார்கள்.

'முதலாளி... இன்றைக்கு வருஷப்பிறப்பு சித்திரை புத்தாண்டு. அதுதான் உங்களட்ட கைவிஷேசம் வாங்க... மணியன் தன் மேவி இழுத்த தலைமுடியினை மீண்டும் தடவிக் கொண்டு வார்த்தைகளை இழுத்துச் சொன்னான்.

'அப்படியா?' முதலாளி தன் வியாபாரத்தில் கவனமாக இருந்தார். வருஷத்துக்கு கடை மூட வேண்டும்.

ஆனால் கைவிஷேஷ வியாபாரம் செய்ய வேண்டும் என்பதால் அரைக் கதவினை திறந்திருந்தார்.

'என்னடாப்பா...

இன்றைக்கு வருச நாள்! கொழும்பு லொறிகள் ஏதும் வராதா?' முதலாளியின் நண்பர் இராசலிங்கம் தன் தடித்த உருவத்தை நிமிர்த்திப் போட்டிருந்த நீள காற்சட்டையினை இழுத்துக் கொண்டே சொன்னார்.

'இல்ல... இன்டைக்கும் இல்ல... இன்னும் நாலஞ்சு நாளுக்கும் வராது போல... சிங்கள ஆக்கள் நாள் பார்த்து தான் தொழிலை ஆரம்பிப்பினம் எங்களை போல இல்ல...'

'அப்ப... உங்களுக்கும்... தொழில் மட்டம்தான்' இராசலிங்கம் சொல்லி முடிக்க முதல் ... சுனில் முந்திக் கொண்டு

"ஆமா ஐயா... லொறி வந்தா தான் நாங்க சாமான் ஏற்றி இறக்கினாத்தான் எங்கட பிழைப்பு வரும்...' என்றான்.

சாமான்கள் வாங்க வந்த இருவர் கடையினை விட்டு வெளியேறிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி... காசு மேசைக்கு அருகாமையில் மணியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தான்.

முதலாளி மேசைக்கு கீழே குனிந்து 'கார்போட்' பெட்டிக்குள் இருந்து ஒரு பார்சலை எடுத்தார். 'இந்தா' அதை மணியனிடம் நீட்டினார்.

கண்களில் பெரும் மகிழ்வு பொங்க இரு கரங்களாலும் பெற்றுக் கொண்ட மணியன் நன்றி உணர்வோடு முதலாளியைப் பார்த்து தலையினை குனிந்து பின் வாங்கி பின்னால் நின்ற சுனிலுக்கு இடம் விட்டான்.

முதலாளி லாச்சியினைத் திறந்தார். பத்து ரூபாய் நோட்டொன்றை எடுத்து சுனிலுக்கு நீட்டினார்.

இரண்டு கைகளாலும் அதை நன்றி உணர்வோடு பெற்றுக் கொண்ட சுனில்: மணியனைப் பார்த்தான்.

மணியன் சுனிலைப் பார்த்தான். இதற்கிடையில் ஏதோ பொருட்களை வாங்க கடையில் இருவர் நுழைந்தார்கள்.

முதலாளியின் கவனம் வந்தவர்கள் பக்கம் திரும்பியது.

'மச்சான்... முதலாளி உனக்கு என்ன தந்தவர்...? மணியன் கேட்டான்.

சுனில் பெருமையுடன் கையினை திறந்து காட்டினான். பத்து ரூபாய்.

மணியன் தனக்கு கிடைத்த பார்சலை திறந்து பார்த்தான்

மட்டக்களப்பு சாரன் நூற்றி ஐம்பது ரூபாய் பெறும்.

'படார்... பட்... பட்...' தெருவில் சிறு பையன்கள் வெடிகளை வெடிக்க வைத்து தெருவில் போகும் ஆடுகளை, மாடுகளை மட்டுமல்ல மனிதர்களை கூட விரட்டிக் கெண்டிருந்தார்கள்.

"முதலாளி..? மணியன் முன்னுக்கு வந்தான்.

'என்ன... சந்தோஷம் தானே...

'இல்ல...

"ஏன்..."

"நீங்க செய்தது பிழை முதலாளி எனக்கு மட்டும் சாரனை தந்து விட்டு சுனிலுக்கு பத்து ரூபாய் கொடுத்து அனுப்புவது..."

"நீ... நிரந்தர நாட்டாமை... அதுதான்...

'முதலாளி... நாங்கள் இருவரும் தொழிலாளர்கள். எங்களுக்குள் நிரந்தரம் - நிரந்தரம் இல்லாதது இல்ல... எனக்கு கிடைக்கும் கூலி அவனுக்கு கிடைக்க வேணும். அதே போல அவனுக்கு கிடைக்கும் சலுகை எனக்கும் கிடைக்க வேணும். எங்கள் இரண்டு பேருக்கும் புது வருஷம் சித்திரை வருடப்பிறப்பு ஆனதால... நீங்களும் சுனிலுக்கும் சாரன் கொடுப்பது தான் நியாயம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'டேய்... நாங்கள் சந்தோஷத்துக்கு எதையும் எப்படியும் யாருக்கும் கொடுப்பம். இது எங்கள் விருப்பம். உங்கள் விருப்பத்துக்கு எப்படி நாங்கள் தருவது... இராசலிங்கம் இவர்கள் பிரச்சனைக்குள் நுழைந்தார்.

முதலாளி தலையினை இராசலிங்கத்தின் பேச்சுக்கு சார்பாக அசைத்தார்.

'என்ன செல்லுறீங்க முதலாளி... பாவம் அவனுக்கும் சாரன் ஒன்ற கொடுங்க...' மனம் பதை பதைக்க மணியன் கேட்டான்.

'அப்படி உன்ர சட்டத்துக்கு கொடுக்க முடியாது. என்ன வேண்டுறது பிச்சை அதிலும் திமிர்... பாரன்.. இவனை...' இராசலிங்கம் முன்னுக்கு வந்தார்.

முதலாளியின் கொடூர பார்வையும் இராசலிங்கத்தின் சொண்டு சொறியும் சொற்களும் நாட்டாமை மணியனை அடித்து விழுத்தின.

பெருநாளுக்கு வந்த என்னை... எங்களை பிச்சைக்காரர்கள் ஆக்கிப் போட்டிங்களே! நாங்கள் உங்களிடம் உழைத்து சாப்பிடுகிறவங்க. பிச்சை எடுக்கிறவங்க இல்ல...'

'என்னடா கணக்க கதைகள் கதைத்துக் கொண்டு...' முதலாளி துள்ளி எழும்பினார்.

'டேய் சுனில் எடுடா அந்த பத்து ரூபாயை... இந்தாங்க உங்கட பிச்சை சாரனும் பத்து ரூபாய் காசும்...'

மணியன் காசு மேசையில் சாரத்தையும் பத்து ரூபாவையும் போட்டான்.

'முதலாளி நாங்க வருஷக்காரர்கள். பிச்சைக்காரர்கள் இல்ல

கடை வாசலை நோக்கி மணியனும் சுனிலும் நடக்கத் தொடங்கினார்கள்.

'படார்... பட்... பட்... புதுவருச வெடிச்சத்தங்கள் முதலாளியையும் இராசலிங்கத்தையும் தட்டியா கொடுக்கின்றன.?

*(வீரகேசரி 01.04.1993)*

*************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமைத்து மருமகள்



ஆனந்தராசா ஆபிசால் வரும் போது நல்ல காலம் அவனின் மனைவி வீட்டில் இல்லை. அவன் மனைவி சியாமளா பள்ளிக்கூடத்தால் இன்னும் வரவில்லை. இந்த சந்தர்ப்பத்தைத்தான் இத்தனை நாட்களாக ஆனந்தராசா எதிர்பார்த்திருந்தான்.

பூனை போல வீட்டுக்குள் வந்தவன் பின் விறாந்தைப் பக்கம் எட்டிப் பார்த்தான். அவனின் தாய் முந்தானைச் சேலையை வெறும் நிலத்தில் விரித்து விட்டு படுத்திருந்தாள்.

அவளின் அருகில் அடுத்த ஆண்டு பள்ளிக்கூட வாசலை எட்டிப் பார்க்க இருக்கும் அவனின் ஒரே புதல்வி பிரியா தூங்கிக் கொண்டிருந்தாள்.

"அம்மா... என்ன... நித்திரையோ... பிரியா... இன்னும் அம்மா வரவில்லையா...? தன் தாயை எழுப்பும் அதே சாட்டில் தன் மனைவி இன்னும் வரவில்லை என்பதை உறுதிப்படுத்த கொஞ்சம் சத்தம் போட்டே சொன்னான்.

கண்களை விழித்த அவனின் தாய் எழுந்து உட்கார்ந்து கொண்டாள், ஆனந்தராசாவை சுட்டெரித்து விடுபவள் போல ஒரு பார்வை பார்த்தாள்.

அவனுக்கு அம்மாவின் அர்த்தம் என்ன புரியாமலா இருக்கும்? காலையில் மாமிக்கும் மருமகளுக்கும் நடந்த சண்டை... அதன் தாக்கங்கள்... என்ன அத்தனை சுலபத்தில் முடிந்துவிடக் கூடியனவா?

"அம்மா.. உன்ர மருமகள் ஒரு ஆசிரியை. படிச்சவள்... நீ பேசுறதை கொஞ்சம் கவனித்துப் பேசு... சியாமளாவின் முன்னுக்கு வைத்து இதைச் சொல்லக் கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்றன்..." ஆனந்தராசா முடிக்க முதல்... அவனின்... தாய்...

ஒரு பத்ரகாளி உருவில்தான் அவனின் கண்களுக்கு தெரியத் தொடங்கினாள். அம்மாவின் எரியீட்டிகளை அவனால் தடுக்க முடியவில்லை. கேடயம் இழந்த அபிமன்யு போல வெளியேற வழியில்லாது திக்குமுக்காடினான்.

நல்ல காலம்... அந்த நேரத்தில்தான்.. அவன் மனைவி சியாமளாவும் வர வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாமி... என்னை ஏசுங்கள்... அடியுங்கள்... அவரை ஏச வேண்டாம்..." சியாமளா கணவனின் கேடயமாக முன்னுக்கு வந்தாள். பாடசாலையில் இருந்து கொண்டு வந்த புத்தகங்கள், பேப்பர்களை மேசை மீது வைத்தாள்.

இந்த சந்தடியில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த பிரியாவும் எழுந்து கொண்டாள். அவளுக்கு ஏதும் புரியவில்லை.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திய ஆனந்தராசா மெல்ல சண்டையில் இருந்து நழுவப் பார்த்தான். அவன் வாயினை திறக்கவே இல்லை.

அவனின் தாய்... வசன மழை பொழியத் தொடங்கினாள்.

"அவர் என்னடா என்றால் நீ படிச்சனியாம். ஏன்ரீ... நீ படிச்சனி என்றால் நான் படியாதவள் என்ற கருத்தோ... எடியே நானும் படிச்ச நாண்டி..." ஆனந்தராசாவுக்கு காதைப் போத்த வேண்டும் போல இருந்தது.

"ஏன் தான் அம்மா இப்படி இருக்கிறாளோ... கொஞ்சம் பிழை... சரி... இருக்கும் அனுசரித்து நடந்தால் என்ன... இந்த வயோதிப காலத்தில்... சிவனே என்று இருக்காமல்..." ஆனந்தராசா மனத்துக்குள் நினைத்துப் பார்த்தான்.

"சரி... சியாமளா ஆவது கொஞ்சம் அம்மாவை அனுசரித்து நடந்தால் என்ன.. வயது போனவர்களின் அறளைக் கதைகளுக்கு காது கொடுக்காமல் விட்டுக் கொடுத்தால் என்ன..." பதிலையும் அவனே தனக்குள் சொல்லிப் பார்த்தான். அப்போது..

"மாமி..." சியாமளாவின் பலத்த குரல் அவனை திடுக்கிடவே வைத்து விட்டது. இரண்டு நிமிட மௌன நாடகத்தின் பின்...

சியாமளாவே பேசத் தொடங்கினாள்.

"மாமி... என்னை நல்லா பேசுங்கள்... ஏசுங்கள்... வேணும் என்றால் அடியுங்கள்... அதைத்தான் நான் விரும்புறன்... நான் பிழையான எந்த காரியங்களும் செய்யவில்லை..." ஒரு நிமிட மௌனத்தின் பின் சியாமளாவே சொன்னாள்...

"மாமி... உங்களோட வாய்க்கு வாய் கதைத்து சண்டை பிடிக்கிறதை நான் விரும்பித்தான் செய்யிறன்.."

ஆனந்தராசா மனைவியின் வார்த்தைகளை மிக உன்னிப்பாகவே கேட்டான். ஆனால் அவனின் தாய்க்கு சியாமளாவின் வார்த்தைகள் அதிர்ச்சியாகவே இருந்தது.

"அப்ப ஏண்டி... எனக்கு என்ன விசரோ..." ஆனந்தராசாவின் அம்மாவே அதிர்ச்சியின் சாயலில் கேட்டாள்.

"மாமி... நான் நாலு சகோதரங்களோட கூடிப் பிறந்தனான். என்னை யாரும் ஏசவோ... அடிக்கவோ இல்லை... ஏச்சு... பேச்சு... சண்டை... அடி... உதை... இதுகள நான் அறியாமல் வளர்ந்திட்டன். எனக்கு வந்தவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுகள என்னில் காட்டலை...

ஆனால் நீங்கள்... மாமி... இதுகள... நான் அனுபவிக்க விரும்புகிறன்... அதனாலதான்... நான் உங்களோட... ஏட்டிக்கு போட்டியாய் பேசி... அந்த ஏச்சு... பேச்சு... சண்டை... அடி... உதை... இதுகள..."

சியாமளா முடிக்கவில்லை... ஆனந்தராசாவின் தாய் குளறியே விட்டாள்.

"எடி... என்னை மன்னித்துப் போடடி... இந்த கிழட்டு வாய்...

ஆனந்தராசாவுக்கு அம்மாவா இப்படி சொல்கிறாள் என்பது... அதிசயமாகத்தான் இருந்தது. மருமகளை கட்டித் தழுவி அணைத்து கண்ணீர் விட்டு... அந்த காட்சி...

அந்த காட்சிக்காகத்தானே ஆனந்தராசா ஏங்கிக் கொண்டிருந்தான்.

ஆனால்...

சியாமளாவின் மனம்... தன் சக ஆசிரியை சொல்லித் தந்த தந்திரம் இவ்வளவு கெதியாக வேலை செய்து விட்டதை நினைத்து... நினைத்து... அழுவதா... சிரிப்பதா... என்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்ததை யார் அறிவர்?

**சிந்தாமணி 18.02.1990 ஞாயிறு இதழ்**

*************

# சமாதானம்

வங்கியொன்றின் முன்பாக என் சைக்கிளை நிறுத்தினேன்.

இதில விடக்கூடாது எடு... எடு... பொலிஸ்காரன் ஒருவன் ஓடி வந்தான்.

நான் என் கண்களை அகல விரித்தேன்.

'இதில இருபத்தைந்து சைக்கிளுக்கு மேல் நிற்குது. ஏன் விட முடியாது?' நான் அவனது மொழியில் பதில் சொன்னேன். என்னையறியாமல் என் முகத்தில் புன்னகை. என்னைக் கோபமாக பார்த்த அவன்,

'எல்லாவற்றையும் குப்பை லொறியில் ஏற்றிக்கொட்டினால் தான் சரி வரும்...' என்றான்.



என் முகத்தில் மீண்டும் என்னையறியாமல் அதே புன்னகை. மிகவும் ஆறுதலாகவே அவனுக்கு பதில் சொன்னேன்.

'இத வங்கி முகாமையாளரிடம் சொல்லுங்க...'

நான் வங்கிக்குள் நடந்தேன்.

என் பின்னால் அவன் வருவது தெரிந்தது.

நான் என் பாட்டில் வங்கி அலுவல்களை கவனிக்க நடந்து கொண்டிருந்தேன்.

**(வெள்ளி நாதம் 14.08.2003)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவும் ஒரு சோதனை

அந்தச் சோதனைச் சாவடியில் நான் சென்ற வாகனம் நிறுத்தப் பட்டது.

'ஏன்...' வாகன கண்ணாடி யன்னலைத் திறந்து தலையாட்டிக் கேட்டேன்

'உங்கட வாகனத்தைச் சோதனை செய்ய வேண்டும்..."


'சமாதானப் பேச்சு அடிபட தொடங்கிய போது மூடப்பட்ட இந்த சோதனைச் சாவடி இன்றுதான் புதிதாக...' வாகனத்துக்குள் கருத்துப்பரிமாறல்கள் எழுந்து கொணடிருந்தன.

வாகன காப்புறுதி: இந்த ஆண்டு வாகன அனுமதிப் பத்திரம், எனது வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு சோதனைச் சாவடிக்குள் நான் நுழைந்தேன்.

'மச்சான்... எப்படி சுகமா... வானில வந்தது... மச்சான்... நீங்க போங்க...' சாவடிக்குள் எனக்கு தெரிந்த முகமொன்று பேசியது.

'இல்ல மச்சான் உங்கட கடமையை நீங்க செய்ய வேணும்...'

எனது பெயர்: முகவரி: வாகனப் பதிவுகள், அடையாள அட்டை இலக்கம் எனது கையொப்பம்....



சாவடிக்கு வெளியே வந்தேன். வாகனத்தில் உள்ளவர்களை இறக்கி மூன்று பொலிஸ்காரர்கள் அடையாள அட்டைகளைப் பார்த்து... வாகனத்தில் ஏறி இறங்கி சுற்றி வந்து குனிந்து பார்த்து...

நான் அமைதியாக நின்றேன்.

'மச்சான் என்ன இது...' சோதனை செய்த பொலிஸ்காரர்களுக்கு சாவடிக்குள் இருந்து வெளியே வந்த என்னைத் தெரிந்த பொலிஸ்காரன் என்னென்னமோ சொன்னான் ஆத்திரத்தோடு.

வாகனம் செல்ல அனுமதிக்கப்பட்டது.

எனக்கு தெரிந்த பொலிஸ்காரன், 'மச்சான்... சொறி...' என் றைவிங்சீற் கண்ணாடிப் பக்கம் வந்து நின்றான்.

என்னுள் புன்னகை.

'என்ன மச்சான்..?"

'இல்ல... பத்து நிமிடம் வாகனம் சோதிக்கப்பட்டது. இந்த நிமிட நேரத்தில் இந்த இடத்தை நூறு வாகனங்களாவது கடந்திருக்கும்... இனிமேல் இன்னொரு வாகனத்தைச் சோதிக்கப்போறிள்... நீங்களும் உங்கள் சோதனையும்...' அவனது மொழியில் சொன்னேன்.

என்ன அந்த பொலிஸ்காரன் முகத்திலும் புன்னகையா??

(வெள்ளி நாதம் 21.03.2003)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகரீகம்



வீட்டுக்கு வந்த விருந்தினர்களை வெறும் மேலுடன் வர வேற்றேன்.

அவர்களுடன் அதே கோலத்தில் இருந்து பேசவும் முற்பட்டேன்

என் மனைவி என்னை ஆத்திரமாகப் பார்த்தாள்.

எனக்கு புரியவில்லை.

என்னோடு உரசி நின்று - "உங்களுக்கு வெட்கமாக இல்லையா? வந்தவர்கள் கொஞ்சம் நாகரிகமான ஆக்கள். உங்கள் பட்டிக்காட்டுத் தனத்தை காட்டுகிறீர்களே" என்று குசு குசுத்தாள்.

எனக்கும் வெட்கம் வந்தது?

என்றாலும் மனைவிக்காக நடிக்க என் மனம் விட்டுக் கொடுப்பதாக இல்லை.

மீண்டும் பார்த்தாள். அவள் கண்களில் புயல் இருந்தது. மெதுவாக நழுவி மேல் சட்டையை போட்டு வந்து என் மனைவியை சந்தோசப் படுத்தினேன்.

பத்து நாட்களின் பின்...

காளி கோவில் திருவிழாவிற்கு வந்திருந்தோம்.

சன நெரிசல் மனைவி என்னைச் சுரண்டினாள்.

"போங்க. சுவாமியை தூக்க போங்க. சேட்டை கழட்டி தாங்க. கழட்டுங்க சேட்டை." நான் மனைவியை பரிதாபமாகப் பார்த்தேன். என் வீட்டுக்கு வந்த இருவருக்காக சேட் போட்டுக் கொண்டு பேசுங்கள் என்றவள் இப்போது இந்த ஆயிரமாயிரம் சனக் கூட்டத்துக்க சேட்டை கழட்டி சுவாமியை தூக்கச் சொல்கிறாளே...

வீட்டுக்குள் சேட் போடாவிட்டால் நாகரிகமில்லை. இங்கு கோவிலுக்கு வந்தால் சேட் கழட்டி வெறும் மேலுடன் நிற்பதுதான் நாகரீகமோ?.

பார்க்க பாவமாக நின்ற மனைவியுடன் பரிதாப வார்த்தைகளுக்காகச் சேட்டை கழட்டினேன்.

மனைவி என்னைப் பார்த்தாள்

அவள் பார்வை...

பக்திக்கு ஏது... நாகரீகம் என்பது போல... என்னை...

(சிவநெறி: 2003)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை

'ஜம்பு எவ்வளவுக்கு தருவீங்க' - ஏழு எட்டு வயது இருக்கும். பாடசாலை கோலத்துடன் இரண்டு இளசுகள்.


'எவ்வளவுக்கு வேணும்' கடைக்காரன் அவர்களுக்கு குனிந்தே சொன்னான்.

'இருபது ரூபாய்க்கு தருவீர்களா?'

'ஓம் தரலாம்'

'பதினைந்து ரூபாய்க்கு....?

'ஓம்.................'



'பத்து ரூபாய்க்கு'

'தரலாம் தரலாம்' கடைக்காரன் வாயில் சினம்.

'ஐந்து ரூபாய்க்கு தருவீங்களா?'

'தரலாம்....? கடைக்காரன் வாயில் வந்த சினத்தை அடக்கிக் கொண்டே சொன்னான்'

'இரண்டு ரூபாய்க்கு தருவிங்களா?'

கடைக்காரன் அந்த இளசுகளை மேலும் கீழும் பார்த்தான் சினம் சிரிப்பாக அவனுக்கு வந்தது.

'தாரேனே...? என்றான்

'அப்ப சும்மா தருவீங்களா...? சிரிக்காமல் இந்த இளசுகள் இரண்டும் தலையினை நிமிர்த்தி கேட்ட போது......

அவர்களை ஆச்சரியத்தோடு கடைக்காரன் பார்த்தது..... அடக்க முடியாமல் சிரித்தது.......

ஜம்பின் விலை அதுதான் என்பதுவும் சரியாக இருக்குமோ? வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த நான் மீண்டும் அந்த ஜம்பு கூடையினைப் பார்த்தேன்.

**- மானுடம்: 1999 -**

**(கற்பனையா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமிழிகள் உடைகின்ற வேகம்

குறுக்கான பாதை - குச்சுவீதி - கடைத்தெரு... சனக் கும்பலின் மத்தியில் தான்... அந்த றகீம் கடை ஸ்ரூலில் அமர்ந்திருக்கின்றேன். என்னுடைய கடையல்ல, நண்பன் காதரின் கடை. அவன் வாப்பாவின் நினைவில்தான் றகீம் கடையென



இன்னும் இது அழைக்கப்பட்டு வருகின்றது சகலராலும்.

வேலையில்லா நானும் இங்கு காலையே வந்து விடுவேன்... கடையில் வேலை செய்யவல்ல... நேரத்தைப் போக்குவதற்கு... அத்துடன் அவளைக் காணுவதற்குத்தான்!

எதிர்க்கடைகளின் வரிசையில், என் கண் பார்வையிலே அண்மைக் கடையொன்றில்தான் அவளைச் சில நாட்களாகக் கண்டு வருகின்றேன். "அவன் அக்கடைக்கார முதலாளியின் மகள்..." என்னை அறிந்த நண்பன் கரிதரன் முன் எச்சரிக்கையான வார்த்தையிது. அவளது அழகினை இரசித்த எனக்கு - அவளது பணத்தையும், அந்தஸ்தினையும் நினைவூட்டி எனக்குத் தகுதி உண்டா? எனப் புதிர் போடுவது போல இருந்தது அவனின் இந்த எச்சரிக்கை. அவள் அழகுக்குத்தான் இவ்வெச்சரிக்கை எம்மாத்திரம்....

நான் என்னை அழகனாக நினைத்துக் கொள்கிறேன்... மெல்ல அவள் கடையினையே நோக்குகின்றேன். அவள் இன்னும் வரவில்லை... வெயில் தாக்கதிற்கு மறைவாகக் கட்டிய சாக்கு - அவள் நின்று என்னை நோக்குமிடத்தை மறைத்துக் கொண்டிருந்தது. பத்துமணி மட்டும் தான் அந்தச் சாக்கு. பின்னால்....! மணியினை மட்டும் பார்த்துக் கொண்டேன்.

"தம்பி... நாங்க உங்க வாப்பாவோட பிசினஸ் செய்தம். இப்ப உங்களோட எங்க வாப்பா கடனை நாங்க அடைச்சம். அதேபோலத்தான் எங்க பரம்பரை உங்க பரம்பரையோட கொடுக்கல் வாங்கலில் இருக்கும்..." ஒரு வியாபாரி நண்பன் காதருக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக் கொண்டிருந்தார். "வாப்பா தொழிலை மகன் செய்ய வேணும் என்பது அவரு எண்ணம்... காதர் என்னைவிட படிச்சவன். வேலை ஏதும் வந்ததும் இங்க உக்காருவானா? நான் பொழுது போக்குக்காக இங்க உக்காருவதைப் போலத்தான் அவனும் வியாபாரம் செய்யிறான்" ஆமாம் போட்ட காதரைப் பார்க்க எனக்குச் சிரிப்புத்தான் வந்தது...

இரு நிமிடங்களாக என்னை அவன் பார்த்தபடிதான் நிற்கிறான்... காதரின் குறிப்பு கண்டு பார்வையினை ஓட்டினேன் அவள் மேல். இருவரது விழிகளும் பல செய்திகளைச் சில நிமிடங்களில் பேசி முடித்தன. பெண்மையின் நாண விழிகள் தொடர்பினைத் துண்டிக்க மறுக்காத நிலையில்கூட ஏதோ பயந்த நாணத்தால் துண்டித்தன.

ஆண்மையின் விழிகள் அவளை வெறித்தபடியே இருந்தன... பெண்மையின் பதறுதல் அதற்கு விளங்கியதாக இருந்தும் - அது மட்டும் ஏனோ தன் பார்வையில் இருந்து பிசகவேயில்லை. அவள் புதினப் பத்திரிகை ஒன்றினால் தன் முகத்தினை மறைத்தபடி இருந்தாள்.

திரையாக இருந்த சாக்குகூட இப்போது இல்லை. அவளது முழு உருவத்தையும் இனித்தான் காணமுடியும். அவளது கால்களை நோக்குகின்றேன். இப்போது அவள் என்னையே பார்த்திருப்பாள்... நிச்சயமாகச் சொல்வேன். சட்டென்று என் பார்வையிலே மேலுயர்த்த அவள் என்னை நோக்கியபடியே

இதோ... சைட் போஸ் கொடுக்கிறாள். எனக்கு... நேராக இரசிக்காது இந்த நிலையில் இரசிக்கட்டுமே என்பதற்குத்தான் இப்படி நிற்கிறாளோ! யாரோடோ கதைப்பதுபோன்ற சாட்டினில் அவளது குரலும் என் காதிலே வந்து மோதுகின்றது. அவள் எனக்காகப் பேசுவதாகவே எனக்குப் படுகின்றது.

உண்மையில் இந்த நிலைதான என் கண்களுக்கு விருந்தாகின்றது. சிலையாக நின்று என்னைச் சிற்பியாக மாறும்படி அவள் பணிக்கின்றாள். சிற்பியின் நுணுக்கமான பார்வையின் சாயலே இப்போது எனது விழிகளுக்கும் ஏற்படுகின்றது. அங்கப் பொலிவுகளை விட்டுவிடாது தனது கல்லில் பொழியவே விரும்புகின்றான் சிற்பி. அவனது செயல் எனக்கு ஒன்றானாலும் குறிக்கோள் மட்டும்தான் வேறு. சிற்பி சிலையாக நிலையாக்கி விடுவான். நானோ... மனதினிலே ஒவ்வோர் அங்க அமைப்பையும் பாகமாகப் பதித்து நினைவில் இருந்த முயலுகின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்குமா? நிலைக்காதா? எனக்கே புரியாத ஒன்று...

அவளை மனதில் இருத்துவது இன்பம். இந்த இன்பத்தின் இயல்பினைப் பொறுத்தே நானும்... சிற்பி வேறு... நான் வேறு... ஓவியக் கலைஞர் வரிசையில்கூட ஒட்ட முயலுகின்றேன். முடியவேயில்லை. சிற்பி... தான் கண்டதைப் பல்லாண்டு நினைவுறுத்த முயலுகின்றான். ஓவியன் பல மாதங்கள் ஆவது இருக்கட்டுமே என்கின்றான். ஆனால் நானோ...

அவள் இடைக்கிடையே என்னைப் பார்க்கவும் தவறவில்லை. தன்னையே நோக்குகின்றேனா நான் என்பது அவளது சந்தேகம் போல... எனகுப் பொழுது இப்போது இன்பமாகவே இருக்கின்றது. சட்டென்று உள்ளே போகின்றாள். உடனடியாக வருகின்றாள். குட்டிபோட்ட பூனைபோல அங்கும் இங்கும் நடக்கின்றாள். தன்னை நடிகையாகவும் என்னை டைரக்டர் ஆகவும் ஆக்க முயலுகின்றாள் போலும்!

தனது நடையினையும் அதன் அழகினையும் எனக்குக் காட்டி ஊன்றி என்னைப் பார்த்துத் தனது சுட்டு விரலினால் தனது இதழ்களில் தேய்த்து எனக்கு எதையோ உணர்த்த முயலுகின்றாள்.

புரியாத எனக்கப் புரியும் படியாகத் தனது கரங்களில் ஒன்றினைத் திகதி பார்ப்பது போன்ற சாட்டினில் தூக்கி... என்னையே திகைப்படையச் செய்கிறாள்... அவளது இந்தத் தோற்றங்கூட அழகாகத்தான் இருக்கிறது.

கையில் கமராதான் இல்லாத குறை... ஏதோ நானும் சடுக்காக அவளை நெருங்குகின்ற பிரமையில் இனிப்புப் பேர்தத்ல்களைச் சாண்டுகின்றேன். இந்தத் தாக்கம் அவளுக்கு ஏதோ செய்தது. அவள் நாணங் கொண்டவள் . ஆனால் உணர்வுகள் பரப்பப்படுகின்றன... செயல்களால் உந்தப்பட்ட நாமிருவரும் அதற்கு உடையவர்கள் ஆகின்றோம்..

"தொழுகைக்குப் போக நேரமாச்சு... வெள்ளிக்கிழமை... நண்பன் காதர் எனக்குச் சொல்கின்றான்.

நானும் பதிலுக்குத் தலையினை அவளைப் பார்த்தே ஆட்டுகின்றேன். அவள் விடைபெறுவது போலவே கரங்களினைத் தூக்கி ஏதோ உணர்த்துகிறான். 'அவள்... உள்ளே... போயேவிட்டாள்.. இனி நாளைதான் எனக்காக வருவாள்... இன்பமான பொழுதினை இழந்து சூனியமான வேலையில்லாப் பொழுதினை நோக்குகின்றேன்... சாக்கடையில் ஊறிய குமிழிகளும் உடைகின்றன! என் இன்பக் குமிழிகளும் உடைகின்றன!

*(தினகரன் வாரமஞ்சரி - 1974)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு தடவை

'அம்மா... இந்தாங்க. இதை நீங்க எங்கட்ட இருந்து வேண்டவேணும். அப்பதான் உங்கட்ட இருந்து நம்பிக்கை வரும். வேண்டலை என்றா... நீங்க கோட்டில வந்து எங்களுக்காக சாட்சி சொல்ல மாட்டீங்க..'

இருந்து புதினம் பார்த்துக் கொண்டிருந்த என்ர மனிசனை வேனால மோதிக் கொன்றது இல்லாம... கோட்டில ஏறி சாட்சியும் சொல்லி இவவின்ர புருசனை நான் காப்பாற்றவும் வேணும். அதுக்கு



எனக்கு அழுவதா சிரிப்பதா என்றே புரியவில்லை. மலையான ஆம்பிளையை அநியாயமாகப் பறிகொடுத்து மூன்று மாதமும் ஆகவில்லை. சும்மா கடைக்குந்தில

சமமாய் காசு. இந்தக் காசை நான் வேண்டாட்டி என்னில நம்பிக்கையில்லயாம். நான் கோட்டில மாறி விடுவேனோ என்ற பயம்..பயமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்லாம்? எத்தனை தடவை 'காசு வேணாம். வேணுமென்றோ நடந்தது! நான் எதிராக ஏதும் சொல்ல மாட்டன்' என்று பத்து தடவைகளுக்கும் மேலாய் சொல்லியும்... சொல்லியும்... இவர்கள்!!!

'அம்மா சத்தியமாய் இனி குடிக்கமாட்டன்.. இந்தா இந்த கௌரி ஆச்சியின்ர காப்பு மேல சத்தியம்... என்னக் காப்பாற்றுங்க... உங்களில தான் எல்லாம் இருக்கு. தீபாவளிக்கு அடுத்த நாள் கோடு வழக்கு...'

ஒன்பது நாட்கள் இவர்கள் அலைந்து. அலைந்து... இன்று இவர்களுக்குச் சாதகமான பதிலைச் சொன்னால் மீண்டும்... மீண்டும்... இவர்கள்.

நடுங்கும் கரத்துடன் அவர்கள் தந்த பணக்கட்டைப் பெற்றுக் கொண்டேன். பாரம் மனதுக்குள்

'அம்மா... நீங்க தெய்வம். என்ர புருசனைக் காப்பாற்றி விட்டீங்க... என்ர கௌரி காப்பு... அந்த காளி ஆச்சிதான் என்னைக் காப்பாற்றினா... உங்கள நம்புறம் அம்மா... நம்புறம்...' தீபாவளி வெடிச்சன்னங்கள் சிதறின.

என்னை மறந்து சிரிக்கவும் என்னால் முடியவில்லை. அவர்கள் என்னை நம்பி விட்டார்கள். இனி என்னை தெய்வமுமாக ஆக்கியும் விடுவார்கள். நம்பிக்கைத் தெய்வம் என்கையில்.. அப்படித்தான்... அப்படித்தான் எல்லாம் என் முன்னால் நடந்து கொண்டிருந்தது. 'தீபாவளி கொண்டாட்ட' மகிழ்ச்சி அவர்கள் முகத்தில்... முகத்தில்... வியர்வை மகிழ்வுகள். அவர்கள் என்னிடம் விடைபெற்றார்கள். நான்... நான்... 'இஞ்ச பாருங்க ... ஒரு கதை... கோடு முடிஞ்ச அன்று நீங்க ஒருக்கால் இஞ்ச வரவேணும்...' அவர்களை மறித்தேன்.

மீண்டும் அவர்கள் முகத்தில்...

'அப்படி ஒன்றும் இல்லை... காசைத் தந்து என்னை.. நம்பீட்டீங்க... நான் இந்தக் காசை அன்றைக்குத் தந்து இரண்டாம் தடவை உங்களை - என்னை நம்ப வைக்க வேணும். கட்டாயம் வருவீங்க தானே..'

அழமுடியாமல் ஆறுதலாக வார்த்தைகளைக் கொட்டினேன்.

அவர்கள் முகத்தில்... முகத்தில்... இப்போது. இப்போது...

**(தினக்குரல் : 30.10.1997 வியாழன்)**

*************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெக்கிலஸ்

"மிக அழகாக இருக்கின்றதே... மாப்பிள்ளையா இதை உனக்கு வாங்கித் தந்தார்..." மனைவியின் முகத்தைப் பார்த்தான். வதனி தன் முகத்தை நிலத்தில் பதித்துக் கொண்டாள்.



வதனியின் தாய் கேட்டாள். பக்கத்தில் நின்ற ரமேஸ் தன் புது "என்ன வதனி... மாமி கேட்கிறா உண்மையைச் சொல்லன்.." ரமேஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் புது மனைவியை தூண்டினான்.

வதனிக்கு ரமேஸ் கேட்டது அடிமேல் அடி அடிப்பது போலிருந்தது... அன்று காலை ரமேஸ் : வதனியிடம் அந்த நெக்கிலஸ் பற்றி கேட்ட போது 'இது என் சீதன நகைங்க. டடியும் மம்மியும் கொழும்புக்கு போன போது எனக்காக வாங்கி வந்ததுங்க' எனச் சொல்லி இருந்தாள்.

ஆனால்.. இப்போது.. தன் தாயே குட்டை உடைத்த போது தன் பொய் வெளிவந்து விட்டதே என வதனி பதட்டப்பட்டாள்.

அதுவும் முதன் முதலாக கணவனுக்கு சொல்லிய பொய் அரங்கத்துக்கு வந்து தன்னையே யார் என்று இனங் காட்டப் போகின்றதே என வதனி நினைத்துப் பார்க்க... அவளால்... மயக்கமான சூழலிலேயே வதனி நின்றாள்.

"வதனி... மாமி கேட்கிறாங்க... காதில விழவில்லையா? ..." இரண்டாம் முறையும் ரமேஸ் கேட்டுவிட்டான். என்ன பதிலைச் சொல்லலாம் என யோசிக்க வதனியால் முடியவில்லை. பொய்யைச் சொன்னால் மேலும் பொய்கள் சொல்ல வேண்டி வருமே என்ற பயமும், உண்மையைச் சொன்னால் தான் நடுத்தெருவில் தனி மரமாய் நிற்க வேண்டி வருமே என்ற பயமும் அவளை வாட்டி வாட்டி எடுத்தன.

தான் அந்த தனியார் கொம்பனியில் புதிதாகச் சேர்ந்த போது.. அதன் இயக்குநர்களில் ஒருவரான... வதனியால் மேலும் அந்த அசிங்கங்களை நினைக்க முடியவில்லை.

"நான் கெட்டவள். நான் கற்பிழந்தவள். என் பதவியை காப்பாற்றிக் கொள்ள.. ஆடம்பரமான சொகுசு வாழ்வுக்காக... ஏற்பட்ட அந்த சுகத்திற்காக...

'அந்த இயக்குநர் எனக்கு தந்த பரிசுதான் இந்த நெக்கிலஸ்' என எப்படிச் சொல்வது?

'அதுவும் மணம் முடித்த ஐந்தாம் நாளில்...

'வேலைக்கு போ... உழைத்து வா... என என்னை விரட்டு விரட்டு என விரட்டிய டடி... மம்மிக்கு என் அந்தரங்கங்கள்... எப்படி தெரியும்? இதை எல்லாம் எப்படி வாய் கூசாமல் சொல்ல முடியுமா?

வதனி வாயே திறக்கவில்லை. நடப்பது நடக்கட்டும் என மௌனமாக நின்றாள்.

"வதனி நீ எனக்கு சொன்னது பொய். இது உனது சீதனம் என்றாய். உன் அம்மா நான் பரிசாக தந்தது என்கிறா? இதில பெரிய உண்மை ஒன்று மறைஞ்சு இருக்கு..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வதனி சொன்ன பொய்..' அவளின் தாய்க்கு விளங்கியது. அப்படியானால் இந்த அழகான நெக்கிலஸ்... தாய் மூளையைப் போட்டு குழப்பினாள். தன் வாயால் தன் மகளை பெரிய சிக்கலுக்குள் மாட்டி விட்டோமே என்ற பயமும் தொற்றத் தொடங்கியது.

"வதனி... அப்ப... உன் போய் பிரண்ட்ஸ் யாராவது இந்த நெக்கிலசை..." ரமேஸ் நிறுத்தி விட்டு வதனியைப் பார்த்தான்.

தான் இப்படிக் கேட்கும் போது வதனி உண்மையானவள் என்றால் துள்ளிப் பாய்ந்து கத்தி குரல் கொடுப்பாள் என்றே ரமேஸ் எதிர்பார்த்துக் கேட்டான்.

ஆனால் வதனி துள்ளிப் பாயவும் இல்லை.. கத்தி குரல் எழுப்பவும் இல்லை.

அப்படியானால் வதனி...!

ரமேஸ் தன் சந்தேக பார்வையினை வதனியிடம் அள்ளித் தெளித்தான்.

"வதனி... இந்த உண்மை எனக்கு தெரிய வேண்டும்.

அது வரை... நான் உன்னோட..."

"எஎன்ன தம்பி என்ன..." வதனியின் தாய் மாப்பிள்ளை ரமேசிடம் கத்தி குளறினாள்.

வதனி தன் தாயை நிமிர்ந்து பார்த்தாள்.

தாய்க்கு முன்னாள்... தன் புதிய கணவனுக்கு முன்னால்... ஒழிந்திருக்கும் உண்மைகளை சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டதே என நினைத்து...

மள..மள..வென்று தனது அறையினை நோக்கி நடந்தாள். அரை வினாடியில்...

அவள் தன் சூட்கேசோடு வந்து நின்றாள்.

தன் கணவனையும்... தன் தாயையும் பார்த்து புன்னகை பூத்தாள்.

அவளிடம்... முடிவொன்று ஏற்பட்டு விட்டதா?

வதனி.. அந்த வீட்டின் வெளிவாசலை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

அவளால் இனி பொய் சொல்ல முடியாது.

ஒரு உண்மையை மறைக்க... அவளால் இனி பொய் சொல்லவே முடியாது. காரணம்... அம்மி மிதித்து அருந்ததி பார்த்து.. சத்திய வார்த்தைகள்... சே... அவளால்...

உண்மையையும் சொல்ல முடியாது... அதை மறைக்க பொய்களும் சொல்ல முடியாது.

அந்த நெக்கிலஸ்... இன்னும் அவள் கழுத்தில்... இருந்தது. சிரிக்க... சிரிக்க... அவள்.... தெருவில் நடக்கத் தொடங்கினாள்.

தினமுரசு 15.08.1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களுக்கும் திருவிழா

"எம் பி. உத்தியோகம் இப்ப மலிஞ்சு போச்சு. காற்சட்டை போட்டவன் எல்லாம் 'எம்.பி' ஆக ஆசைப்படுகிறான்.



இதுக்கென்று ஒரு தகுதி வேண்டாம்? சரி கதைக்க பேச கெட்டித்தனம் இல்லே... ஊரில நல்ல பேராவது எடுத்திருந்தால்... சே..."

தேவகடாட்சம் தன் பெருத்த உடலை அசைத்துக் கொண்டு சொன்ன போது நாதன் சிரித்தே விட்டான்.

"ஏண்டா சிரிக்கிறாய்...?"

"இல்ல... சும்மா..." நாதன் மளுப்பினான்.

"பாராளுமன்றம் வேண்டாம் என்றும் வந்தவையள் இப்ப எதுக்கு பாராளுமன்றம் போயினம்? சரி... இந்த பாராளுமன்றத்தால எங்கட பிரச்சனைகள் தீரப்போகுதோ? கதிரையில் இருக்க ஆசை... பெஜிரோவில் குடும்பத்தோடு திரிய ஆசை. இவங்கள...?"

"என்ன செய்யப் போறாய்?" நாதன் இடைமறித்தான்.

"இவங்கள... முற்றவெளியில சனத்துக்கு முன்புவிட்டு சுடவேணும்... இவங்களும் மனிசன்களா...?"

"சிலருக்கு வந்திருக்கிற துணிச்சலைப்பார். தங்கடை தகுதி உணராமல் பாராளுமன்றம் போக ஆசைப்பட்டு..." நாதன் சிரித்தான்.

"ஏண்டா சிரிக்கிறாய்..?"

"இல்ல... சும்மா..." நாதன் மளுப்பினான். சிவராசன் இலக்சன் கேட்கிறது அவன் மனைவிக்குப் பிடிக்கவில்லை. அவரோட சண்டை. "நீங்க இலக்சன் கேட்டு வெல்லுவியளோ... யாரோ வெல்ல... அவையள் பாதுகாப்பாக கொழும்பில இருக்க... நீங்க அநியாயமாக சாகப் போறியள்... நானும் என்ர பிள்ளைகளும் அனாதைகளாக தவிக்க வேண்டும்... இந்த இலக்சனில நிக்கிறதை விடுங்க... அப்படி விடாட்டி நான்... உங்களோட வாழ விரும்பவே இல்ல..." என்று சிவராசன் மனைவி சண்டைபோட்டுவிட்டு தாய்வீட்ட போய்விட... இப்ப சிவராசன் இலக்சன் மறந்து மனைவியை சமாதானப்படுத்த போயாக அலைய... அய்யோ நினைக்கவே...

நாதன் சிரித்தான்.

"ஏண்டா சிரிக்கிறாய்...?"

"இல்ல... சும்மா..." நாதன் மளுப்பினான்.

"நாங்களும் 'எம்.பி' க்களாகப் போறம். என்று சிலபேருக்கு ஆசை. தேர்தலில் நின்றால் சரி.. வெல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற நினைவு இல்ல. வரலாறு இந்த ஆண்டில் இந்த தேர்தலில் நின்றார் என்று பலரும் பெருமையாக சொல்ல வேண்டும் என்ற ஆசை.. பலர் தங்களைப் பற்றி பேச வேண்டும்... என்ற வரலாறு படைக்கும் ஆசை. மனச்சாட்சி இல்லாத மடையர்கள்..."

தன் அழகான கண்களை சிமிட்டி, சிமிட்டி அற்புதமான தெய்வ வாக்குகளாக வார்த்தைகளை கொட்டிக் கொண்டிருந்தான் தேவகடாட்சம்.

நாதன் சிரித்தான்.

"ஏண்டா சிரிக்கிறாய்...?"

"இல்ல... சும்மா..." நாதன் சமாளித்தான். அவன் வாயே திறக்கவில்லை.

"ஊர்பேர் தெரியாதவர்கள் தேர்தலில் நிக்கிறாங்க. நாங்க ஆர்... எங்களுக்கும் இந்த மண்ணுக்கும் என்ன தொடர்பு என்ற ஆதங்கமே இல்லே. இன்னார் தேர்தலில் நிக்கிறார் என்ற பேர் இருந்தால் போதும் சரி... இவர்களுக்கு இதுக்கு செலவழிக்க எங்க இருந்து காசு வருகுது? வருசா வருசம் இதுக் கென்றே உழைக்க வைச்சிருப்பினமோ... குறைஞ்சது பத்தாயிரம் வாக்காவது பெறும் தகுதி வேணும். பத்து பேரை தெரியாதவங்க எல்லாருக்கும் இந்த 'எம்.பி' பதவியில ஆசை... சே..."

நாதன் சிரித்தான்.

"ஏண்டா சிரிக்கிறாய்...?"

"இல்ல... சும்மா..." நாதன் சமாளித்தான்.

"நான் என்ன சொன்னாலும் உனக்கு சிரிப்புதான்..." தேவகடாட்சம் தன் மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்தான்.

நாதன் சிரித்துக் கொண்டான். 'நானும் இந்த தேர்தலில் நிக்கிறது... இவனுக்கு தெரியவில்லை போல... தெரிஞ்சால்...'

நாதன் தனக்குள் வொல்லிக் கொண்டான்.

"எங்களை ஆதரியுங்கள். நாங்கள் மண்ணை மட்டுமல்ல, மக்களையும் நேசிக்கிறவர்கள். நாட்டை விட்டு இனியும் ஓடமாட்டோம். மக்களுக்கு கேடயமாக நின்று துச்சமென உயிரும் கொடுப்போம். எங்கள் வாக்குகளை நம்புங்கள்... உங்கள் வாக்குகளை தாருங்கள்... ஆகவே எங்கள் வேட்பாளர்..."

பிரதான வீதியால் வந்த ஒலி பெருக்கி குரல் தேவகடாட்சத்தை நிறுத்தியது

'கத்த தொடங்கிட்டாங்க... இனியும் நிம்மதியாய் உறங்க முடியுமோ...? எப்பதான் இந்த தேர்தல் திருவிழா முடியுமோ...? தேவகடாட்சம் மோட்டார் சைக்கிளை ஓடவிட்டான்.

நாதன் தேவகடாட்சம் போற பாதையைப் பார்த்தான்... அதனுள்... தேவகடாட்சம் சொன்ன வார்த்தைகள் எல்லாம்...

நாதனை...

தேவகடாட்சம் எல்லாம் நகைச்சுவையாகத்தான் சொல்லி விட்டுப் போகிறான். ஆனால்....

நாதன்...

அவன் சிரிக்கவில்லை. சிந்திக்க தொடங்கியா விட்டான்........?

**தினக்குரல் (31.07.1994)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருந்துக்கு வராதவள்



ராணிக்கு அழுகை வரும் போல் இருந்தது.

"எனப்பா அழுகுரீர் சொல்லுமன் அப்பா..." ராணியைப் பத்து தடவைகளுக்கு மேல் குடைந்து விட்டாள் சியாமளா.

ராணி நல்ல அழகானவள். நல்ல உடற்கட்டு ஆடி அசைந்து அவள் நடந்தால் அழகு ரதம் வீதியில் போவது போலிருக்கும். தெருவில் போகிறவர்கள் பலமுறை அவளை கண்களால் அனுபவித்து விட்டே போவார்கள். எத்தனை... எத்தனையோ கண்களினால் அவள் தன் கற்பினை இழந்திருக்கின்றாள்.

அழகை படைத்த இறைவன் அவளுக்கு வறுமை என்ற வாழ்வையும் கொடுத்து விட்டது...

"சொல்லுமன் அப்படி... நெஞ்சுக்குள்ள இருக்கிறதை இறக்கி வையுமன். இந்த வாழ்க்கையில நடக்காதது என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குது? வீட்டுக்கு வீடு வாசற்படி. உம்மோட நான் எவ்வளவு அன்பாய் இருக்கிறன் பாருமன். அதுக்காவது... உம்மைவிட பத்து வயசு மூத்த நான் என்பதற்காகவாவது சொல்லுமன் அப்பா..." சியாமளா ராணியை பல தடவைகள் அன்போடு தடவி ஆறுதல் வார்த்தைகளை தெளித்துக் கொண்டிருந்தாள்.

சியாமளா ராணியைப் போல இன்னும் திருமணமேடை ஏறாதவள்தான். ஆனால் வறுமை என்ற கோரமோ... அழகு என்ற வனப்போ சியாமளாவை எந்த யோசனைகளுக்குள்ளும் உட்படுத்தா விட்டாலும்... சியாமளாவிடம் உள்ள அந்த கர்வம்...!

தன் தகுதிகளை விட கூடிய மாப்பிள்ளையைத் தேடி இருந்ததால் இன்னும் அவள் திருமண மேடையை எட்டிப்பார்க்காதவளாக இருப்பது ராணிக்குத் தெரியும்.

தன்னைத்தடவி ஆறுதல் கூறும் தன் அலுவலகத் தோழி சியாமளாவை நினைத்த போது...

ராணிக்கு எங்கிருந்து தான் அந்த பொல்லாத சிரிப்பும் வந்ததோ!!

ராணியின் அழுகை: விம்மல்... திடீரென வந்த சிரிப்பு... சியாமளாவை சிறிது யோசிக்க வைத்தது.

"உம்மை புரிஞ்சு கொள்ளுறது வலு கஷ்டம்..." சியாமளா தனது யோசனையில் வந்ததைச் சொன்னாள். கொஞ்சம் ஆத்திரமும் அவளிடம் ஒட்டி இருந்தது.

"இஞ்சாரும் சியாமளா அக்கா... நான் அழுததற்கு காரணம் வேறு... சிரித்ததற்கும் காரணம் வேறு..."

"என்ன?" சியாமளா அதிர்ச்சியோடே கேட்டாள்.

"இந்தாங்கோ... உங்களிட்ட செல்வம் இருக்கு. அழகு இருக்கு... இனம் சனம்... வாசல் மனை... எல்லாம் அளவுக்கு மீறி இருக்கு... ஆனால்... என்னை கொஞ்சம் நினைச்சுப் பாருங்கோ... அழகு இருந்தால் மட்டுமல்ல அளவான பணமும் இருக்க வேண்டும். இல்லாட்டி அழகை அள்ளிப் பருகத்தான் ஆண்வர்க்கம் காத்திருக்கும்.."

ராணியின் வார்த்தைகளை மிகவும் அவதானமாக கேட்டுக் கொண்டிருந்தாள் சியாமளா.

ராணியின் வீட்டிலும் யாரும் இல்லை. ராணியின் தாய் சந்தைக்கு மரக்கறி விற்க போய் விட்டாள். சகோதரங்கள் ஒவ்வொன்றாய் தங்கள் வேலைகளுக்கு அக்கா இருக்கிறாள் என்ற துணிவில் போய்விட்டார்கள். ஆகவே அமைதியான அந்த சூழல் இந்த இருவரையும் மனம்விட்டு பேசவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

"சியாமளா அக்கா... நாளைக்கு என்ர பிறந்தநாள். அதற்கு விருந்து கொடுக்க வேண்டும். நான் மாட்டன் என்று வந்திட்டன்... ஏன் இப்படி நடந்து கொண்டீர் என்று கேட்டனீங்கள். தானே?"

"ஓம்... ஓம்..." சியாமளா ராணியின் அழுகைக்கான தன் கேள்விகளை எண்ணிப் பார்த்தாள்.

"ஒபிசில... எல்லாரும் ஒன்றாய் சந்தோஷமாக கேட்டபோது ஒரேயடியாக மாட்டன் என்று நீர் சொன்னது எனக்கு பிடிக்கவில்லை. அத்தோடு நீர் எந்த விருந்திலும் கலந்து கொண்டதும் இல்லை. இதையறிய வேண்டும் என்று நான் வந்தால் நீ... அழுதுகுளறினால்...?"

சியாமளா தன் வார்த்தைகளை இழுத்தாள்.

"சியாமளா அக்கா... இந்தா பாருங்க... என்ர குடும்ப கஸ்டத்தை. இந்த செத்தைவீட்டை கண்ணால் பார்க்கிறீங்க. ஆடும் நாற்காலியை இருந்தே அனுபவிக்கிறீங்க. மேல பாருங்க சூரியன் தெரியும்... கீழே பாருங்க கறையானும் எறும்பும் சண்டை போடுறதை... இந்த இலட்சணத்தில்... அப்பா போய் சேர்ந்திட்டார். அம்மா மரக்கறி காவி... காவி என்னை படிக்க வைச்சார். எனக்கு ஏதோ தொழிலும் கிடைச்சிட்டுது. இந்த உழைப்பில் ஆறு சகோதரங்கள் வஞ்சகம் இல்லாமல் நல்லா... நல்லா... படிக்கிதுகள்... குழப்ப என்னால முடியாது...

"சியாமளா அக்கா... நம்பினால் நம்புங்க... நாங்க ஒரு நேர சாப்பாட்டோட வாழுற கூட்டம் பாருங்க. இந்த நிலையில... வேடிக்கை... விருந்து... என்னால அந்த போலியான வேடம் போட முடியவே முடியாது.

"என்னை அழைச்சிட்டாங்க என்பதற்காக நான் வந்து திண்டு விட்டுப் போகலாம். நாளைக்கு அவர்களை திருப்திப்படுத்த... என் வறுமை... என்னால எப்படி சியாமளா அக்கா முடியும்?... அதாலதான்... நான்..." ராணி அழுகாக தொடர்ந்து கொண்டிருந்தாள்.

சியாமளா... அவள் நினைவுகள்... 'நாங்க ஒரு நேர சாப்பாட்டோட வாழுற கூட்டம் பாருங்க...' என்ற ராணியின் வார்த்தைகளோடு விளையாடியா கொண்டிருக்கின்றன...?

**தினமுரசு : 13.08.1994**

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இனியொரு

என்னை நான்: ஒரு நிமிடம் மறந்தே போனேன். பத்து வயசு இருக்கும். ஸ்கொலஷிப் ஐந்தாம் ஆண்டு பாஸ் பண்ணின நேரம்... அப்பா என்னை தூக்கி கொஞ்சிய போது...

என்னை நான்: ஒரு நிமிடம் மறந்திருந்தேன். இது சந்தோஷத்தின் எல்லையில் என்னை நான் மறந்த நிகழ்ச்சி ஆனால் பயத்தில் என்னை நான் மறந்த சம்பவமும் இன்னும் என் மனதில் பசுமையாகவே இருக்கின்றது.

"கெதர கௌத..." பலமாக கதவு தட்டப்படும் போது "யாரோ கள்ளங்கள்..." என்று சொல்லிக்கொண்டு அம்மா வீறிட்டு எழுந்த போது... அப்பா எழுந்து கதவைத் திறந்த போது... ஏழெட்டு ஆமிக்காரன்கள் வேகமாக வீட்டக்குள் நுழைந்து... "எங்க பெரிய தம்பி..." என்று கத்தியபோது...

என்னை நான் ஒரு நிமிடம் மறந்ததும் உண்டு. ஆனால் இன்று ஜெயராணி என்னிடம் இந்த செய்தியை கூறி: தனது தமையன் எழுதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதத்தை என்னிடம் விரித்து காட்டிய போது...

அப்படியே... அந்தக் கவலை...

என்னை நான் ஒருநிமிடம் மறந்தே போனேன்.

"கலா... சூரியகலா... என்னப்பா... என்ன...?" என்று என் தோழி என்னை தட்டி என்னை உணர வைத்த போது... 'ஓ'வென்று அழுதேவிட்டேன். "இஞ்சாரும் அப்பா... நீர் மனசை விடமாட்டீர். தைரியசாலி என்றுதான் உம்மட்ட இத சொன்னன். இல்லாட்டி பிறசரோடையும் டையபிட்டிஸோடயும் அவதிப்படுற உம்மட்ட ஃபாதரிட்ட சொல்லி இருப்பன்தானே? மனதை அலைய விடாதேயும். திடப்படுத்தும். எப்படியோ உங்கட குடும்பத்தில யாரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்காம சொன்னாச் சரி... அந்த சாமர்த்தியம் உம்மட்ட இருக்கு என்றதாலதான் அண்ணாச்சி எழுதினபடி உம்மட்ட நான் வந்து சொன்னன்."

"ஜெயராணி கதைப்பது கனவில் கதைப்பது போலிருந்தது. வார்த்தைகள் ஆழமான கிணற்றில் இருந்து வருவது மாதிரி இருந்தது.

ஜெயராணியின் முகமும் சிவந்திருந்தது. அவளது கட்டுக்கோப்பான தடித்த உடல் நடு நடுங்கிக்கொண்டிருந்தது. சேலைத் தலைப்பால் தன் கண்களை ஒற்றி ஒற்றிக் கொண்டிருந்தாள்.

எப்படித்தான் என்னிடம் அந்த திடீர் ஆவேசம்: துணிச்சல் வந்ததோ? உண்மையில் ஜெயராணி சொன்ன மாதிரி நான் தைரியசாலியோ?

என்னை நான் மறந்த அந்த ஒரு நிமிடத்தின் பின்...

அந்த மயக்கம் போய்க்கொண்டே இருந்தது.

"அழாதேயும்... எங்கட கையில் என்ன இருக்கிறது? எப்பவாகிலும் உயிர் என்ற ஒன்று போகத்தானே வேணும்? விபத்தில சாகிறம்... நோயில சாகிறம்... சிலர் கடமையில் சாகிறார்கள். பெரிய தம்பி அவன் பிறந்த மண்ணுக்காகப் போராடி மறைந்திருக்கிறான். அவ்வளவுதானே! சின்ன பாசம்... கூடி வளர்ந்த வேதனை... வேறென்ன?"

சூரியகலா எப்படித்தான் பேசினாளோ?

இந்த வார்த்தைகளை எப்படித்தான் பொறுக்கி எடுத்தாளோ? அவள் உண்மையில் தகப்பனைப்போல: தமையன் பெரியதம்பி போல துணிச்சல் காரிதான்.

வேறு யாராவது இந்த செய்தியை கேட்டபின் இவ்வளவு துணிச்சலோடு சத்தியமாக இருக்கவே மாட்டார்கள். கத்தி குளறி ஊரையே கூப்பிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பார்கள். ஊருக்கே: வந்த செய்தியை பறை சாற்றி இருப்பார்கள்.

அதன் பின்விளைவால் வரப்போகும் பிரச்சனைகளை சிறிதும் யோசித்தே இருக்கமாட்டார்கள்.

தன் சேலைத் தலைப்பால் ஜெயராணி: சூரியகலாவின் முகத்தை துடைத்துவிட்டாள்.

"அண்ணாச்சி சொன்னது சரி... உம்மட வீட்ட போகாம உம்மை எங்கட வீட்ட கூப்பிட்டு சொன்னதும் நல்லதற்குத்தான்..." ஜெயராணி சொன்னாள்.

சூரியகலா தன்னை ஒருமுறை மறந்து சிரித்தாள். அந்த சிரிப்பிலும்...

ஜெயராணி அவளை அதிசயமாகப் பார்த்தாள்.

"என்ன பெண்ணோ?" சூரியகலாவை... அவளது அழகான தோற்றத்தை கண்ணால் படம் பிடித்தாள்.

நீளமான மூக்கும்... அந்த பூனைக் கண்களும்... விரிந்த நெற்றியில் குற்றுப் போல் போட்டிருந்த குங்குமப் பொட்டும்... மேல் உதட்டில் உள்ள பூனை மயிர்களும்...

தான் எடுத்த படத்தை தனக்குள் பார்த்தாள் ஜெயராணி.

"கலா வீட்ட இந்த விஷயத்தை எப்படிச் சொல்லப் போகிறீர்? எப்படித்தான் அவர்கள் தாங்குவார்களோ?"

தான் எடுத்த படத்திற்கல்ல: தன் முன்னால் நின்ற சூரியகலாவிடம் கேட்டாள் ஜெயராணி.

"இஞ்சாரும்... இராசவள்ளி நிலத்துக்க அல்லவா கிழங்கை போடுறது? உம்மட வீட்ட... இஞ்ச கொடியில ஒவ்வொரு கணு இடையிலயும் சின்னன் சின்னனாய் போட்டிருக்கே..."

சூரியகலா: ஜெயராணியின் முற்றத்தில் மதில் ஓரமாக நின்ற செவ்வரத்தையோடு ஒன்றி: படர்ந்திருந்த இராசவள்ளி செடியுடன்தான் தன் புலன்களை மாற்றி விட்டாளோ?

"இஞ்சாரும் கதை மாற்றாதேயும். இராசவள்ளி கொடியில போடுறது எங்கயும் உண்டு. உம்மட விஷயத்துக்கு வாரும்"

"ஜெசிந்தா..." ஜெயராணியை கலா இப்படித்தான் கூப்பிடுவாள்.

"சொல்லும்?"

"பெரிய தம்பிக்கு... இராசவள்ளிக்கிழங்கு என்றால் நல்ல ஆசை. அம்மா எனக்கு கொஞ்சம் கூடப் போட்டுட்டா என்பதற்காக, இராசவள்ளிக் கிழங்கு இருந்த பானையை அப்படியே தூக்கி முற்றத்திலே எறிஞ்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டான். "ஏண்டா எறிஞ்சனி?" என்று அம்மா அடிக்கப் போகேக்க 'இவள் கலாவுக்கு உருண்டைக் கிழங்கு அவிச்சு: மிளகுதூள் போட்டு சாப்பிட ஆசை. நான் அதில போனனா? இராசவள்ளிக் கிழங்கு தின்ன எனக்கு ஆசை. எல்லோரும் எல்லாத்திலும் ஆசைப்படுறது சரியா அம்மா?" என்று கேட்டான். ஜெசிந்தா! அன்றில் இருந்து முதல் பெரியதம்பிக்கு போட்டபின்தான் நாம் சாப்பிடுவம். இதை நினைக்க..." கலா அழவில்லை.

"அம்மாவ்... அம்மாவ்..." பாத்றூமுக்குள் இருந்து சத்தம் வந்தது.

"கலா கொஞ்சம் இரும். அரை மணிக்கு முன்னால முழுகப் போனவள் பிரியா... பார்த்திட்டு வாரன்..." ஜெயராணி பாத்றூம் பக்கம் அவசர அவசரமாகப் போனாள்.

சூரியகலா பூஞ்சட்டி வைப்பதற்காக போடப்பட்டிருந்த கட்டில் அமர்ந்து கொண்டாள்.

அம்மா: அப்பா: தம்பி: தங்கைகள்: சித்திமார்: மாமாமார்... இத்தியாதி உறவுகள்... வந்து போனார்கள். அம்மாவின் அப்பு இறந்த போது வீட்டில் நடந்த அந்த செத்த வீட்டு காட்சிகள் எல்லாம் வந்து போய்க் கொண்டிருந்தது.

பெரியதம்பி கடல் சண்டையில காணாமல் போனதை எப்படிச் சொல்லலாம்? ஜெசிந்தா குடைகிறாள். நான் எப்படி சொல்லப் போறன். அந்த தைரியம்... மனோபலம்... என்னிடம் உள்ளதா? சொல்லித்தானே ஆகவேண்டும். கலா........

திரும்பவும் அந்த கடிதத்தை படித்தாள்.

'...பெரியதம்பி... கடல் சண்டையில வீர மரணம் எய்திவிட்டான். அவன் கொண்டு போன படகு மோதித்தான் அந்த பெரிய கப்பல் சுக்குநூறான தாம். சந்தி எங்கும் பெரிய தம்பியின் படமாய் போட்டிருக்கு. உங்களுக்கும் தகவல் வந்திருக்குமென நம்புகின்றேன். மற்ற விஷயங்களை பிறகு எழுதுகின்றேன். மேலும்...'

கடிதத்தை மடித்தாள் சூரியகலா.

ஜெயராணி தன் மகளுக்கு தலையைத் துவட்ட முற்றத்துக்கு கூட்டி வந்தாள்...

"ஆ... கலா அன்ரியா..." ஜெயராணியின் மகள் பிரியா கலாவை ஆசையாக அழைத்தாள்.

கலா மௌனமாக சிரித்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்ரி என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீங்க...? என்ன நடந்தது?"

"ஒன்றுமில்லை... இந்தமுறை பொங்குறதா... இல்லையா என்று யோசிக்கிறன்..."

"ஏன் பொங்குறதுக்கு என்ன? வழி இல்லையோ?"

ஜெயராணியின் பத்து வயது மகள் கேட்டாள்.

கலாவுக்கு பதில் உடன் வரவில்லை. கதையை மாத்தப் போய் அம்பிட்டு விட்டோமென அவள் மனம் சொன்னது.

"கலா அன்ரி இந்த முறை பொங்கமாட்டினம். நீ கேள்விமேல் கேள்வி கேட்காமல் தலையை குனி..." தன் மகளை அதட்டி தலையை குனிய வைத்தாள் ஜெசிந்தா.

"அவளை ஏன் அதட்டுகிறாய்...? அவள் கேட்கிற கேள்விக்கு நான் பதில் சொல்ல வேண்டும். அப்பதான் நான் எல்லோருக்கும் பக்குவமாக இந்த விஷயத்தை சொல்லலாம்.."

"அப்ப சொல்லு..."

"இந்த நாட்டில சமாதானம் வரவேணும்... அப்படி நிலையான சமாதானம் வந்தாத்தான்... உண்மையான மகிழ்ச்சியோட எங்கட கொண்டாட்டங்களை கொண்டாடலாம். இப்ப எங்க பார்த்தாலும் ஒவ்வொரு குடும்பத்திலும் இந்த சண்டையால வெறுமைதான் மிஞ்சிக் கொண்டு போகுது.

மனிசர்கள் சீவிக்கிற காலம் குறைவு. இதுக்குள்ள சண்டையை பிடிச்சு எங்களை நாங்களே மிருக சாதிகள் போல அழிச்சுக்கொள்கிறதென்றால்... இனியொரு... பொங்கல்... எங்களுக்குத் தேவைதானா...?

சூரியகலா ஆத்திரத்தோடு அல்ல... அவதானமாகத்தான் சொன்னாள்.

அவளோடு அவள் அண்ணன் பெரியதம்பி மட்டுமல்ல எத்தனையோ பெரியதம்பிகள் அவளைச் சூழ்ந்து... பேச வைத்துக் கொண்டிருந்தார்கள்.

சூரியகலா இன்னும் பேசிக்கொண்டிருந்தாள்.

**(தினமுரசு - 14.01.1995)**

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் எங்களுக்கல்ல....

`சுந்தா அன்ரி... சுந்தா அன்ரி...'

"யாரது..."

"சுந்தா அன்ரி... சுந்தா அன்ரி..."



"காது கேட்குது... யாரது..."

"நான் தான் அன்ரி... கதவ திறவுங்க..."

சுந்தா அன்ரி என்ற ஜெயலெட்சுமிக்கு இதயத்தில் இந்த பதில் துப்பாக்கி ரவைகள் பாய்வது போலிருந்தது.

துப்பாக்கி ரவைகள் உடலில் பாய்ந்தால் எந்த நோவோ, வேதனையோ உடன் இருக்காது. பட்ட இடத்தில் அல்ல... அந்த வெளியேறிய ரவைகளின் தாக்கம் சிறிது நேரம் போகப் போகத்தான் தெரியும்.

கண்கள் இருளும் மயக்கம் வரும். எங்கோ மிதிப்பது போன்ற பிரமை இருக்கும்.

இந்த துப்பாக்கி ரவைகளைத் தாங்கிய ஜெயலெட்சுமிக்கு அந்த குரலின் தேவை எதுவென நினைத்த போது...

அந்த இருள்... அந்த மயக்கம். அந்த பிரம்மை... எல்லாமே தோன்றவா தொடங்கிவிட்டன?

வீட்டு விறாந்தைக் கதவை மெதுவாகத் திறந்தாள்.

அவள் எதிர்பார்த்த உருவம் அவளின் பதிலுக்காக காத்திருந்தது.

ஜெயலெட்சுமி என்ன பதிலைச் சொல்வாள்? மூன்று மாதங்களாக... அந்த பதிலைச் சொல்வதற்காகத் தான் திருகோணமலை வீதிகள் எங்கும் அலைந்து களைத்து விட்டாளே!!

அவளையறியாமல் - வியர்வை சிந்தவும் தொடங்கிவிட்டது. மூக்கில் தொங்கிய வியர்வை முத்துக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தந்த கூச்சத்தையும் மறந்தவளாய்... நின்ற உருவத்தை வைத்த கண் வாங்காது பார்த்தாள்.

அம்மா கேட்டிட்டு வரச் சொன்னவ... பொங்கலுக்கு முதல் வீடு வேணுமாம்... அகதிக் கப்பலால வந்த மூத்தக்கா ஆக்களுக்கு வீடு வேணுமாம்..."

நின்ற உருவம் பார்த்த பார்வை...

அந்த துப்பாக்கி ரவைகள்...

ஜெயலெட்சுமியின் உடலில் பட்டனவே தவிர இன்னும் வெளியேற வில்லையோ? வெளியேறினால் தான்..."

அந்த இருள் அந்த மயக்கம்... அந்த பிரமை தோன்றுமோ?

மூன்று நிமிட துப்பாக்கி வேட்டுகளின் மௌனத்தின் பின்னால் ஜெயலட்சுமி சமாதானக் கொடியை ஏன் தூக்க வேண்டும்?

"இராசாத்தி... நான் பின்னேரம் அம்மாட்ட வாரன்..." ஜெயலட்சுமியின் வாய் திறந்தது.

கதவு தட்டி நின்ற உருவம் துப்பாக்கியை சரிப்படுத்திக் கொண்டது. தூக்கியும் கொண்டது. ஆனால்...

'இராசாத்தி... நீ போறாய்... கவனம்... முக்கியம் உன் வாய்... சுந்தா அன்ரி ரோசமானவ அவவுக்கு ஒரு சொல் போதும்... நீ உன்ர வாயால்... வீண் சண்டையை உண்டாக்கிப் போடதை...'

நின்ற உருவத்தின் தாய் அடித்துச் சொன்ன வார்த்தைகள்... முன்னால் இருந்து வேகமாக வந்தன. துப்பாக்கியை சரிப்படுத்தி... தூக்க நினைத்த அந்த உருவம் இராசாத்தி: தன் துப்பாக்கியான நீண்ட வாயினை மூடிக் கொண்டாள்.

அவளும் சமாதானக் கொடியினை தூக்கிக் கொண்டாள்?

'அன்ரி... கொஞ்சம் யோசித்துப் பாருங்க. அம்மா உங்களுக்கு வீடு தரக்க என்ன சொல்லி தந்தவ என்று, மூத்தக்கா ஆக்கள் வந்தவுடன் வீடு விடவேணும் என்று தானே! இவையள் வந்தும் மாதம் ஆறாகப் போகுது. நீங்களும் பாப்பியள் என்று அம்மா சும்மா இருந்திட்டா. தயவு செய்து... நீங்கள்... வீட்டை விட்டுட்டீங்க என்றால்..." இராசாத்தியின் சமாதானக் கொடி பறக்கத் தொடங்கியது.

வாடகைக்கு வீடு எங்கே எடுப்பது என்ற மயக்கத்தில் இருந்த ஜெயலட்சுமிக்கு இராசாத்தியின் வார்த்தைகள்... முகத்தில் நீர் தெளித்தாப் போலிருந்தது.

அந்த உணர்வுடன் 'வாரும் வாரும்... நிக்க வைச்சு பேசுறன்... வாரும்... உள்ளுக்குள் வந்த உருவம் இராசாத்தியை அழைத்தாள்.

நாளைய கலியாணக் கனவுகளுடன், உடம்பின் அந்தத் திமிரான மிடுப்புடன், தன் வாட்ட சாட்டமான இளமையினை சிவன் கோயில் தேர் போல மெல்ல ஆட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைத்து இராசாத்தி வந்து அமர்ந்தாள். அவள் கண்கள் அந்த வீட்டை ஒரு முறை வலம் வந்தன.

'நீங்கள் வீட்ட நல்லா வைத்திருக்கிறியள். வேறு ஆக்கள் என்றால் என்ன மாதிரிப் பாழ்படுத்தி இருப்பினம்...' இருந்த நன்றிக்காக ஜெயலெட்சுமி அன்ரிக்கு வார்த்தைகளை மாலையாக அணிவித்தாள்.

மயக்க நிலை மாறியும் மாறாமலும் விக்கி நின்ற ஜெயலட்சுமி உதடுகளை குவித்துக் கொண்டாள்.

அவளின் இளமை அவளின் உதடுகளில் குவிந்து நின்றது.

'அன்ரி.. உங்கட அழகு எல்லாம் உங்கட உதடுகளில் குவிந்திருக்கே...' இராசாத்தி மீண்டும் மற்ற நன்றி மாலையை ஜெயலெட்சுமியின் கழுத்தில் போட்டாள்.

'சீ... சும்மா... ஐஸ் அடியாதையும்...' ஜெயலெட்சுமியின் முகத்திலும் நாணமா?

'இல்ல அன்ரி... நான் உண்மையைச் சொன்னனன். வேணுமென்றால் நீங்க கண்ணாடி முன் நின்று பாருங்கவன்...'

இராசாத்தி மூன்றாவது மாலையை ஜெயலட்சுமி கழுத்தில் போட்டாள்.

குவிந்த ஜெயலெட்சுமியின் உதடுகளில் இருந்து புன்னகை எழுந்தது.

"நானும்... இஞ்ச தேடி அலைந்துதான் திரியிறன். அங்கிளுக்கு இதப்பற்றி ஏதும் கவலையில்லை. வேலை வேலை என்று அரசாங்கத்துக்கு உழைத்துக் கொண்டிருக்கிறார். மூத்தவள் தீபாவும், மற்றவள் சர்மியும் வீடு தேடி படாத பாடு படுகிதுகள். தீசனும், ரூபனும் இப்ப கொஞ்சம் முந்தி தான் யாரோ அவையளின் கூட்டாளி வீட்டில இடம் இருக்கிறதாய் சொல்லி விசாரிக்க போய் இருக்கினம். நம்ப மாட்டீர்... இவள் நான்காம் ஆண்டு படிக்குதே பிரி அவளும் தங்கட ரீச்சர் சொன்னவவாம் என்று போய் இருக்காள்... நாங்க சும்மா இருக்கவில்லை. உங்கட நிலமை எனக்குத் தெரியும். கேட்டவுடன் எங்களுக்கு வீடு தந்தனீங்க...

இந்தச் சிவன் கோவில் வீதியில் எங்கட சாமான் சட்டுகளை போட்டு என்றாலும் உங்களுக்கு நாம் சொன்னபடி பொங்கலுக்கு முதல் வீடு தந்திடுவோம். "...."

ஜெயலெட்சுமி தன் வார்த்தைகளை அமைதியாகக் கொட்டினாள்.

"இல்ல அன்ரி... எங்கட நிலமையை நீங்க புரிஞ்சபடியால் இப்படி சொல்றீங்க. எங்கட அந்தச் சின்ன வீட்டில் மூன்று குடும்பங்கள் எப்படி நெருக்கப்பட்டு வாழ முடியும்? கிணற்று தண்ணி, கக்கூசு... படுக்கை... சமையல்... ஒவ்வொரு நாளும் சண்டைதான் அன்ரி... எங்கட வீட்ட:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கொடுத்தனீங்க வேண்டித் தந்தா எங்களால் பிரச்சினை உங்களுக்கு இல்லையே' என்று அக்கா அம்மாவோட சண்டை. அம்மா என்ன செய்வா?

யாருக்காக கதைப்பா? நாம் வன்செயல் என்று பயந்து உங்கட கிராமம் நிலாவெளிக்கு வந்த போது அறியாத எங்களுக்கு புகலிடம் தந்து: உணவு தந்து உங்கட ஊரின் பெருந்தன்மையினை காட்டினீர்கள். ஆனால் நீங்களே அங்கே வாழமுடியாது என்ற நிலையில் இஞ்ச ரவுணுக்கு வந்த போது... நாங்களும் இந்த வீட்ட தந்தம். இதனால் எங்க குடும்பத்தில் எவருக்குமோ... உங்களை வற்புறுத்தி வீட்டை விட்டு எழுப்ப மனம் வருமா அன்றி... இது இந்தியாவுக்கு தப்பியோடி இப்பவந்த அக்காவிற்கு எங்கே தெரியப் போகுது..." இராசாத்தியின் இளமை குலுங்கியது. குமுறியது அந்தக் காந்தக் கண்களிலும் கண்ணீரா?

"இராசாத்தி... இதுக்குப் போய் நீர் ஏன் கண்கலங்குகிறீர். எல்லாம் சரியாவரும். வீடு தேடப்போய்த்தான் உங்கட வீட்டின் பெருமையும் எனக்குத் தெரியுது. ஆயிரம் ரூபாய் வாடகைக்கு ஏதுமே அட்வான்ஸ் இல்லாமல்... இந்தப் பெரிய வீட்டை நீங்க எங்களுக்குத் தந்து இருக்கிறீங்களே... சும்மா சின்ன கொட்டில் வீட்டுக்கே ஐம்பதாயிரம் அட்வான்சும் ஆயிரத்து ஐநூறு ரூபாய் வாடகையாம் என்றால்.." ஜெயலட்சுமி வார்த்தைகளே முடிக்க முதல் வெளியே சைக்கிள் சத்தம் கேட்டது.

"தீசன் வாரான்..." ஜெயலட்சுமி எழுந்தாள். கறுத்தக் கொழும்பான் மாமரத்தில் சைக்கிளைச் சாத்திவிட்டு வரும் தன்மகனை நோக்கினாள் ஜெயலட்சுமி. இந்த வருடம் ஆண்டு ஒன்றில் சேர்ந்து கொண்ட ரூபன் குதித்துத் தாயிடம் ஓடிவந்தான்.

இராசாத்தியும் முற்றத்துக்கு வந்தாள். அவள் கண்கள் தீசனை நோக்கின. தீசனின் மாநிறம். அரும்பு மீசை, எடுப்பான றவுசர் அந்தக் குவிந்த இதழ்... எல்லாம் இராசாத்தியின் கண்களுக்குள் படமாக ஓடின.

"தம்பி என்னடா... என்னவாம்..." ஜெயலெட்சுமி கேட்டாள்.

"அம்மா..." என்ற தீசன் அத்துடன் நிறுத்திக் கொண்டான். வந்திருந்த புதிய ஆளை அவன் கண்கள் சந்தித்து மீண்டும் தாயிடம் வந்தன.

'இராசாத்தி தானே... நீ சொல்லு...' தாய் மகனிடம் தைரியமாக சொன்னாள்.

"அம்மா... இஞ்ச வீடு எடுக்க ஏலாது. உங்கட்ட இருக்கிற அட்வான்ஸ் காசுக்கு கொட்டிலும் எடுக்க முடியாது." சொல்லிவிட்டு தன் தாயுடன் ஒட்டிக் கொண்டு நின்ற இராசாத்தியை சுட்டெரிப்பது போலப் பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்மா.. நாங்க நிலாவெளிக்கு போவம். எங்கட வீட்ட அரை குறை என்றாலும் திருத்தி அங்க போவம். இஞ்ச ரவுனுக்க இருக்க முடியாது...'

'உங்கட படிப்பு... நீ இந்த முறை அட்வான்ஸ் லெவல் எடுக்கிறியே... ரியூசன் கிளாஸ்..' ஜெயலட்சுமி தடுமாறி வார்தைகளைக் கொட்டினாள்.

இராசாத்தியின் மனம் பதை பதைக்கத் தொடங்கியது. அந்தப்பதை' பதைப்பு... அந்த இளமையின் ஊஞ்சல்... வார்த்தைகளாக வெளி வந்தன.

"அப்படியென்ன... இஞ்ச வீடு எடுக்க கஸ்டமோ..."

'உனக்கு என்ன எங்கட கஸ்டம் தெரியும். உள்ளவருக்கு இல்லாதவரின் அருமை தெரியாது. நீயும் திரிஞ்சு பார்த்தால் தெரியும்..." தீசன் சொல்லிவிட்டு வீட்டுக்குள் ஏறினான்.

இராசாத்தி முகத்தை தாழ்த்திக் கொண்டாள். ரூபன் தாயிடம் ஒட்டிக் கொண்டான்

"நிலாவெளிக்கு நாங்க போக வேணுமா அம்மா" தாய் பேசவில்லை. 'ஏனும்மா... பேசுறீங்க இல்ல... இந்த முறை இஞ்சதான் அம்மா போன முறை போல பொங்குறது...' தாய் பேசவில்லை.

"ஏனம்மா சொல்லுங்கம்மா... அம்மா சொல்லுங்கம்மா... பொங்கலுக்கு நான் நட்டு வளர்ந்த கரும்பைத்தான் அம்மா வெட்டுறது. அண்ணாச்சி நட்ட கப்பல் வாழையும் பழுத்திருக்கு... பொங்கலுக்கு சரியா இருக்கும்... என்னம்மா...'

ரூபனின் வார்த்தைகள் இராசாத்தியை தாக்கத் தொடங்கின.

'வீடு தேவை என்று எங்களுக்கு எப்படி பிரச்சனையோ அதே போல வீடு விடுகிற உங்களுக்கு எத்தனையோ பிரச்சனைகள் என்பதை... நான்... இராசாத்தியின் இளமை குலுங்கிக் குலுங்கி... அந்தக் காந்தக் கண்களிலும் கண்ணீரா?

"என்னம்மா நீங்க பேசுறீங்க இல்ல...' இராசாத்தி அடிக்கடி என்னமோ சொல்லி அழுகிறா.. இந்த வருசம் பொங்கல் இல்லையா அம்மா? இந்த வருசம் நாம் படைக்கும் பொங்கலை உண்ண சூரியன் உதிக்காதா அம்மா...?"

ஜெயலெட்சுமியின் வாய்திறந்தது.

"தம்பி.... சூரியன் உள்ளவரை பொங்கல் உண்டு ஆனால் வீடு வாசல் விட்டு அநாதைகள் போல்... மேய்ந்து திரிகிற எங்களைப் போன்றவர்களுக்கு பொங்கலல்ல...

நாங்க பொங்குகிறதில எந்த நியாயமும் இல்ல...

ரூபனுக்கு எதுவுமே விளங்கவில்லை.

தாயையே விழித்துப் பார்த்தான்.

**(தினகரன் 15.01.1995)**

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தரை மாற்றுத் தங்கம்

**பொ**ன்னுத்துரை இதை எதிர் பார்க்கவே இல்லை. இப்படியான



பழி தன்மேல் வருமென அவன் கனவில் கூட நினைக்கவில்லை.

அதுவும் தன் மனைவி ரூபத்தில் அந்த பழி வந்தபோது... உண்மையில் துடி... துடித்தே போனான். அவனது இதயமே கனத்தது. பேசக்கூட அவனால் முடியவில்லை.

மௌனமாக இருந்து யோசித்துப் பார்த்தான். யோசிக்க யோசிக்க இன்னும் வேதனை கூடிக்கொண்டே அவனுக்கிருந்தது.

"உங்கட மௌனம்... எனக்கு எல்லாம் விளங்கிப் போச்சு... ராட்சதப் பூனை வேடம் இனியும் போட வேண்டாம். உங்களுக்கு ஒரு மனைவி இருக்கு வருசத்துக்கு ஒன்றாய் ஐந்து பிள்ளைகள் இருக்கு. இதுகளை நினைத்தாவது உங்கட மனங்களை கட்டுப்படுத்தி வரமுடியவில்லை என்றால்... நீங்கள் எல்லாம் என்ன மனிச சாதியோ...?

பொன்னுத்துரையின் மௌனம் அவனின் மனைவி அன்னலெட்சுமியை பேச வைத்தது. அவனின் குழந்தைகளை முழுசி முழுசி பார்க்க வைத்தது.

தன் மனைவியும், தன் பிள்ளைகளும் தன்னை ஒரு காட்சி விலங்காக்கி கூட்டுக்குள் அடைத்து வேடிக்கை பார்க்கின்ற நிலை... தன் மௌனம் ஏற்படுத்தி விட்டதே என்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்ட போது...

புதியவர்களை கண்டதும் பாயும் வெறி நாயாக பாய்ந்தால் என்ன? என்று ஒரு விநாடி நினைத்துப் பார்த்தான். 'கோபக்காரனுக்கு புத்திமட்டம்' அவனது தந்தையார் அவனுக்கு சொன்னது துணையாக வந்தது. 'மௌனம் கலக நாஸ்தி' என்ற அவன் தந்தையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனையும் கூட எழுந்தது.

பொன்னுத்துரை மௌனமாக வாய்விட்டு சிரித்தான். விழுந்து விழுந்து சிரிக்க நினைத்தான். அப்படிச் சிரித்தால் தன்னைச் சுற்றி நிற்கும் இவர்கள் எல்லாம் பைத்தியமாக்கிப் போடுவார்களோ என்ற பயமும் அவனுள் எழத்தான் செய்தது.

"என்ன சிரிக்கிறீங்க...? செய்ததை செய்து போட்டு மானங்கெட்ட சிரிப்பு சிரிக்கிறீங்களே... என்னால என் பிள்ளைகளால இனி வெளியில தலைகாட்ட முடியுமோ...? பொன்னுத்துரையின் மனைவி அழத் தொடங்கினாள்.

கூட தகப்பனை முறைத்துப் பார்த்த பிள்ளைகளும் தாயுடன் சேர்த்துக் கொண்டார்கள்.

பொன்னுத்துரை அப்போதுதான் வேலையால் வந்திருந்தான். கிராமோதய சபையில் அவன் கிளார்க் நல்ல சிவந்த மேனி உருளையான உடம்பு கருண்ட தேகம் சீரான பல்வரிசை எந்தவொரு பெண்ணுக்கும் அவன் காதல் இளவரசன்தான். சின்ன புன்னகையால், நாக்கில் தடுக்கி விழும் சில சொற்களால்... எந்தப் பெண்ணையும் அவன் சுண்டி எடுத்துவிடும் ஆற்றல் உண்டென்று அவன் மனைவி மட்டுமல்ல எல்லோரும் தான் நினைப்பார்கள்.

இந்த நினைப்புகளுக்கும்... அவனின் அந்த அழகான தோற்றத்துக்கும் எந்த தொடர்புகளும் உண்டா என்பது அது பொன்னுத்துரையினை நன்றாக உரசிப் பார்த்தால் தான் தெரியும்.

மளமளவென்று தன் கையோடு நின்ற சைக்கிளை உருட்டி முள் முருங்கையில் சாத்திவிட்டு வீட்டுப் படியில் ஏறினான் பொன்னுத்துரை.

"உங்களுக்கு ரோசம் ஆவது இருக்கா? நான் இங்கு ஒருத்தி அழுது குளறுகிறன். நீங்க உங்க பாட்டுக்கு சிரித்துக்கொண்டு போறீங்களே... ஒரு வார்த்தை நீங்க எங்க பேசப் போறீங்க... குற்றம் செய்த விலங்கு உடம்பல்லவா?" அன்னலெட்சுமியின் வார்த்தைகள் போன பொன்னுத்துரையை திரும்ப வைத்தது. நிற்க வைத்தது.

முட்டி மோதிக்கொண்டு எப்போது புறப்படுவோம் என்ற அம்புகளான அவனின் சொற்கள் இந்தக் கால 'ஷெல்' போல படுவேகமாக குறித்த இலக்குகளை நோக்கி புறப்படத் தொடங்கின. 'ஷெல்'களின் குறி தவறினாலும் பொன்னுத்துரையின் ஷெல் வார்த்தைகளின் குறி தவறாது. மனைவியை மட்டுமல்ல வளவு வேலியில் முளைத்த திடீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகங்களைக் கூட அவை தாக்கத் தொடங்கின.

"எனக்கு அழகான மனைவி இருக்கு. அழகான மூளைசாலிகளான பிள்ளைகள் இருக்கு. எனக்கு எந்தக் குறையும் இல்லை. நீங்கள் ஏன் வேலிக்குள்ளால எட்டிப் பார்க்கிறீங்க? எனக்கும் என் பெஞ்சாதிக்கும் உள்ள பிரச்சனை இது."

பொன்னுத்துரையின் வார்த்தைகள் தன்னை வேடிக்கை பார்த்தவர்களைத் தாக்கியது.

'செய்யிறதை செய்துபோட்டு... கதைக்கிறதைப் பார்...' 'வேலி முகம்' ஒன்று பேசியது. அது பொன்னுத்துரையின் காதுகளில் விழவில்லை.

"அன்னலெட்சுமி! நீ யாரோட எப்படி எதை பேசுகிறாய் என்றதை நல்லா யோசித்துப் போட்டுப் பேசு. இந்த பதினைந்து வருட தாம்பத்திய வாழ்க்கையில் நீ என்னை இவ்வளவு தான் புரிந்திருக்கிறாய் என்றதை நினைக்கும் போது... எனக்கு என் மேலதான் கோபமாய் இருக்கு... கொஞ்சம் யோசித்துப் பார்... எனக்கு இந்தா அந்தா என்று குமராகிற வயசில பிள்ளை இருக்கு. நான் பிழைவிடுவேனோ?

"இது கோணேச மண். பிழை விடுபவர்களை உடனுக்குடன் கேட்கும் மண். பிழைகளை செய்து போட்டு யாரும் இஞ்ச தப்பமுடியாது... உன்னட்ட என்னை பற்றி யார் சொன்னது... முதலில் அவையளக் கூப்பிடு...."

பொன்னுத்துரை தன் பேச்சினை முடிக்காது தொடர்ந்தான்.

அன்னலெட்சுமிக்கு தன் புருஷனைப் பற்றித் தெரியும். பிரச்சனை என்று ஒன்று வந்தால் அதை முடிக்காது சோறே சாப்பிடமாட்டார். என்று... இப்ப என்ன செய்வது?

அந்த பிள்ளை ராதாவைக் கூப்பிட்டால் என்ன? நேர வைத்து விசாரித்தால்... அன்னலெட்சுமிக்கு புத்திசாலித்தனமான யோசனை அந்த நேரம் வந்தது. சீ... என் புருஷனை நம்பாமல் இதை போய் நேர விசாரித்து... இப்போது அன்னலெட்சுமிக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை.

"கூப்பிடு அவளை... நேர கேட்போம்..." பொன்னுத்துரை ஆவேசம் கொண்டு கத்தினான்.

"இஞ்ச பார்! நாலு நாட்களாகப் பார்க்கிறன். கிணத்தடியில இவள் ராதாபெட்டை குளிக்கிற விதம் எனக்கு பிடிக்கவில்லை. வெள்ளை அண்டஸ்கேட்டை தூக்கி மேல கட்டிக்கொண்டு முக்கால்வாசி தொடை தெரிய குளித்தால் எப்படி இருக்கும்...? வெள்ளை அண்டஸ்கேட்டில தண்ணி நனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ முக்கால் வாசி தொடை தெரிய இஞ்சேர் அவள் யாரோ பிறத்திப் பெட்டை என்றாலும், எனக்கு என்னமோ என்னால பார்க்கவே முடியவில்லை. 'அதுதான்... கிணத்தடியிலேயே வைத்து சொன்னனான். "ராதா உனக்கெண்டு ஒரு சாரம் வாங்கி... கிணத்தடியில குளிக்கக்க அதை கட்டி குளி" என்று இப்படி குளிக்கிறது அம்மணமாக இருக்குதென்று, இதைப் போய் அவள்..."

பொன்னுத்துரை தங்கு தடையின்றி வார்த்தைகளை அளந்தான்.

"அப்படியா சங்கதி...?" அன்னலெட்சுமி அதிர்ந்தே விட்டாள்.

பெண்கள் இப்படித்தான் உணர்ச்சி வசப்படுத்தலில் ஆண்களை விட கெட்டிக் காரர்களோ? உடனுக்குடன் தங்கள் நிறங்களைக்கூட மாற்றிக் கொள்வார்கள்.

"அன்னலெட்சுமி... என்ன நடந்தது என்று ஆறுதலாக அமைதியாக என்னிடம் ஏது என்று கேட்டாயா? ஏதோ கோபுரம் சரிந்தே போய் விட்டதென்று அல்லவா அடிச்சு புரண்டாய். யாரோ எவரோ ஆம்பிளைகள் பிழை விடுயினம் என்றதுக்காக அதே கண்ணோட என்னைப் பார்த்தால்... உண்மையை இப்ப சொல்றன்... நான் ஒரு ஆண்மகன் என்ற நிலையில்...

"தற்செயலாக போன... போன... புதன்கிழமை... இல்ல... சனிக்கிழமை... சனீஸ்வரர் கோயிலுக்கு போன நாள்... ஓம்... இவள் ராதா கிணத்தடியில குளித்துக் கொண்டு நின்றாள்... நான் பார்த்திட்டன் திரும்பவும் பார்க்க வேண்டும் போல இருந்தது... நான் பார்த்தன். அவள் குளிக்கிற காட்சி... அப்போதுதான் என்ர மனச்சாட்சி வேலை செய்தது... என்னையறியாமல் அவள் எப்படி குளிக்கிறதை தடுக்க வேண்டும் என்ற உணர்வே என்னிடம் வந்தது.

மூன்று நாட்களாகப் பார்க்கிறன். அவள் அப்படித்தான் அதே நேரத்தில் குளிக்கிறாள். எனக்கு ஒரு சந்தேகம்... துருவிப் பார்த்தன் ராதா குளிக்கிற காட்சியை அனுபவிக்க பலபேர் காத்திருக்கினம் என்று... இவள் பேய்ப் பெட்டை... வஞ்சகம் இல்லாமல் குளிக்கிறாள்... அதுதான் பொறுக்கமாட்டாமல் இப்படி குளியாதை என்று சொன்னனான்..."

அன்னலெட்சுமி வாயே திறக்காது தன் கணவனை... விழித்த கண் மூடாது பார்த்தாள்.

'முழிக்காத... என்னண்டு சொன்னாள்...? நான் அடிக்கடி அவள் குளிக்கக்க கிணத்தடிக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்..."

பொன்னுத் துரையின் வார்த்தைகள் தொடரா வண்ணம் அன்னலெட்சுமியின் கை அவன் வாயினைப் பொத்தியது.

"இப்ப தெரியுதே உண்மை...?"

"சரி... சரி... இதை இப்படியே விடும்... அப்பா.."

"எப்படி விட... அதுதான் முடியாது.

"இந்த பிரச்சனைக்கு ஒரு பக்கமாய் உண்மை காண முடியாது. மறு பக்கமும் தேவை... அந்த ராதாவையும் கூப்பிட்டு ஆறுதலா விசாரி. ராதா நல்ல பிள்ளை. அவள் இந்த வயசில இப்படி பேச வைத்து... பின்னால இந்த சமூகத்துக்கு தேவையற்றவள் ஆக்கிவிடக்கூடாது. அதற்கு நாமும் வடிகால் ஆகக்கூடாது... அதுவரை நான் சாப்பிடமாட்டன்.. எங்க உண்மை என்றதை நீ அறிய வேணும்..."

தன் உடுப்புக்களை களைய பொன்னுத்துரை வீட்டுக்குள் ஏறினான். அவனோடு இத்தனை நேரமாக அம்மாவோடு நின்ற பிள்ளைகள்... இப்போது அப்பாவோடு சேர்ந்து கொண்டார்கள். அம்மாவை ஏளனமாக பார்க்கிறார்களா? அவர்கள்..?

அன்னலெட்சுமியை சுற்றி... சுற்றி... இப்போது 'ராதா' வரத் தொடங்கினாள்.

**(தினமுரசு 09.10.1994)**

# வேலி

"இது பரந்த உலகம். இந்த உலகத்திற்கு எங்கே வேலி? மனிதர்களின் குறுகிய மனங்கள்தான் இந்த வேலியும்



எல்லையும் மனித மனங்களை கட்டுப்படுத்து: வேலியும் எல்லையும் அங்கே உருவாகி விடும்."

பிரசங்கம் நடந்து கொண்டிருந்தது அன்று வேலிக்காக என் வீட்டில் நடந்த சண்டையை எண்ணிப் பார்த்தேன். வெட்கமாக இருந்தது. என் மனம் சொன்னது... ஏன் நீ வெட்கப்படுகிறாய்?

வெட்கப்படாதே

இந்த உலகத்தில் எல்லோருமே அந்த வேலிக்கும் எல்லைக்கு மாகவே அடிபடுகிறார்கள். நீ மட்டும் அந்த வேலிக்காக விட்டுக்கொடுப்ப தென்றால்..."

அந்த பிரசங்கத்தை விட என் மனம் சொல்வதிலும் ஏதோ உண்மை இருப்பதாக எனக்குப்பட்டது.

**சிவநெறி : 2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்வான்ஸ்

என்னை நோக்கி இருவர் வந்து கொண்டிருந்தார்கள். முன்னுக்கு வந்தவரை அடிக்க வேணும் "பாரும் ராஜேஸ்வரியின் வீட்டு அட்வான்ஸ் பணம் ஐயாயிரத்தையும் தந்தீர்கள்



போலவே இருந்தது.

தனது நியாயத்தை உறுதிப்படுத்த சாட்சி ஒருவருடன் முன்னுக்குள் வந்தவர் பின்னுக்கு வந்தவரை கூட்டிக் கொண்டு வருகிறார் என்பது எனக்குத் தெரியும்.

நியாயம் சரி ஆனால் வந்தவர்கள்தான் எனக்கு நியாயப் பட்டவர்களாகத் தெரியவில்லை.

முன்னுக்கு வந்தவர் காலை ஏழு மணிக்கு வீட்டுக்கு வந்து... என்றால்..." என இழுத்தார்.

எனக்கு அப்போது சின்ன கோபம் ஒன்றும் வந்தது. கொஞ்சம் சூடாகவே சொன்னேன். "ஐயா... அட்வான்ஸ் ராஜேஸ்வரி என்னிடம் தந்தவர். நான் அதை அவரிடம் திருப்பிக் கொடுப்பேன். எல்லாத்துக்கும் நானே வாரேன் என்று விட்டுப் போனவர்... அவர் வரட்டும் நான் கொடுக்கிறேன்..." என்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லைங்கோ... ராஜேசுக்கு சுகம் இல்லை. வர ஏலாது ஆஸ்பத்திரியில... அடுத்த வீட்டுக்கு உங்கட அட்வான்ஸ் பணத்தை வாங்கி கொடுக்க சொன்னவ என்னிடம் அதுதான்..."

கடிதம் ஏதும் தந்தவவோ"

"என்னை நீங்கள் நம்பவில்லை போலும்... சரி அவவின்ர அண்ணனைக் கூட்டிக் கொண்டு வந்தால் தருவீங்களோ...?"

எனக்கு சினமாக இருந்தது. அட்வான்ஸ் வாங்கிய மாதிரி... வாங்கியவரிடமே நேராகக் கொடுத்தால் எனக்கு மனநிறைவாக இருக்குமென்பது... "சரி"... என்று அவரை தட்டிக் கழிக்கப் பார்த்தேன்.

சரியாக, பத்துமணி இருக்கும்... இதோ... ராஜேஸ்வரியின் அண்ணனைக் கூட்டிக் கொண்டு வந்து விட்டாரே... அந்த மனுசன்... எனக்கு ஆத்திரமாகத் தானே இருக்கும்.

பின்னுக்கு வந்தவர் முன்னுக்கு வந்தார். "அந்த அட்வான்சை தாறிங்களோ..."

கொடுக்கவா? விடவா? எனக்குள் யோசித்துப் பார்த்தேன். அட்வான்ஸ் பணத்தை இவரிடம் கொடுக்க என் மனம் விரும்பவில்லை.

"சரி தாறன்... ஆனால் வேண்டினதிற்கு கடிதம் நீங்கள் தர வேண்டும்?" என்றேன்.

வந்தவர் கொதித்தெழுந்தார். நான் யார் என்பது உங்களுக்கு தெரியும். எனது பிரபலம் உங்களுக்குப் புரியும். அப்படி இருந்தும் என்னை நம்பாமல் கடிதம் கேட்கறீங்களே... என்றார் ஆவேசத்துடன்.

நான் சிறிது நேரம் மௌனமானேன். எனது மௌனம் அவரை மேலும் பேசத் தூண்டியது.

இரண்டு நிமிடங்கள்... அவரின் துள்ளலுக்கு பின்னால் மிகவும் அமைதியாகவே கேட்டேன்.

"நீங்கள் உங்கட. தங்கச்சி சொல்லியா அட்வான்ஸ் பணம் கேட்க வந்தீங்க?"

"இல்லை...?"

"அப்ப யார் சொல்லி வந்தீங்க?"

"இவர் சொல்லி...?" பின்னுக்கு நின்றவரை காட்டினார்.

நான் சிரித்தபடி சொன்னேன். "அட்வான்ஸ் பணத்தை வாங்கி வரச் சொல்லி உங்கட தங்கச்சி உங்களிட்டை சொல்லி இருக்கலாம் தானே."ஏன் இந்த ஆளிட்டை சொல்லி விடுவான். இந்த ஆளை நம்புற அளவுக்கு உங்களை உங்கட தங்கச்சி நம்ப இல்லை. அப்ப எப்படி நான் உங்களை நம்புவன்... கொஞ்சம் யோசித்து சொல்லுங்க பார்ப்பம்...

"அப்ப... எடுங்க வெறுந்தாளை... காசு வாங்கினதாக கடிதம் எழுதித் தாறன்...?"

தோற்றுவிட்ட கோபத்தில் மேலும் பதட்டப்பட்டார்.

நான் ஆறுதலாக வெறுந்தாளை தேடத் தொடங்கினேன்.

(ஜனனி : 23.07.1995)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இப்படி???

தங்க முதலாளி சிவராமனைப் பார்த்தபோது மேசன் ஜெயத்துக்கும் கூலி வேலை செய்யும் கோணேசுக்கும் அதிர்ச்சியாக இருந்தது.



சிவராமன் பெரிய கட்டிட ஒப்பந்தக்காரர் அவரின் நம்பிக்கையான தலைமை வேலையாட்கள்தான் இவ்விருவரும் 'ஐயா இப்படி வேர்த்து களைக்க வேலை செய்ததை நான் பார்த்ததில்லை...' ஜெயம் சொன்னான்.

'அண்ணை... இனி இந்த கட்டிட வேலைக்கு இரண்டு கூலி ஆக்களின்ர வயித்தில அடிதான். விழப்போகுது பாருங்க... கோணேஸ் சொன்னான்.

இவர்கள் இருவரும் பேசுவது, அன்று கட்டிட வேலையை பார்ப்பதற்காக வந்திருந்த சிவராமனின் என்ஜினியர் மகள் பிரியந்திக்கு செவிப்பறைகளில் அறைவது போலிருந்தது அவளின் முகம் சிவந்தது. அவர்கள் முன் வந்து நின்றாள்.

'என்ன சொன்னீங்க... பிரியந்தியின் குரலில் ஆத்திரம் இருந்தது. அவதி இருந்தது. வேகம் இருந்தது.

இருவரும் தலையை குனிந்து கொண்டார்கள்.

'உங்கட வேலையில அப்பா ஒரு நாளும் மண்போட மாட்டார். அவருக்கு இப்ப கொஞ்சம் டைபிற்றிக். அதுதான் டாக்டர் சொன்னவர் உடம்பை வளைத்து நிமிர்த்தி வேலை செய்யச் சொல்லி எக்ஸசைஸ் என ஓடிக் களைத்து உடம்புக்கு உழைப்பைக் கொடுப்பதைவிட அப்பா உங்களோடு ஒருவராக நின்று உங்களுக்கு உதவவும்... தன்ர வருத்தத்தைக் குறைத்துக் கொள்ளவும் விரும்புகிறார். நீங்க நினைக்கிற மாதிரி அப்படி இல்லை.

பிரியந்தியின் சத்தம் சிவராமனுக்கும் கேட்டது.

வேர்த்து களைத்து வெறுந் தேகத்தோடு முகத்தில் அரும்பிய புன்னகையோடு நிமிர்ந்து பார்த்தார். ஜெயமும், கோணேசும் தங்கள் தலையை நிமிர்த்த முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

***(ஜனனி 30.12.1995)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடியாத தொன்று

**வா**சலில் தன் கணவனை மிக ஆறுதலாக இறக்கிவிட்டு மோட்ட சைக்கிளை ஸ்ராட் செய்த சிவராமனை மறித்தாள் மேரி.

'வாங்க... வீட்ட வந்திட்டு போங்களன். இப்ப இரண்டு நாளாய் பாக்கிறன். நீங்க ஏன் எங்கட வீட்டுக்குள வாரதில்லை. நாங்க ஏதும் உங்களுக்கு பிடிக்காத மாதிரி நடந்து கொண்டோமோ?



'மேரி அதுதான் நான் யோசித்தன். சிவராமன் இஞ்ச உங்களுக்குள வாறதில்லை. எங்கட நட்பு தெருவோர நட்பா?' மேரியின் கணவன் வேதனையோடு பெரிய கட்டுப் போட்டிருந்த தனது வலது காலை தூக்கி வைத்தான். மேரி அவனை அணைத்துப் பிடித்துக் கொண்டாள்.

மோட்ட சைக்கிள் விபத்தொன்றில் வலது கால் விரல் எலும்புகளை முறித்துக் கொண்டு நடக்க முடியாமல் அவதிப்பட்ட மேரியின் கணவனை மேரி கலியாணம் முடிப்பதற்கு முன்பதாகவே நண்பனாக்கிக் கொண்டவன் சிவராமன்.

விபத்து என்றவுடன் தன் உறவுகள் எல்லோரையும் விட்டு விட்டு முதன் முதலாக சிவராமனிடம்தான் மேரி ஓடி வந்தாள்.

அன்று தொடக்கம் அப்பப்போது முடிந்த உதவிகளை சிவராமனும் செய்து வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இந்த இரு நாட்களாகத்தான் சிவராமனிடம் இப்படியான ஒரு திருப்பம் இருந்தது.

ஏன் இப்படி...?

சிவராமன் யோசித்துப் பார்க்காமலேயே: அவன் மனைவி சிவரமணி அவனை ஆட்கொண்டிருந்தாள்.

எங்கட வேலை வெட்டிக்கு முகத்தை பார்க்காமலேயே போவிங்க. நான் வேற வேற ஆக்களின்ர காலை பிடிக்க வேண்டி இருக்கு. கோயிலுக்கு வாங்க என்றா மாட்டீங்க. நல்லது கெட்டதிற்கு நீ போ.... நான் போறன் என்பீங்க. எல்லா காரியமும் நான்தான் பார்க்க வேண்டி இருக்கு. ஆனா மேரி வீட்ட என்றா விழுந்து, விழுந்து செல்வீங்க. மேரி என்னை விட உங்களுக்கு இராசாத்தியோ? உங்களை...

சிவராமன் சிரித்துக் கொண்டான்.

'ஏன் சிரிக்கிறீங்க... வாங்க உள்ள...' மேரி அழைத்தாள்.

'இல்ல... இத்தனை நாளும் என்ற நெஞ்சில் எந்த வஞ்சகமும் இல்ல. உதவி என்றது மட்டும்தான் இருந்தது. இப்ப என் மனைவி என் நெஞ்சில நச்சு விதையொன்றை விதைச்சுப் போட்டாள். அதை நினைக்க... நினைக்க... உங்க வீட்டு முற்றத்துக்கும் ஏற பயமா இருக்கின்றது. முடியாததொன்றுக்கு பாதை போட என்னால முடியாது...'

சிவராமன் சொல்ல நினைத்தான். ஆனால் வார்த்தைகள்தான் வாயில் வரவில்லையோ!

'இல்ல... அவசர வேலை... பிறகு வாரன்...' சிவராமனின் மோட்ட சைக்கிள் புறப்பட்டது. மேரியும்: அவள் கணவனும் மோட்ட சைக்கிளின் பின்பக்கத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

**தினகரன் வாரமஞ்சரி 10.12.1995**

*************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலைச் சுருள்

அந்தப் பெண் அமைதியோடு நின்றாள். மற்றவர்களைப் போல் "ஐயா, பிச்சை... தருமம் தாங்கோ..." என்று அவள் கூப்பாடு போடவில்லை.

பாலேந்திரன் மேசையில் கிடந்த இரண்டு சத குற்றியொன்றினை அவளிடம் நீட்டினான். அவள் அதை வாங்கிக் கொண்டாலும் அவளின் குழி விழுந்த கண்கள் வெற்றிலைச் சுருள்கள் அடுக்கப்பட்டிருந்த



தட்டிலேயே இருந்தது.

அவளுக்கு சுமார் இருபத்திநாலு வயதிருக்கலாம். வெற்றிலைச் சாயமேறிய அவளின் செக்கச் சிவந்த உதடுகள் எதற்கு ஆசைப்படுகின்றனவோ!!

ஆனால், அது அவளுக்கு!!

இரண்டு பக்கமும் பார்த்தாள். ஒரு பக்கம் அவளின் மூத்த பெண் குழந்தை. ஆறுவயதுக்கு கூடிக் குறைந்து இருக்கலாம். மற்றப் பக்கம் பையன். வயது முன்னையதை விட ஒரு வயது குறைவாக இருக்கலாம்.

பாலேந்திரன், அந்த இரண்டு குழந்தைகளுக்கும் ஆளுக் கொவ்வொரு சதமாக பிச்சை போட்டு விட்டு நிமிர்ந்த போது...

"மேலுக்குப் போட சோப்பே இல்லை. ஏதும் இருக்கா தம்பி..."

"ஆனைப்பெட்டி இருந்தா தாங்க" என்ற இரண்டு குரல்கள் பாலேந்திரனின் "பிச்சை போடுதலை" தடை செய்தன.

"சவுக்காரம் இல்லை. ஆனைப்பெட்டியா..." ஆளை நிமிர்ந்து பார்த்துவிட்டு, நெருப்புப் பெட்டியில் யானை இருந்த பக்கத்தை மறைத்து மேசையில் வைத்தான் பாலேந்திரன்.

ஆனால் வாசலடியில்...

அதே பிச்சைக்காரி இன்னும் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

அவள் ஏன் இன்னும் நிற்கின்றாள்?

"உனக்குத்தான் காசு தந்தனே! வேறென்ன வேணும்... கடையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைக்கு வேண்டப்போறியா?"

பிச்சைக்காரியை உறுட்டிய பாலேந்திரனின் வார்த்தைகள் வெளியே போவதாகக் கூறிவிட்டு, அரைமணி நேரம் கழித்து வந்த சக கடை பையனையும் சுட்டது.

கடைப் பையன் பிச்சைக்காரிக்கும், பாலேந்திரனுக்கும் இடையில் நின்று கொண்டிருந்தான்.

"எடேய்... வெளியே போயிட்டு வர உனக்கு ஒரு மணித்தியாலமா வேணும்? அதுகளுக்கு என்ன வேணுமெண்டு கேள்?"

பாலேந்திரன் களைத்துவிட்டு ஸ்டூலில் அமர்ந்தான்.

"என்ன வேணும்... பிச்சையா..." மறுபடியும் கடைப்பையன் இரண்டு சத குற்றிகளை நீட்ட முற்பட்ட போது...

"காசு வேணாங்க... வெற்றிலைக்கூறு ஒன்று தாங்க..." மெதுவாக அவள் கேட்டாள்.

"காசு" பாலேந்திரனின் பதிலுக்கு பிச்சைக்காரி மௌனம் சாதித்தாள்.

"சும்மா தர இஞ்ச இல்ல... காசு எடு... ஒரு ரூபா ஐம்பது சதம்..."

பிச்சைக்காரி தன்னுடைய மகளைப் பார்த்தாள்.

"மகள் ஒரு ரூபா ஐம்பது சதம் வேணும்... வெற்றிலை கூறுக்கு..." பாலேந்திரனுக்கு அவள் பேசுவது கேட்டது.

அவள் ஏன் இதற்கு மகளைக் கேட்க வேண்டும்? தனக்கு வேண்டுமென்றால் வேண்டலாம் தானே!

ஒரு விநாடி தாமதம், பிறகு!

மகளின் அனுமதி அந்த பிச்சைக்காரத் தாய்க்கு கிடைக்கவில்லை போலும்... அவள் பரிதாபமான கோலத்தோடே கடை வாசலை விட்டு நகர்ந்தவள் மீண்டும் வந்தாள்.

"என்ன..." பாலேந்திரனின் குரலில் அமைதி இருந்தது.

ஒரு ரூபா ஐம்பது சதத்துக்கு ஒன்று இரண்டு, ஐந்து சதங்களாக எண்ணி எண்ணி... எடுத்த அந்தப் பிச்சைக்காரி "வெற்றிலைச் சுருள் ஒன்று" என்றால் மிகவும் பரிதாபத்தோடு.

பாலேந்திரனுக்கு அவளைப் பார்க்க பாவமாகவே இருந்தது. தன் மகளின் அனுமதி பெற்று, தன் ஆசையைத் தீர்த்துக் கொள்ள அந்த கண் வெட்டும் பொழுதுக்குள் அவள் பெரியதொரு போராட்டம் நட்டநடு வீதியில் நடத்தி இருக்கிறாள் என்பது பாலேந்திரனுக்கு தெரியாமலா போகும்?

ஆனாலும் அவனுக்கு ஆசை ஒன்று உதித்தது.

அவர்களைப் பற்றி அவர்களின் நிலை பற்றி அறிந்து கொள்ளும் ஆவல்தான் அது.

"நீங்க எங்க இருக்கிறீங்க?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தோப்பூர்"

"ஏன் இப்படி ஆனிங்க?"

"மழை இல்லாத காலம் போய்... மழை பெய்து வயலே அழிந்து போச்சு..."

பாலேந்திரன் விஷயத்துக்கு வந்தான். "சரி... உனக்கு வேண்டியதை ஏன் உன் மகளிடம் கேட்டு வாங்குகிறாய்? உனக்கு துணிவில்லையா...?"

பிச்சைக்காரியின் முகம் பிரகாசமானது. அவள் பேசலானாள். அவளது பேச்சில் அவளது பேச்சில் உண்மைகள் ஒலிக்கத் தொடங்கின.

அவளால் தன் பிள்ளைகளுக்கு சாப்பாடு கொடுக்க முடியவில்லை. பிச்சை எடுக்க வெளிக்கிட்ட பின்னர், சேரும் காசும் மூவருக்கே சொந்தம். இதில் தான் மட்டும் சொந்தம் கொண்டாடி தன் வீணான அசைகளை பூர்த்தி செய்ய அவளுக்கு எப்படி மனம் வரும்?

பாலேந்திரனுக்கு அதிர்ச்சியாகவே இருந்தது.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை அவன் கைகள், பிச்சைக்காரியின் காசை ஏற்காது வெற்றிலைச் சுருளை நீட்டியது.

**சிந்தாமணி : 1984**

**************

# சின்னக் குறும்பு

என்ர மருமகளின் கடைப்புதல்வன். பெயர் சிவரூபான்.

என்னிடம் ஒருநாள் பட்டம் வாங்கித் தருமாறு கேட்டான். அடுத்த வருடம் ஆரம்ப பாடசாலைக்கு கல்வி கற்க போக வேண்டியவன். கொஞ்சம் சுறுசுறுப்பானவன். மழலை மொழி வார்த்தைகளை அள்ளி வீசுவான்.



'நான் ஒரு சின்னக் கணக்கு கேட்பேன். நீங்கள் சரியாகச் சொன்னால் இரண்டு பட்டங்கள் வாங்கித் தருவேன்' என்றேன்.

சிவரூபனும் 'ஆம்' என்றான்.

நான் சொன்னேன் 'ஒரு பட்டம் ஒரு ரூபாய் ஐம்பது சதம். அப்ப இரண்டு பட்டங்களின் விலை என்ன...?

'ஒரு பட்டம் ஒரு ரூபா ஐம்பது சதம்... ஒரு பட்டம் ஒரு ரூபா ஐம்பது சதம்.. அப்ப இரண்டு பட்டம் அப்ப இரண்டு பட்டம்... இரண்டு ஒரு ரூபாய் ஐம்பது சதம்... சரிதானே...'

எனக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. அவன் சொன்னதும் சரிதானே!

**(தினக்குரல் 1994)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடை வள்ளல்

அன்று ஒரு வெள்ளிக்கிழமை



வழமையாக வெள்ளிக்கிழமைகளில் பிச்சை இடுவது அந்த திருகோணமலை சின்னக்கடைத் தெருவின் பழக்க வழக்கங்களில் ஒன்று.

இரண்டு பிச்சைக்காரர்கள் வந்தார்கள் ஒருவர் முன்னுக்கு வந்தார். மற்றவர் பின்னுக்கு வந்தார்.

உண்மையில் அவர்கள் பிச்சைக்காரர்கள் தான் கொழும்பு நகரங்களில்... அந்த கொச்சிக்கடை அந்தோனியார் கோவிலடி பிச்சைக்காரர்கள் போல தொழில் ரீதியான பிச்சைக்காரர்கள் அல்ல அவர்கள்.

இரண்டு பேர்களும் கைகளை நீட்டினார்கள்.

"ஐயா... சாமி... பிச்சை போடுங்க... தருமம் தாருங்க... ஐயா...

இருவரும் ஒரே குரலில் இராகம் பாடினார்கள்.

அவர்களின் வயிறு அந்த இராகத்தை அவர்களிடம் இருந்து... தொடர்ந்தும்.... தொடர்ந்தும்... உண்டாக்கிக் கொண்டே இருந்தது.

ஒரு கடையின் முன்னால் மீண்டும் அதே இராகம் அதே பல்லவியில் ஒலித்தது.

கடும் வேலையில் இருந்த கடைக்காரன் வேண்டா வெறுப்போடு... "பிச்சை போடுறதுக்கு என்று சம்பளத்தில், ஆள் பிடிச்சு வைக்க வேண்டி இருக்கிறது என்று சினந்தபடி...

லாச்சியை இழுத்து மூடி... ஐம்பது சத நாணயக் குற்றியினை நீட்டினான்.

"நீ இருபத்தைந்து சதம் எடுத்துக் கொண்டு மற்றதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் கொடு...

முன் நின்று பிச்சைக்காரர் ஐம்பது சத நாணய குற்றியை வேண்டி, தன்னிடம் இருந்த இருபத்தைந்து சத குற்றியை பின்னால் நின்ற பிச்சைக்காரனிடம் நீட்டினார்.

அப்போது தான் அந்த பிரளயமே அவர்களிடம் ஏற்பட்டது. பின்னவர்: முன்னவரை ஆத்திரத்துடன் முறைத்துப் பார்த்தார்.

நீர்... உம்மட வேலையைப் பாருமய்யா இத தந்தவரிட்ட கொடு... நான் அவரிட்ட வேண்டுறன்..."

முன்னவர் பின்னவரை ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு கடைக்காரனிடம் இருபத்தைந்து சத குற்றியை நீட்டினார்.

கடைக்கு வந்தவர்களுக்கு பொருட்களைக் கொடுப்பதிலும், வழமையாக பன்னிரெண்டு மணிக்குள் முடியும் அந்த சின்னக்கடை வியாபாரத்தை பிடிப்பதிலும் வலு அக்கறையாக இருந்து கொண்டிருந்த கடைக்காரனுக்கு...

'மீண்டும் பிச்சைக்காரர் காசை நீட்டியது இன்னும் கோபத்தை ஊட்டி இருக்க வேண்டும்.

உன்னட்ட தான் சொன்னன். அதை பின்னுக்கு நிற்கும் ஆளுக்குக் கொடுக்கச் சொல்லி... ஆளையே கொல்லுறியளே...."

முன்னுக்கு நின்ற பிச்சைக்காரர் மிக - மிக- ஆறுதலாக, அமைதியாகவும் தன் தாடியை தடவிக் கொண்டே சொன்னார்.

"ஐயா--- ஆத்திரப்படாதீங்க... உங்களிடம் இருந்தே பிச்சை பெற அவர் விரும்புகிறார். என்னிடம் இருந்து அவர் பிச்சைபெற விரும்பவில்லை"

இப்போது "பிரளயம்" கடைக்காரனுக்கு ஏற்படத் தொடங்கி விட்டது.

கடைக்காரன் அந்தப் பிச்சைக்காரரை மிக அதிசயமாகப் பார்த்தான். அதைவிட பின்னால் நின்ற பிச்சைக்காரர் இன்னும் அதிசய மனிதராக அவனுக்கு தெரியலானார்.

"ஐயா பிச்சை போடுவது நீங்க இந்த பிச்சைக்காரன் இல்லை. பிச்சைக்காரனிடம் இருந்து பிச்சைக்காரன் பிச்சை வேண்டுறது எங்கையும் நடக்கிறதில்லை.

'நீங்களே உங்கட கையால்... அந்த பிச்சைக் காசைத் தாங்க" பின்னவர் சொன்னார்.

அதிர்ச்சியும், வியப்பும், ஒருங்கே கலந்த கடைக்காரன் மௌனமாக அந்த பிச்சைக்காரரின் கரங்களில் இருபத்தைந்து சதக் குற்றியை வைத்தான்.

**சிந்தாமணி : 1993**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொங்கலுக்காக வல்ல...

**பொ**ங்கல் காலை... விடிந்து விட்டது. விடியுமுன் நீண்டிருந்த 'இரவின் இனிமையில்' அவன் மிதக்கின்ற போதும்... அந்த 'நினைவுகள்' தான் அவனோடு ஒன்றித்து நின்றன.

ஏன், முதலாளி எனக்கு சாரன் வாங்கித் தரவில்லை?... என்பது அவனின் 'நினைவுகள்' மட்டுமல்ல பாரிய எதிர் பார்ப்பும் கூட.



படுக்கப் போக முதல் கடையை நன்றாக தண்ணீர் ஊற்றி, கடைப்பெடியளோடு அவன் சுத்தம் செய்த போதும்... முதலாளியை பலமுறை நோட்டம் விட்டும் பார்த்தான். முதலாளி அவனது பார்வைக்கு மசிந்த தாகவோ...' என்ன பார்க்கிறாய்?' என்று கேட்டதாகவோ இல்லை.

பொங்கலுக்கென்று கடைப்பெடியள் மூவருக்கும் முதலாளி விதம் விதமான சாரன்களும், சேட்டுக்களும் எடுத்துக் கொடுத்திருக்கிறார் என்ற செய்தி இரண்டு நாட்களுக்கு முன்பாக அவனுக்கு தெரிந்த போது... அவன் அதற்காகக் கவலைப்படவில்லை. ஒரு வாரத்திற்கு முன்பாகவே முதலாளியிடம் சாரன் வாங்கித் தருமாறு அவன் கேட்டிருந்தான்.

ஆனால் அதை சட்டை செய்யாமல் முதலாளி இருப்பது... விடிந்துவிட்ட இந்த 'பொங்கல் காலை' வரை பொறுத்துப் பார்த்தான் அவன். இனியும் அவனால்...

'பொங்கல் நாத்தில என்னடா குறட்டை?'... முதலாளியின் அதட்டல் முன்னுக்கு இருந்து பின்னுக்கு வந்தது. அவனும் எழுந்தான்.

கடைக்குள் பொங்குவதற்கான ஆயத்தங்கள் ஆரம்பித்து விட்டன. கடைப்பெடியள் மூவரும் குளித்து முன்னுக்கு வந்து விட்டார்கள். ஆனால்...

கடைப் பெடியளுக்குள்ளும் ஒரு வித பரபரப்பு ஏற்படத் தான் செய்தது. ஏன் முதலாளி பாலேந்திரனுக்கு பொங்கல் உடுப்பு வாங்கிக் கொடுக்கவில்லை...' முதலாளியிடம் கேட்க யாருக்கும் துணிவில்லை.

பொங்கலுக்கான வேலைகளில் அவர்களும்...

'பாலேந்திரன் எங்கே?' ... முதலாளிக்கு அப்போதுதான் பாலேந்திரனின் நினைவு வந்திருக்க வேண்டும். கடைப்பெடியன் ஒருவன் பின்னுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய் விட்டு வந்தான்.

'பாலேந்திரன் கிணற்றடியில் நிற்கிறான்.'

'ஏன் குளித்து விட்டுவர இவ்வளவு நேரமோ?'... முதலாளியின் அதட்டலில் ஒரு நிறைவு இருந்தது.

வந்தவன் கண்களை உருட்டி முழுசினான். உருட்டிலின் விடைகளை எப்படி முதலாளிக்கு அவனால் சொல்ல முடியும்?

'என்னடா முழுசுறாய்?' முதலாளி கேட்ட வேகத்தோடு பின்னுக்கு வந்தார். அப்போது... பாலேந்திரன் ஆரஅமர கிணற்று படிக்கல்லில் அமர்ந்திருப்பது அவருக்குத் தெரிந்தது.

'என்னடா செய்யிறாய்? முதலாளி கோபத்தோடு அவனை அண்மித்த போது...

அவராலேயே 'அந்தக் காட்சியை' ஜீரணிக்க முடியவில்லை. அப்படியே நின்று விட்டார்.

'கடை வேலைக்கு ஆள் கூடிப் போச்சு. இந்தப் பொங்கலோடு பாலேந்திரனை நிற்பாட்டிப்போட வேண்டும். இதுக்குள் ஏன் அவனுக்கு 'பொங்கல் உடுப்பு' வாங்கி நட்டப்படவேணும். என்ற எண்ணத்துடன் தான் அவர் பாலேந்திரனுக்கு 'பொங்கல் உடுப்பு' பற்றி கவலைப்படாது இருந்தது... எவருக்குமே தெரியாததொன்று.

ஆனால் அதைத்தெரிந்த முதலாளி? பாலேந்திரனின் வாழ்வைச் சுற்றிய 'நிழல்' அவர் மீதும் படிந்து விட்டதா?

முதலாளியைக் கண்டதும் பாலேந்திரன் எழுந்து நின்றான். அப்போதும் அவனிடம், சாரன் வேணுமென்று கேட்கும் திராணியில்லாத நிலை...

'இதை நீ முன்பே சொல்லி இருக்கலாம்தானே, இந்தப் பொங்கலோடு உன்னை கடையில் இருந்து நிற்பாட்ட யோசித்தேன். அதனால் தான் பொங்கலுக்கு உடுப்புக்கள் ஏதும்...' முதலாளி முடிக்க முதல்...

கௌபீனத்தோடு நின்று...

தோய்த்துப் போட்ட 'சாரன்துண்டு' காயுமட்டும் காத்திருந்த... பாலேந்திரன் சொன்னான்.

'முதலாளி, நான் உங்களிடம் ஒரு கிழமைக்கு முன்பாகவே சொன்னேன். சாரன் வாங்கித் தருமாறு நான் பொங்கலுக்குச் சாரன் வேணுமென்று சொல்லவில்லை. மாற்றிக் கட்டத்தான் சாரன் இல்லையென்று சொன்னன். அது...'

முதலாளியின் கண்களுமா கசியத் தொடங்கிவிட்டன.

**வீரகேசரி வாரவெளியீடு 14.01.1979**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பத்தைந்து சதம்

விழுந்து எழுந்ததால் முழங்கால் காயம். காளிக்கு எரிவு... இன்னும் முப்பத்தைந்து சதம் வேணும் "காயத்தின் எரிவோடு, காசு தேவை எரிவும். இப்போது சேர்ந்து கொண்டது.

பஸ் ஸ்டாண்டில் வித்தைக் காரனின் கூட்டத்துள் புகுந்து கொண்டு முன்னே வந்த போது... "சுனில்" நின்ற நோக்கத்தை இனம் கண்டு கொண்டான். ஆனாலும் இதயத்தின் நேரக்கோடு அந்த முப்பத்தைந்து சதத்தில்தான் இருந்தது.

சுனில் மெல்ல கண்களை காட்டி சிமிட்டினான். காளி ஒரு கிழமைக்கு முன்னர்தான், களவெடுத்து அழுத கதை நினைவுக்கு வந்தது. சுனிலின் பார்வையிலிருந்து தப்புவதற்காக பீடாக்காரக் காதரின் அருகில் அமர்ந்து கொண்டு வித்தைக் காரனின் வித்தைகளைக் கவனிக்க லானான். ஆனால் முப்பத்தைந்து சதம் வேண்டுமே...

நாலு நாளைக்கு முந்தி, தன்னிடம் ஏழு மாத குழந்தையைத் தந்துவிட்டு வேலைக்குப் போவதாக கூறிவிட்டுப் போன தாயும், ஒரு ரூபாய் தந்தால் தான் உன் தம்பிக்கு பால் தருவன் என்று பிடிவாதம் பிடிக்கிற சுனிலின் தாயும் - காளியின் அந்த முப்பத்தைந்து சதத்திற்குள் சிதறிக் கொண்டிருந்தார்கள். "உங்களை யெல்லாம் பன்றிக்குட்டிகள் மாதிரி பெத்துப் போட்டுட்டு" ... பீடாக் காதர் அதட்டினான். "சுனிலிடம் கேட்டால் என்ன" .... யோசனை தட்டுப்பட்டது. ஆனால் சுனில் அங்கில்லை. பீடாக்காரன் தான் தஞ்சம். காளி கேட்டான். "காதர் நானா, சுனிலின்ற அம்மாக்கு ஒரு ரூபாய் கொடுக்க வேணும், முப்பத்தைந்து சதம்" குறையிது, நாளைக்குத் திருப்பித் தாறன்."

"மூதேசி, போடா, அங்கால"... காதரின் ஏச்சு காளிக்கு



உச்சந்தலைக்கு மேல் கோபம் வந்தது. காரியம் ஆக வேண்டுமே.

திரும்பவும் கெஞ்சினான்.

"போடா அங்கால". கால் இடறி விழுந்த போது அவனது கைக்குள் ஐம்பது சதக் குத்தியொன்று வந்து விழுந்தது. காளி எடுக்கும் போது சுனில் நின்றிருந்தான். ஆனால் சுனிலின் பார்வை, அந்த வித்தைக் காரனின் வித்தையிலேயே இருந்தது.


**புதுமை நெஞ்சம் - 1976/ஐப்பசி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயவிமர்சனம்

"மக்களிடமிருந்து நாம்
படிப்பதை மக்களுக்கே .
கொடுக்கின்றோம்."....



எழுத்தாளர் ஆறுமுகன் வெட்டிப் புடுங்கி தன் பேச்சினைத் தொடர்ந்த போது.... சமூக சேவைக் கட்டிடமே அதிர்ந்தது.

"இஞ்ச மச்சான் எழுத்தாளன் என்டால் இப்படித்தான் இருக்க வேண்டும். மக்களைச் சரியா புரிஞ்சவங்க தான் எழுத்தாளர்கள். ஆறுமுகனுக்கு நிகர் இஞ்ச யார் இப்ப"

நான் அமைதியாக ஆறுமுகனின் பேச்சினைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன்.

"பெண் அடிமைத் தனத்தை இந்தத் தரணியிலேயே முற்றாகக் களை புடுங்க வேணும். பெண் என்பவளை பிள்ளை பெறும் சாதனமாக மதிக்கின்ற இந்த சமுதாய அமைப்பையே மாற்ற வேண்டும்.

நான் சிரிப்பை அடக்க முடியாது வாயைப் பொத்துக் கொண்டேன். என் பக்கத்திலிருந்த தோழர்... "என்ன, ஏன் சிரிக்கிறாய்".. என்றார்.

"மச்சான்: இந்த ஆறுமுகனை நேற்று கோட்டில பாத்தன், யாரோ பெட்டையைக் கெடுத்துப் போட்டு தலை குனிஞ்சு நிற்பதை"

உண்மையா?

"அப்ப, இன்றைய எழுத்தாளர்கள் எல்லாம் முதலில் தங்களை ஒருக்கா சுயவிமர்சனம் பண்ணிப் போட்டு - எழுத வெளிக்கிட்டா நல்லம்"

சொல்லிவிட்டு எழுந்து கொண்டேன். ஆறுமுகம் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

புதுமை நெஞ்சம் - 1975/தை

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் நாங்களும்



அன்றைய ஞாயிற்றுக்கிழமை செய்திப் பத்திரிகையின் முதல் பக்கத்தில் மேய்ந்து கொண்டிருந்தேன் என்னையறியாமல் என்னுள் ஏதோ ஆவேசம். மனிதம் வழிதவறும் போது கலியுகத்தின் ஆயுளும் முடியப்போகின்றது என்பது போன்ற ஆவேசமான உணர்வு.

நான் அறியாமலேயே என்னைக் கூர்ந்து பார்த்த 'பியசேன' என்னஐயா... 'என்ன பேப்பரில்.....'

நான் நிமிர்ந்து பார்த்தேன் கையில் துப்பாக்கியுடன் சிரித்த முகத்துடன் பியசேன....

பியசேன ஒரு பொலிஸ்காரர் நரைத்த மீசை வந்தும் பென்சனுக்கு போகாத இளைஞர்.

'கிளைமோர் வெடித்தது. அப்பாவி சனங்கள் இராணுவத்தினரின் சன்னங்களால் உயிர்துறந்தது செய்தியை விரிவுபடுத்திச் சொன்னேன்.

'எனக்கு தெரியும்....' என்றபடி பியசேன என்னைக் கூர்ந்து பார்த்தார்.

'என்ன தெரியும் கிளைமோர் வைச்சவனை தேடிச் சுட வேண்டியது தானே பாவம்... அப்பாவிச் சனத்தை சுட்டு பொசுக்குவதென்றால் நீங்கள் மனிசரா அல்லது அரக்கரா...? கேட்க வேணும் போல் இருந்தது ஆனால் பியசேனவிடம் அப்படிக் கேட்க முடியாது. ஏனென்றால் அவரோடு பழகி ஒரு கிழமைதான் இருக்கும். மனித பண்பு, மனித தனம் அவரிடம் நிரம்ப இருப்பதை பல தடவைகள் கண்டு இருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவித்தனமான என்முகம் அவருக்கு பரிதாபத்தை உண்டாக்கி இருக்க வேண்டும்.

'உங்கட வருத்தம் உங்கட செஞ்சில உள்ள கேள்விகள் எல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் சுட்ட எங்கட ஆக்களில் நீங்க பழி போடுறது சரி இல்லை...' என மெதுவாக சொன்னான்.

'இப்ப இந்த இடத்தில் ஒரு கிளைமோர் வெடிச்சது என்று வையுங்க.... உங்கட உயிருக்கும் பாதுகாப்பு இல்லை. நடந்து முடிஞ்சதோடு நான் உங்களை நினைச்சு மனம் வருந்துவதுதான்..... ஏனென்றால்.... நாங்க எங்கட குடும்பத்தைக் காப்பாற்ற கடமை செய்யிறனாங்க இது உங்க ஆக்களும் எங்கட ஆக்களும் பேசித் தீர்க்க வேண்டிய விஷயம்.'

பியசேன சொல்லுவது சரியா?

வானத்தை நிமிர்ந்து பார்க்கிறேன் கடற்படைத் தளத்தை நோக்கி விமானமொன்று பறந்து செல்கின்றது.

**(கலைஓசை மார்கழி 2006)**

# பொய்

சிவராமன் பதில் சொன்னான்.

"சாப்பாடு செய்யிற விசயத்தில என் மனைவிக்கு கொஞ்சம் பஞ்சித் தனம் பாருங்க..."

கேட்டவர் உறவினர். அவர் போய் விட்டார்

அடுத்த நிமிடம்...



மனைவியின் "செல்" தாக்குதல்கள்...

பீரங்கி... விமான தாக்குதல்கள்...

தாக்குப் பிடிக்காமல் தடுமாறி அகதியாக ஓடநினைத்த சிவராமன் நினைத்துக் கொண்டான். உண்மை மட்டுமல்ல. சில நேரங்களில் பொய்யும் பேசத் தெரிந்திருக்க வேண்டுமென்று...


**தினமுரசு : 16.12.1995**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்.... அவள்...

ஒரு கணவன், மனைவி நடுச் சாமம் கண்விழித்தான் கணவன். கட்டிலில் மனைவி இல்லை. அவள் முன் விறாந்தையில் தனியாக படுத்திருப்பதை அவன் கண்டு கொண்டான்



காலையில் அவன், அவளைப் பார்த்தான்.

அவனின் பார்வை அவளுக்கு விளங்கியது.

நாம் படுத்த கட்டிலில் ஒரே எறும்பு அதனால் இங்கே வந்து படுத்தேன்...." என்றாள்.

கணவன் பதில் சொல்லவில்லை. மனதுக்குள் சிரித்துக் கொண்டான். நாம் படுத்த கட்டிலில் எறும்பு என்றாளே! அந்த எறும்பு ஏன் என்னைக் கடிக்கவில்லை. சரி எறும்பு இருந்தால் என்னை எழும்பி, விரிப்பை உதறி மீண்டும் படுத்திருக்கலாமே.

எறும்பு என்பது அவனுக்கு பொய்யாகவே பட்டது அன்று நடந்த வாய்த்தக்கம் தான் உண்மையாகப்பட்டது. "என்ன ஏன் சிரிக்கிறியள்....? என்றாள் மனைவி.

அவன் சொன்னான்.........

"பொய்யை சொன்னால் உனக்கு சந்தோஷம்.

உண்மையைச் சொன்னால் உனக்கு கோபம் வருமே....?

அன்று நடந்த வாயத்தர்க்கத்தை அவளுக்கு நினைவூட்டினான். அவள் மௌனியானாள். அவள் உடம்பு முழுவதும் எறும்புகள் ஊர்வன போல..... ஊர்வன போல.......

தன்னை மறந்து அவள் அவனைப் பார்த்தாள்.

சிரித்தாள் இது.....

அவன்.... நானா...

கதிரவன்
05.05.2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி



"விமலா கனடாவில் இருந்து தொலைபேசியில் கதைச்சவள்........"

"ஓம்.... போய் ஆறுமாதமாகப் போகுது இப்பதான் உன் நினைவு வந்திருக்கு...."

"சும்மா போங்கப்பா.... அவ: அவையளுக்குத்தான் அவ, அவையள் கஸ்டம் தெரியும்..."
"அப்படி என்ன கஸ்டமாம்....."

"யுத்த பூமியில் இருந்து உயிரைக் காப்பாற்ற பொய்யாக நாடகமாடி "சுனாமியை கேவலப்படுத்தினதிற்கு நன்றாய் அனுபவிக்கினமாம். கலாச்சார மாற்றம் நாளுக்குநாள் ஆளைக் கொல்லுதாம். பிறந்த பூமியில் பிச்சைக்காரராய் சாவது மேலாம்....."

அவன் சிரித்தான். அவள் அவனை கேள்விக் குறியோடு பார்த்தான்.

"யுத்த பூமி - சுனாமி - கலாச்சார மாற்றம் - பிறந்த பூமி.... பிச்சைக்காரர்.... நல்ல வார்த்தை ஞாலங்கள்......"

"என்ன சொல்லுறியள்....... உங்கட பரிபாஷை எனக்குப் புரியவில்லை....."

"இஞ்ச பார்....... ஆறுமாதம் கழிச்சு கதைக்கிறதுக்கு ஒரு காரணம் வேணும்.... தங்கள்; தங்கள் வசதி வாழ்வை மறைக்க இன்னொரு காரணம் வேணும்.... நீ உன்ர தங்கச்சியிற்ற ஏதும் கேட்டுப் போட்டால் அதை மறைக்க வேறொரு காரணம் வேணும்...... அதுக்கு......."

அவள் அதிர்ச்சியோடு அவனைப் பார்த்தாள்.

**(கலை ஓசை : மார்கழி . 2006)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானோதயம்

காலடி எடுத்து வைக்க முடியவில்லை. கண்களும் பார்வையின் கூர்மை எரிந்து கொண்டிருந்தன. யாரோ தந்துவிட்டுப் போன சாப்பாட்டுப் பார்சல், தகரப் பேணி, கந்தல் மூட்டை ஒரு பிச்சைக்காரனுக்குரிய சகல அடையாளங்களுடன் நான் சிவன் கோவிலடி மகிழ மரத்துடன் சாய்ந்து கொண்டிருந்தேன். நாலைந்து ஆட்டோக்கள், இரண்டு சைக்கிள்கள், என்னைப் போல இரண்டு பிச்சைக்காரர்கள், ஒரு தும்பு முட்டாசுக்காரன், சிவன் கோவில் குருக்கள் வீட்டுப்பிள்ளையோடு விளையாடிக் கொண்டிருக்கும் கோவில் வேலை செய்கிற பழனி............................ மகிழமரம் ஆடிக்கொண்டு தான் இருக்கின்றது.



உயிர்களும், சடப்பொருள்களும், அதன் ஆட்டம் தந்த குளிர்மையில் ............. ஆனந்தித்துக் கொண்டு இருக்கின்றன. இருக்கின்றது.

நானும் ஆனந்திக்கின்றேனா? இல்லை.....

"பாவா என்ன இன்றைக்கு கடுமையான யோசனையோ..." பழனி தான் என் கவனத்தை திருப்பினான். நான் யாருடனும் பேசுவதில்லை என்பதுவும் தனக்குத் தானே பேசி மகிழ்பவன் என்பதுவும் பழனிக்குத் தெரியும்.

நான் அவனைப் பார்க்கின்றேன். என் மழுங்கிய கண்களின் கூர்மை பழனியைக் குத்தியது. "பாவா... சாதம் இருக்கு சம்பல் இருக்கு மோதகம் இருக்கு... "பழனியின் குரல் எங்கோ ஆழமான கிணற்றில் இருந்து வருவது போலிருந்தது.

"இந்தாரும் கடவுளின்ரபடி...." எனக்கு பக்கத்தில் இருந்த உணவுப் பொதியை தட்டிக் காண்பிக்கின்றேன். பழனி என்னருகில் வந்தமர்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்களின் குழந்தை "பாவா... பாவா..." மழலை மொழி பேசியது. இருபது ஆண்டுகளுக்குப்பின் கும்பாபிஷேகமாகிய சிவன் கோவிலுக்கு பிரதம குருவாக வந்து ...இன்று...... மூன்று கொடியேற்றங்களை கண்டு விட்ட பிரதம குருவின் முதல் வாரிசு தான் அந்த மழலை.

"சிவனாரின் புத்திரியே சுகமா...." என் கண் பேசியது. "என்ன பாவா நீங்கள் தான் யாருடனும் பேசுவதில்லை. என்னோட மட்டும் தான் பேசுவியல்... இன்றைக்கு அப்படி என்ன பேச்சு... "பழனி வெற்றிலையை குதப்பிய வண்ணம் தன் வயிற்றில் பெருத்திருக்க கட்டியினை தடவி, தடவி என்ன முகம் பார்த்துக் கேட்டான்.

இரண்டு மாடுகள் கோவில் கவரோடு இருந்த தொட்டியில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தன. நானும் அதிகாலை எழுந்து அந்த கொட்டி தண்ணீரில் தான் குளித்து கோவில் குளத்தங்கரையில் மலசலம் கழித்து..... இதுவெல்லாம் காலையில் சிவன் கோவில் வெளிவீதி துப்பரவாக்கும் பழனிக்குத் தெரியும் அத்தோடு....

அவனுக்கு என் கதை தெரியும் அவனுக்கு நான் எதையும் ஒளிப்பதில்லை "பழனி... எனக்கு இன்றைக்கு செரியான மனவருத்தம்.... "என வார்த்தைகளை பழனி விழுங்கிக் கொண்டிருந்தான்.

"பாவாக்கு மனவருத்தமா???

ஐம்பது கடை ஏறி இறங்கி இருப்பன் ஐம்பது சதம் தாறதுக்கு இந்த கடைக்காரர்கள் எத்தனை கேள்விகளை கேக்கிறாங்கள்...."

அப்படி என்ன.... யார்... உங்களிட்ட கேட்டது...? பழனி கொஞ்சம் ரோசக்காரன் தான். இவனின் ரோசம்.... என்னைப் பற்றி தெரிந்தவன் என்பதால் தான் என்பது எனக்குத் தெரியும். "நீங்க எவ்விடம்..... உங்களுக்கு மனைவி இல்லையா.... பிள்ளை குட்டிகள் இல்லையா..... எங்க தங்குவியள்..... ஒரு நாளைக்கு எவ்வளவு பிச்சை எடுத்து சம்பாதிப்பியள்... குடிக்கிற நீங்களா?.... பழனி இவையள் இன்றைக்கு ஒரு கடைக்காரனிடமிருந்து வந்த கேள்விகள். நான் அவன் தாற ஐம்பது சதத்துக்கு என்ர கதையை விற்க வேண்டும் என்ன.......... அ .......?

பழனியின் கண்கள் சிவந்தன. அவனின் கறுத்த மேனி பளபளத்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய மங்கிய கண்களுக்கு அப்படித்தான் அவன் தெரிந்தான்.

கோயிலுக்குள் ஒளிக்கப்போன உங்கட மனைவி சூடுபட்டு போனது இரண்டு: மகன்களும் வீரமரணம் எய்தியது கிடந்த வீடும் காணியும் காடாகப் போனது. வயிறு கழுவ ஊர் ஊராய் திரிந்தது.............

பொன்னுத்துரை பாவாவாக மாறி..... பிச்சைக்காரனாகியது.... பழனி எழுந்தான். பாவா யார்...... எந்த கடைக்காரன்... உங்களிட்ட.....

பழனி, ஆத்திரப்படாதே பிச்சைக்காரன் என்றால் இப்படித்தான். இதுக்கெல்லாம்... நாங்களே வெட்கம் கெட்டனாங்கள்..... ரோசம் பொத்துக் கொண்டு வந்தால்.... நான், என்ர மனைவி, பிள்ளைகள், வீடுவாசல், காணிபூமிகளை இழந்த பின் பிச்சைக்காரனாக பாவாவாக மாறியது தான் பிழை. நான் பெரிய பிழையே விட்டுட்டன்....? என்னை அறியாமல் தேம்பத் தொடங்கினேன். கண்ணீரும் கசிந்தது.

பழனிக்கு புரியவில்லை. பாவா அழுவது அவனுக்கு புதுமையாக இருக்கலாம். பாவா வெட்கப்பட்டு, வெட்கப்பட்டு, நிலம் பார்த்து, நிலம் பார்த்து அழுதவன் உள் அர்த்தம் பாவம் பழனிக்கு இன்னும் தெரிய நியாயம் இல்லைதான். அவனும் அதை தெரிந்தால் என்ன....?

"பாவம்....... ஏன்... பாவா ஏன்....? பழனி என்னருகில் வந்தான். மகிழமரக் காற்று..... அந்த சுதந்திர சமாதான காற்றின் சூழலிலே......

அந்த உண்மையை, அந்த பிழையை சொல்ல நான் வாயெடுத்தேன்" ............. மனித வெடிகுண்டுகள் மூலம் அதிரடி தாக்குதல்..... ஐம்பது பேர் வரை மாண்டனர்....... சிவன்கோவிலுக்கு முன்னால் உள்ள "சிவன்ஸ்ரோலில்" இருந்து வானொலியின் குரலொன்று.........

பழனி என்னைப் பார்த்தான்

நான் தலையாட்டினேன்.

"பொன்னுத்துரை மனித வெடிகுண்டாக மாறாமல்....... பாவா என்ற மாமிசபிண்டமாக மாறியது தான் பிழை....... என்பது இத்தனை நாள் பழகிய பழனிக்கு தெரியாமலா போகும்.

**கதிரவன் : 20.05.2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வங்கள்

யசோதா முடிவெடுத்து விட்டாள்.

அந்த முடிவு அவளுக்கு மாளிகை போன்ற வீடு இருக்கின்றது. அவளது பெயரில் வங்கியில் லட்சக் கணக்கான ரூபாய்கள் இருக்கின்றன. நூறு பவுனை தாண்டும் தங்க நகைகள்...



அழகு அறிவு எல்லாம் அவளிடம் இருந்தும்... இருந்தும்.... "உனது முடிவு எல்லாவற்றையும் இழக்க வேண்டிவரும். தாய், தகப்பன் உறவை துறக்க வேண்டி வரும்" இது அவளின் தாயின் யோசனை வார்த்தைகள்.

உனது அப்பா லேசுபட்டவர் அல்ல உனக்கு இருக்கிற தமிழ் மண், தமிழ்சனம் என்பதில் மிக, மிக தீவிரமானவர். நான் அவரை மணம் முடிச்சு ஐம்பதாம் ஆண்டில் இருந்து இன்றுவரை தமிழரசுக் கட்சியோடேயும், தமிழர் விடுதலைக் கூட்டணியோடேயும், திரிஞ்சவர். இயக்கங்களுக்கு பின்னால இருந்து உதவி செய்தவர் இயக்கங்கள் தோன்ற முன்னரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிரவாத இளைஞர்களோடு சேர்நது இந்த மண்ணில் பெரும்பான்மையின ஊடுறுவலை தடுக்க போராடினவர். இப்படிப்பட்டவரின் வார்த்தைகளை கேளடி யாசோதா.....

அம்மா யாசோதாவை யோசிக்க வைக்கவும் வரலாறுகளை கூறி யசோதாவை தம் பிடிக்குள் அகப்படுத்திக் கொள்ளவும் மூன்று வருடமாக போராடிக் கொண்டுதான் இருக்கின்றாள்.

யசோதா அவர்கள் எங்களுக்கு தெய்வங்கள் அம்மா எங்கள் இனத்தை காக்க எம் மண்ணைக்காக்க தம் உயிரை துச்சமென மதித்த தெய்வ விக்கிரகங்கள் அவர்கள் அம்மா உலகத்தை காப்பாற்ற சிவன் நஞ்சை தொண்டையில் தாங்கினார் இவர்கள் எம் இனத்தைக் காப்பாற்ற மனித அடக்கு முறைகளை அடையாளம் காட்ட சயனைற் குப்பிகளை தொண்டைக் குழியில் சுமந்தவர்கள் அம்மா நாங்கள் அவர்களை தெய்வங்களாக பூசிப்போம் என்னால் அவர்களை மனிதர்களோடு மனிதர்களாக பார்க்க முடியவில்லை அம்மா...

அப்பா கோபத்திலும் ஆறுதலாக பேசிய வார்த்தைகள் இவை அம்மாவையும், அப்பாவையும் நினைத்து நினைத்து யசோதா வாய்விட்டு சிரிக்காமல் கண்களால் மட்டுமே அவ்வப்போது சிரித்துக் கொண்டாள். மனித தெய்வங்களாக மாறி அசுரவதம் முடித்து பின்னர் மீண்டும் மனிதர்களாக மாறித்தானே ஆகவேண்டும். அசுரவதம் முடிந்த பின்னர் தெய்வங்களாக இருக்கவே முடியாது. தெய்வங்களாக இரக்கும் போது எத்தனை பூசை புனக்காரங்கள் செய்தோமோ அவர்கள் மனிதர்களாக வாழ வரும்போது அதே பூசை புனக்காரங்களை அவர்களுக்கு செய்து தானே தீரவேண்டும். யசோதா பலதடவைகள் கூறிவிட்டாள் கூறும் போது கூறும் போது அவள்... அவள்... பத்திரகாளி ரூபத்தில்....

"இவள் எங்களுக்கு அடங்காத பிள்ளையாக போயிருக்கிறாள் யசோதாவின் பத்திரகாளி ரூபம்.... அம்மாவை வாங்கவிட்டு மனதுக்குள் பல தடவைகள் சொல்ல வைத்தது.

எங்களை காக்க அவர்கள் தெய்வங்கள் ஆனார்கள் எங்களோடு எங்களாக வாழ அவர்கள் வரும்போது......

பரராசசிங்கம் மாமாவின் மகனைத்தான் நான் கட்டப்போறன் முடிஞ்சால் எங்கள் இருவருக்கும் கல்யாணம் செய்து வையுங்கள். யசோதா முடிவெடுத்து விட்டாள் அவளின் முடிவு?? அந்த முடிவு ...................

**கதிரவன்: 2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்துக்கள்

காலையில் வானம் இருட்டிக்கொண்டுதான் இருந்தது கோணேசர் கோவில் பக்கமாக கட்டி கட்டியாக இருள், இந்தா அந்தா மழைத்துளிகள் வெடித்துச் சிதறப் போகின்றன என்ற நிலையில் நன்றாக தனிந்து இருந்தது. சித்திரைக் காற்று நிலத்தில் மட்டும் அல்ல வானிலும் சமாதானத்தைத் திருத்தும் சில பிக்குகள் போல இருள் கட்டியான மேகங்களை திரத்திக் கொண்டிருந்தது. தருமராசாவுக்கு காலைக் கூதல் இருக்கவில்லை. வழமையான தன் காலைக் கருமங்களை செய்யத் தொடங்கினார்.

மேலில் எதையாவது போட்டுக் கொண்டு நில்லுங்கவன் மழைவரப் போகுது இந்த கூதலுக்க? தருமராசாவின் மனைவி அன்னம்மா என்ன அன்னம் அடப்படிக்குள் இருந்து போடும் சத்தம் தருமராசாவுக்கு நன்றாகத் தான் கேட்டது.



கூதலாம் கூதல் அற நனைஞ்சவனுக்கு குளிர் என்ன கூதல் என்ன... வாய்க்குள் வந்ததை வெளியே கொப்பளிக்காது மிகவும் கவனமாக ரோஜாப்பூ,வெண்றை கவனமாக இருக்க வேண்டும். முட்களின் கூர்மைக்கு ஆளான அவரது வலது கை விரல்கள் கட்டளை இட்டுக் கொண்டிருந்தன.

உண்மைதான் தருமராசா இன்று பாடங்களுக்கும், கட்டளை களுக்கும் உட்பட்டே..... தன் தடித்த உடலை இந்த மண்ணில் உருட்டிக் கொண்டிருந்தார்.

காலையில் சாமிபடத்தைத் துப்பரவாக்கி பூ, ஆய்ந்து வைக்க வேண்டும் வெளி முற்றம் கூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த குப்பை. கூழங்களை அள்ளி அதற்காக உள்ள பசளை பேக்கில் போட வேண்டும். நேற்றையமிச்ச சொச்சங்களை கவனமாக வாளியில் எடுத்து வந்து தெருவில் நிற்கும் மாடுகளுக்கு வைக்க வேண்டும். மாட்டு வாளியை கழுவி அடுப்படிக்கு முன்னால் வைத்து விட்டு பூ மரங்களுக்கு நீர் பாச்ச வேண்டும்.

தருமராசா இந்த வேலைகளையும் பாடங்களாகவும் கட்டளையாகவும் தான் நினைத்திருந்தார். ஆனால்... ஆனால்... நாள் போக நாள் போக ........ இதுவும் வாழ்வுதானே என்ற ஏதோவொரு எச்சரிக்கை யொன்றும் அவரின் மனதில் குளிர் விட்டுக் கொண்டுதான் இருந்தது.

சமாதானம் என்ற பேச்சு அடிபடத் தொடங்கிய போது யாழ்ப்பாணத்தக்கு ஒருக்கா போய் கடலி அடைப்பு காணியை பார்க்க வேண்டும் போலிருந்தது. பஸ் ஓடட்டும் என்று மனதை ஆற்றிக் கொண்டாலும் மனதில் கட்டிய அன்றைய மேக இருள் போன்று வெடித்து விடும் போல கனிந்திருக்கும் துயரக்கட்டிகள்... ச்சோ.... ச்சோ..... சின்னக் கூடையொன்றில் நிரம்பிய பூக்களை கவனமாக பைப் தண்ணீரில் நனைத்தக் கொண்டு இருந்த தருமராசாவுக்கு..... அவர் அக்குரல் வந்த மழலை மொழி வழி பார்த்தார்.

தேத்தண்ணி ஆறப்போகுது குடிச்சுவிட்டு மற்ற வேளைகளைப் பாருங்கள் மடத்தடி மாரியம்மன் கோவிலுக்கு நான் போகப் போறன் ச்சோ.... ச்சோ என்ற மழலை அழைப்பும் அன்னம்மாவின் அன்புகலந்த கடுமையான குரலும் ஒரே நேரத்தில் எழுந்ததால் திசை மாறிய சிந்தனைகளையும் திசை மாற்றி... தருமராசா பூக்கூடையை சாமியறைக்குள் கொண்டு போனார்.

சாமியறை என்றால் அந்த தகர கொட்டிலுக்குள் ஒரு மூலை அடுப்படி என்றால் முன்துண்டில் மறைப்பு போடப்பட்ட இடம் அவ்வளவு தான் ஐநூறு ரூபாய் வாடகை ஐயாயிரம் முற்பணம் போதாக் குறைக்கு சின்ன முற்றம்.

நானும் அன்னத்துடன் கோவிலுக்கு போனால் என்ன? அப்படி அவளிடம் கேட்டால்.. உங்களுக்கும் கோவில்.. சாமியா... என்பாளே..

வேண்டாம் தருமராசா வெளியே முற்றத்துக்கு வந்தார். ச.சோ... ச்சோ.... மீண்டும்... மீண்டும் அந்த குரல் வந்த திக்கை நோக்கினார் முன் வீட்டு காணிச் சொந்தக்காரரின் பேத்தி தன் தாயுடன் தான் கொஞ்சிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தாள் தருமராசாவின் மனித வாழ்வெனும் போர்வை கழர தொடங்கியது.

அந்த தாயையும் அவள் மழலையும் பார்த்த போல அந்த கட்டளை அந்த பாடங்கள் அவரின் மனதில் துளிர் விடத்தான் செய்தன மனிதவாழ்வு எனும் போர்வையை எத்தனை நாட்கள் போட்டு அவர் தன்னை தானே ஏமாற்றிக் கொண்டிருக்க முடியும்? அன்னம் அடிக்கடி கோவிலுக்கு போகிறாள் அவளும் தன்னைப் போல தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறாளா? அல்லது.....

குழுங்கி வரும் அழுகையை அடக்கிப்பார்த்தார் பூவும் பிஞ்சுமாய் நின்று இருள் கலைக்க வந்த காற்றின் வேகத்தில் ஆடிக்கொண்டிருந்த முற்றத்து ஜம்பு பிஞ்சுகள் போல மூன்று மழலைகளுடன்........... தங்கள் முன்னால்... முன்னால்.. அந்த பாழுங்கிணற்றில்.... பாழுங் கிணற்றில்... பிணமாக மிதந்த போது... பிணமாக..... எங்கடா இந்த மனிசன்.... அன்னம் தருமராசாவை... தன்..... கணவனை ஊன்றிப்பார்த்தாள் தருமராசாவின் அந்த கோலம் அந்தக்கோலம்... அந்த போர்வை இல்லாத கோலம்.... உங்களைத்தான் உங்களைத்தான். அன்னம் ஜம்பு மரத்தடிக்கு ஓடி வந்தாள். என்ர மருமகன் சொன்னவன்... பூரணியை கெடுத்து பாழுங்கிணற்றில் தள்ளினவங்கள முடிக்காமல் உங்கட முகத்தில் முழிக்க மாட்டன் அன்னம். அவன் வருவான் அல்லோ அன்னம் அவனை பார்க்க வேண்டும். அவனை கட்டி தழுவ வேணும் அன்னம்..... அப்பிராணியாய் வாழ்ந்த எந்த பிரச்சனைகளுக்கும். போகாதா இந்த மொட்டு விரியா குடும்பத்தை சின்னா பின்னப்படுத்தினாங்களே அப்பிராணியை துவக்கேந்த வைத்தாங்களே.... அன்னம்.... அன்னம்..... அவன் இனி வந்து போடுவான் இல்ல தருமராசா புலம்ப புலம்ப அன்னம் ஏதும் செய்வதறியாது தன் கணவனின் உடம்பினை உலுப்பினாள்.

மழைமெல்ல தூறத் தொடங்கியது. காற்றும் விட்ட பாடாய் தெரியவில்லை அந்த வளவு மரஞ்செடிகள் எல்லாம் பேய் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தன இவர்களைச் சுற்றி.

ச்சோ... குழந்தையை போல என்ர மூன்று ச்சோக்கள் எல்லாம் உசிரோட இருந்தால் தாடி மீசையோட திரிவாங்க என்ன அவங்களும் தகப்பனோட வருவாங்க என்ன.....? தருமராசா தன் சுயநினைவிழந்து ஏதோ... ஏதோ... எல்லாம் பிதற்றுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம்மா அடக்க முடியாத ஆத்திர அணைப்போடு கணவனை கைபிடித்து... கைபிடித்து...

வாங்க... வாங்க.... மழை வரப்போகுது... மழை வரப்போகுது அந்த கட்டளை அந்த பாடங்கள் தருமராசா இன்னும் அந்த போர்வையை போர்க்கவில்லை அன்னம் தான் இப்போது அவரை போர்க்கத் தொடங்கினாள் போர்வை தருமராசாவை சுயநினைவுக்கு இழுத்தது. அந்த போர்வையில் ஆயிரத்து தொளாயிரத்து என்பத்தேழு வலியடைப்பில் நடந்தேறிய....... மற்றவர்கள் கண்களுக்கு புலப்படாத எழுத்துக்களை அன்னம்மா வாசிக்கத் தொடங்கினாள்.

தருமராசா தலை குனிந்து நுனிவிரல் பார்த்து மண்பார்த்து...... மண்ணில் விதைபட்ட வித்துக்கள் பார்த்து......... ஆயிரமாயிரம் வித்துக்களின் தலை பார்த்து...... நடக்கத் தொடங்கினார்.

அந்த வித்துக்களின் தலைகளில் ஒன்று தன்னுடைய மருமகனாக.... தன்னுடைய மருமகனாக.... இருந்திடக் கூடாதா.... இருந்திடக்கூடாதா.......

தருமராசாவின் கண்கள் முற்றத்து மண்ணை விழித்து விழித்து பார்க்கத் தொடங்கின.

**கதிரவன்**

**13.05.2008**

# சில்லறைக்கடை

ஒவ்வொரு கடையாகக் காட்டி கேள்விகளை தொடுத்து கொண்டு வந்தான். எனக்கும் சினமாகவே இருந்தது. என்றாலும் அவனது மழலை என்னை அவனது கெள்விக்கு பதிலைக் கூறு கூறு எனக் கட்டளையிட்டுக் கொண்டிருந்தது.



"இது என்ன கட..?"

"இது பழங்கள் விற்கிறதால பழக்கடை.."

"இது என்ன கட..?"

"இது மரக்கறி விற்கிறதால மரக்கறிக்கடை..."

"இது என்ன கட...?"

"இது கோழித் தீனி விற்கிறதால கோழித் தினிக்கடை...."

இப்படி ஒவ்வொரு கடையாகக் காட்டி விளக்கம் கேட்டுக் கொண்டே வந்தான்.

பலசரக்கு கடை ஒன்றைக் காட்டி, "இது என்ன கட...." என்றான்

"இது சில்லறைக்கடை" என்றேன்


"இங்க சில்லறைக் காசும் விற்பாங்களா?" என்றான்.

**இலங்கை விகடன் 24.10.2003**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயம் எனும் பாம்பு



"பயம் எனும் பாம்பை அடித்திடுவோம்.."

அறிமுகம் இல்லாத ஒருவர் என்னிடம் சொன்னார். நான் கோவில் கோபுரத்தைக் கும்பிடுவதை நிறுத்தி விட்டு அவரைப் பார்த்தேன்.

"இது.. பாரதியாரின் வரிகள் அல்லவா..."

சொன்னவர் ஆமென்று தலையாட்டினார்.

"இப்ப அதுக்கென்ன..."

"இல்ல.. என்ர பயம் எனும் பாம்பை நானிப்ப அடிச்சுகொன்று போட்டன்..."

"நல்லது தானே.."

நான் கோவிலுக்குள்ளே செல்ல முற்பட்டேன். அவர் என்னைப் பார்வையால் மறித்தார்.

"பலநாளாய் கோவில் விக்கிரகம் ஒன்றிற்கு குறிபார்த்து வந்தன். இந்த பயமென்ற பாம்பு தான் பயமுறுத்தி வந்தது. அந்த கவிஞர் சொன்னதோ... நான் பயமெனும் பாம்பை அடிச்சு கொன்று போட்டன்..."

நான் பயந்தே விட்டேன். பேச்சைத் தொடர்ந்து கொண்டிருந்த அவரை ஆச்சரியத்தோடு பார்த்தேன்.

"யார் இவர்...?? இவனைப் பார்த்தால் களவெடுக்கிறவர் போல இல்லையே..." என் மனம் என்னுள் பேசிக் கொண்டது.

அவரது முகத்தை பார்க்கவே பயமாக இருந்தது.

பயத்தோடு கோவிலுக்குள் சென்றேன்.

**இலங்கை விகடன் 19.12.2003**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் ஆள்

"டேய நிய் ஆரிண்ட காணியிலே இருக்கிறாய்"...? கேட்டவரைப் பார்த்தேன். என் தகப்பனாரின் நண்பர். வந்த ஆத்திரத்தை தடவி விட்ட பொறுமையுடன் பதில் சொன்னேன்.

சிவன் கோவில் காணியில்...

தெரியுதுதானே கோயில் கொடியேறி இருக்கு இந்த திருவிழா பத்து நாட்களில் ஆவது மச்சம் மாமிசம் தவிர்த்து இருக்கலாம் தானே நீங்களும் மனிசரோ.... விடியற்காத்தால மீனோட...."

என்னால் பேச முடியவில்லை

அவர் சொல்வது பொய்யல்ல

அடுத்து அடுத்து நடந்து முடிந்து போன வன்செயல்களின் முடிவு எங்கட சிவன் கோவில் தான். இப்ப திருத்த வேலை நடக்குது. வாற வருஷம் கும்பாபிஷேகம் நடக்கும். ஆனி உத்தரம்.... கொடியேற்றம் நடக்காட்டியும் அபிஷேகம் நடக்கும் இந்த நாட்களில் ஆவது...

இந்த பாழாப் போன என் நாக்கை ஆத்திரம் தீர கடித்து உன்னால் தானே இதெல்லாம் என்ன என்னுள் என் குற்ற உணர்வை நியாயப்படுத்த முடியாமல் தவியாய் தவித்துக் கொண்டிருந்தேன்.

என்னையறியாமல் என் தலை தாழ்ந்தது.

"வாரவருஷம் கட்டாயம் விரதம் இருப்பேன் மச்சம் தவிர்ப்பேன்...? என்னுள் பெரிய சத்தியம் ஒன்று உருவெடுத்தது.



என் மௌனம். வந்தவருக்கு இன்னும் சாதகமாக அமைய மீண்டும்... மீண்டும்.. எதை எதையோ பேசி என்னை குடை, குடையென குடைந்து கோதாக்கி விட்டு போய் விட்டார் அந்த பெரியவர்.

இன்று திருவிழா ஆறாவது நாள். மீதி நான்கு நாட்களும் மச்சம் தவிர்த்தால் என்ன? என்னுள் யோசனை.

அம்மாவிடம் சொன்னேன் அம்மா என்னை அதிசயமாக பார்த்தார்.

திருவிழா முடிந்து விட்டது.

நான் மார்க்கற்றுக்குப் போனேன். திருவிழா காலப்பகுதி முடிந்தாலும் இன்னும் ஒரு வாரம் ஆவது மச்சம் தேடக்கூடாது என்று செய்த குற்றத்திற்காக எனக்கு நானே விதித்த தண்டனையுடன் நல்ல மரக்கறி வகைகளை என் கண்களை தேடின.

ஆனால் என் கண்கள்....

என்னுடன் வீறாப்பு பேசிய அந்த பெரியவர்... நீண்டு நின்ற அந்த மாட்டிறைச்சிக் கடை கியூவில்.......

என்னுள் நான் சிரித்துக் கொண்டேன்.

சிவநெறி: 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி... சுவாமி...



"சாமி தெய்வத்தை நம்புவது நம்புவது வீண்வேலை" அலுத்துக் கொண்டு மாமிசொன்னது என்னை என்னவோ செய்தது.

மனிதரைக் கோபிக்கலாம் சுவாமி, தெய்வங்களைக் கோபிக்கிற தென்றால்.... அப்படியென்ன மாமியின் நெஞ்சில் பாய்ந்த குண்டு?

என் கண்களின் கேள்வி மாமியின் வாயைத் தீண்டியது உரசிப்பார்த்தது.

"தம்பி, சுந்தரா... நீ எப்பவாவது கோயில் குளமென்று திரிஞ்சிருக்கிறியா? ஆடிக்கோ, அல்லது அமாவாசைக்கோ.. இஞ்ச மலையிலே மழைபெய்யிறமாதிரி... கோயிலிலே உன்னை காண ஏலாது மோனை.... கோயில் கொடியேறினால் உரிமைக் கோயிலென்று அன்று மட்டும் உன் கொப்பனைப் போல நீயும்.... பிறகு....?

மாமியின் வார்த்தைத் தொங்கலில் ஏதோ தொங்கிக் கொண்டிருப்பதன் சாயல் தெரிந்தது.

நான் தலையாட்ட வில்லை. தொங்கிக் கொண்டிருக்கும் வார்த்தைகளை இழுத்து விழுத்துவதிலேயே இருந்தேன்.

இவன் ராதேயன். என்ர மகன். உன்ர வயசு விசரன். கோயில், கோயில் என்று திரியிறான். படிப்பும் இல்லை நல்ல ஒழுங்கான வேலை வெட்டியும் இல்லை ஆனால் நீ.... நல்ல படிப்பு.... நல்ல உத்தியோகம்....

மாமியின் வார்த்தைகளின் அர்த்தம் எனக்குப் புரிந்தது.

என்னுள் என்னையறியாமல் மெல்லிய சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது.

மாமி... படிக்காம... தொழில் தேடாம... சாமி சாமி... கோயில்... கோயில்... என்று.. சும்மா... இருக்கிற சுவாமிகளுக்கு நாங்கள் உபத்திரவம் கொடுத்தா... உங்கட மகனுக்கு இந்த நிலை வரத்தானே செய்யும்... சுவாமி தெய்வங்களிடம் நம்பிக்கை இருக்க வேண்டும். ஆனால் எங்களிட்ட முயற்சியும் இருக்க வேண்டும். எல்லாப் பொறுப்பையும் தெய்வங்களிடம் போட்டு விடக்கூடாது. முயற்சி இல்லாத நம்பிக்கை வீண் மாமி.... வீண்... நான் பொரிந்துதள்ள முற்பட்டேன்.

மாமி....

ஆடி அசையாமல் தன் பெருத்த உடலை கற்சிலையாக்கி என் வாயையே பார்த்துக் கொண்டிருந்தார்.


சிவநெறி 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் ஒரு...

அந்த அனாதை ஆச்சிரமத்திற்கு முன்னால் 'லேண்ட்மாஸ்டர்' நின்றது. லேண்ட்மாஸ்டர் றைவரோடு அமர்ந்திருந்து வந்த ஆசாரி அரசு



வயிற்றை நடவிக் கொண்டு இறங்கினார்.

வயிற்றில் இருந்து இறங்கிய சாரத்தைக் இறுகக் கட்டிக்கொண்டு சேட்டில் படர்ந்திருந்த மரத்தூசை தட்டி விட்டு அந்த அனாதை இல்ல கதவருகில் செல்ல முற்பட்ட போது...

யாரை பார்க்க வேண்டும்? அமைதியான குரலொன்று அவரை நிறுத்தியது. குரல் வந்த திக்குக்கு தன் வாளோடு போகும் கண்களை திரத்தினார்.

'அம்மாவையா பார்க்க வந்தீர்கள்...?' வாளோடு போன கண்கள் மீண்டும் அரசுக்கு பதில் ஒன்றை எடுத்து வந்தன.

'ஓம்....? கேள்வியும், பதிலுமான அந்த பிஞ்சு குழந்தையை, மெசின் மீது சீவ வைத்த பலகையை பார்ப்பது போல மிக மிக அவதானமாக அரசு பார்த்தார்.

நாளாந்தம் தச்ச பட்டறைகளில் வந்து விழும் அடிபோடாத குரல்களோடு தன் சமாளிப்பு வேலையால் தப்பி தப்பி போகும் அரசுக்கு இந்த குரல்.......... இந்த அமைதியான குரல்........

அந்த அமைதியான முன் மண்டபத்தையும், மண்டப சுவர்களில் மாட்டப்பட்டிருந்த சுவாமி படங்களையும் அரசுவின் கண்கள் மேய்ந்து வந்தன.

"செந்தில்நாதன்" ஐயா சொன்னது சரி... இந்த பிஞ்சு குழந்தையின் அமைதியான வார்த்தை ஒன்றிற்காக நட்டப்பட ஆயிரம் அல்ல இன்னும் ஆயிரம் குறைந்திருக்கலாம்" அரசு தன் மனதின் முடிவுக்கு "ஆமா" போட்டார்.

'இஞ்சார் அரசு... இது என்ற வேலையல்ல... நான் அந்த அனாதை விடுதிக்கு என்ர கணக்கால் செய்து கொடுக்கிற வேலை. என்ர சொந்த வேலை என்றால் நீ எப்படியும் கணக்கு பார்க்கலாம். இது உறவுகளை இழந்து தவிக்கும் பிஞ்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் வேலை பார்..

நான் அன்றைக்கு அங்கு போகக்க... அந்த பிள்ளைகள் நிலத்தில் இருந்து படிச்சதுகள்... சே... பார்க்க முடியல்ல அப்பா... அதனால... அப்பவே யோசிச்சிற்றன். நீர் பெரிசா எனக்கு போடாமல் வாங்குக்கும் மேசைக்கும் எவ்வளவு முடியும் என்று கணக்கு பாரும்... ஆயிரத்தி இருநூறு... சே. ஐஞ்சு செற் வேணும் ஐயாயிரம் தருவன்... இஞ்சார் அனாதை பிள்ளைகள் அப்பா. எங்கட பிள்ளைகளுக்கும் இந்த நிலை வந்தா... அரசு கொஞ்சம் யோசித்து பாரு..."

அந்த நேரம் அரசுக்கு; செந்தில்நாதன் ஐயாவின் நினைவுகள் எழுந்தது.

செந்தில்நாதன் ஐயா உண்மையில் மனிதாபிமானம் உள்ள மனிசர் தான்... என்ர கணக்கிலும் ஒரு செற் மேசை; வாங்காவது செய்து கொடுக்க வேணும்...

அரசு எப்பவும் தனது மனது நல்லது சொன்னாலும் சரி கெட்டது சொன்னாலும் சரி அதன் வழிபோக பிரியப்பட்டவர். நல்லது; கெட்டது பற்றி அலசி ஆராய அவருக்கு விருப்பமில்லை. அதனால் தான்....

நீங்கள்.... உங்களுக்கு.... யாரை பார்க்க வந்தீர்கள்' அந்த பிஞ்சு குழந்தையின் முன்னடி.... அந்த அமைதியான குரலோடு ஐம்பது வயதை கடந்த; முந்தானை சேலைத் தலைப்பால் தன்னை மூடி மறைத்துக் கொண்ட.....

"நான்.... லேன்ட் மாஸ்டரில... உங்களுக்கு மேசை; வாங்கு; வந்திருக்கு... அத இஞ்சு... செந்தில்நாதன் ஐயா தான்... கொடுக்க சொல்லி என்னை...? அரசு தட்டுத்தடுமாறி வார்த்தைகளை கொட்டினார்.

'செந்தில்நாதன் ஐயாவா?

'ஓம்.. செந்தில்நாதன் ஐயா தான்...!

'யார் அவர்... அப்படிப்பட்ட ஒருவர் எங்களுக்கு மேசை; வாங்கி தருவதாகச் சொல்லவில்லையே;

'பிரன்ஸ் கிளப்பால்' யாரும் உங்களுக்கு டொனேசன் தாரதாய் அறிவிக்கவில்லையா? அம்மா...? அரசு... தடுமாறிய தன் வார்த்தைகளை ஒழுங்குக்கு கொண்டு வந்தார்.

'ஓ... பிரன்ஸ் கிளப்பா.... ஓம்... ஓம் அதுதான் லண்டனால வந்து நிக்கிறரே எங்கட டொக்டர் ஞானசேகர் ஐயாவின்ர அண்ணன் தில்லைநாதன்... அவர்தான்... போன கிழமை எங்கட விடுதிக்கு வந்து பிள்ளைகளை வந்து பார்த்தவர்... அவர் தான் எத்தனை மேசை; வாங்கு வேணும்.... என்று கேட்டு அனுப்பி வைக்கிறதாய் சொன்னார்... அவரோடு நாலைந்து பேரும் வந்தவர்கள்... அவர்களை தெரியும்... பேர் தெரியாது..... அம்மாவின் வார்த்தைகளை அளந்து நிறுத்து எடுத்துக் கொண்ட அரசு.... தன் தோலில் அமர்ந்து சிரித்து விளையாடிக் கொண்டிருந்த செந்தில்நாதன் ஐயாவை அப்படியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கி அந்த அனாதை ஆச்சிரம மண்டபத்தில் எறிந்தது போதாது அப்படியே தன் பெருத்த உடம்பால் யானை மிதிப்பது போல...

'என்ன யோசிக்கிறீங்க? அம்மாவின் குரல் தான் செந்தில்நாதன் ஐயாவிடம் இருந்து அரசை மீட்டு வந்தது.

வாங்குகள் மேசைகள்... லேண்ட் மாஸ்டர் றைவர். அந்த பிள்ளைகள்

அட பாவி... நீதான் செய்து கொடுக்கவில்லை... பில்கூட ஐயாயிரம் தந்து போட்டு ஐயாயிரத்து ஐநூறு என்று எழுதித்தாங்கோ என்று வேண்டினியே... அட பாவி... நீயும்... மனிசத் தனம் உனக்கு இருக்காடா... நீயும் ஒரு... அரசுவின் நல்லது கெட்டது வகை பிரித்தறியாத 'மனது' குமுறத் தொடங்கியது.

அந்த குமுறலில்.... செந்தில்நாதன் ஐயா.... அவர் ஏப்பமிட்ட ஐநூறு ரூபாய் பணம்.... அந்த அனாதை ஆச்சிரமப் பிள்ளைகள் எல்லாமே...

அரசுவின் மனதில்... ஆறுதலாக தன் பங்குக்காக வாங்கொன்றை உள்ளே தூக்கிக் கொண்டு நடந்தார்.

வெறும் நிலத்தில் குழந்தை யொன்று 'காளியாச்சியின்' படமொன்றினை பார்த்து.... அழகு பார்த்துக் கொண்டிருந்தது.

**சிவநெறி 2003**

## சுத்தம்

ஆஸ்பத்திரி வாட்டில் ஒரே சத்தம். டாக்டர் சிவராமன் நேர்ஸ்



சிவரமணியிடம் கேட்டார்.

நேர்ஸ் சிவரமணி ஆஸ்பத்திரி நிர்வாகம் அனுப்பி வைத்த; வாட்டில் மாட்டி இருந்த பலகையை காட்டினாள்.

அந்த பலகையில்...

'வாட்டை சத்தமாக வைத்திருங்கள்'

என்று எழுதி இருந்தது.

சுத்தம் சத்தமாக மாறிப் போனது கண்டு டாக்டர் சிவராமனும் சத்தமாக சிரித்துக் கொண்டார்.

**தினமுரசு : 10.12.1995**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு அப்பா

'பொங்கலுக்கு கட்டாயம் வரவேண்டும்.... மச்சான்... ஒரு தடவை அல்ல பல தடவைகள் சிவராமன் தன் நண்பன் மரியதாசை அழைத்திருந்தான்.

போகாவிட்டால் கோவிப்பான். கண்ட இடத்தில் வைத்து ஏசுவான். போகும் போது தன் மனைவி ஜெசிந்தாவிடம் மரியதாஸ் 'சிவராமன் பொங்கலுக்கு கூப்பிட்டு இருக்கான். சில நேரம் சாப்பிடவும் சொல்லுவான்...' என்று சொல்லி விட்டுத்தான் வந்திருந்தான்.



முற்றத்தில் அழகான கோலம் போடப் பட்டிருந்தது. கோலத்தின் கிழக்குப் பக்கமாக நிறைகுடமும் இருந்தது. நடுப்பகுதியில் பொங்கல் பொங்கின மூன்று கற்கள் குந்திக் கொண்டிருந்தன.

மரியதாசை சிவராமனின் மனைவி மூத்தமகன் வரவேற்றனர். 'எங்க சிவராமன்...' என்றபடி மீண்டும் அந்த பொங்கல் கோலத்தை பார்த்தான் மரியதாஸ்.

'இப்ப நின்றவர். மூலைக்கடையில் சிகரெட் வாங்க போய் இருப்பார். வாங்க உள்ளுக்க... வாங்க...' சிவராமனின் மனைவி அன்பாக அழைத்தாள்.

இல்ல... இந்த கோலம்... நல்ல அழகாக இருக்கே. நெற்கதிர்கள் நிமிர்ந்து துப்பாக்கி ஏந்தி நிற்கும் போர் வீரனைப் போல உதிக்கும் சூரியனைப் பார்த்து இன்னும் பத்து நாட்கள் ஆனால் நாங்களும் உனக்கு தலைவணங்குவோமே என்பது போல... மிக... மிக அழகாக... இந்தக் கோலம்... யார் பாருங்க இந்த கோலத்தைப்போட்டது...' மரியதாஸ் முற்றத்து கோலத்திலேயே தன்னை பதித்து நின்றான்.

சிவராமனின் மனைவி சொன்னாள். 'முன் வீட்டு தங்கரெத்தினம் மாமி போட்டவ'

'அப்படியா..., அவ... எங்கட ஜெயராசா அண்ணையின்ரை பெண்சாதி அல்லோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓம்... ஓம்... அவதான்... மண் யாழ்ப்பாணம் அல்லோ...' சிவராமனின் மனைவி சொன்னது மரியதாசை தாக்கியது.

"இல்ல எல்லாத்திற்கும் யாழ்ப்பாணம் என்று சொல்லாதீங்க இஞ்சயும் இதைவிட கோலம் போட ஆக்கள் உண்டு..." மரியதாஸ் வார்த்தைகளை உருட்டிய போது சிவராமன், சிகரெட்டும் கையுமாகவர சரியாக இருந்தது.

'வா மச்சான்... வந்திட்டாய். சாப்பிட்டிட்டு தான் போக வேணும்... வா... வா...'

மரியதாஸ் மீண்டும் அந்த கோலத்தை பார்த்து கண்களை நிமிர்த்திய போது...

'எப்படி மச்சான் இந்த பொங்கல் கோலம்... நல்லா இருக்கா...' கோலத்தை போட்டது யார் தெரியுமோ மச்சான்... என்ர மூத்தவள்தான்... சிவராமன் வார்த்தைகளை தொடராமல் தன் மனைவியையும்; மூத்த மகளையும் பார்த்தான்.

மரியதாஸ் அதிர்ந்து விட்டான். இப்ப கொஞ்சத்துக்கு முன் தானே சிவராமனின் மனைவி சொன்னா தங்கரெத்தினம் மாமி போட்டவ என்று... ஆனால் இவனோ தன் மூத்த மகள் போட்டவ என்கிறானே... இதில எது உண்மையாக இருக்கும் மரியதாஸ் பேசாமல் நின்றான்.

'மச்சான் பார்... அந்த சூரியனை அந்த காட்சியே போதுமடா என்ர மகளின் திறமையை பார்த்தாயா? இதுக்கு தான் மச்சான் உன்னை கூப்பிட்டனான்... எப்படி... கோலம்...' சிவராமன் தன் மகளை புகழ்ந்து தள்ளிக் கொண்டிருந்தான்.

மரியதாஸ் சிவராமனின் மனைவியையும்; மகளையும் பார்த்தான். அவர்கள்... சிவராமனின் வார்த்தைகளுக்கு மேலாக சிரித்துக் கொண்டிருந்தார்கள். வயிறு குலுங்க, குலுங்க சிரித்துக் கொண்டிருந்தார்கள். 'ஏன் சிரிக்கிறீங்க...? சிவராமன் தன் மனைவியையும் மகளையும் பார்த்து கேட்டான். மரியதாசுக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

'ஏன் சிரிக்கிறீங்க... ஏன்..' சிவராமன் பலமாக கத்தினான். 'அப்படி ஒன்றும் இல்ல மச்சான்..'

மரியதாஸ் சிரிக்க வில்லை. தன்மகளை புகழும் அந்த அப்பாவை பார்த்து...' வாங்க உள்ளுக்க இருந்து கதைக்கலாம்' என்றான் மெதுவாக.

(தினகரன் 14.01.1996வாரமஞ்சரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவக் கோழி

பிரியத்திக்கு இன்று பிரியாவிடை. கடந்த மூன்று ஆண்டுகள் எங்கள் அலுவலகத்தில் வேலை பார்த்தவள் பிரியந்தி. வவுனியாவுக்கு இடமாற்றம் பெற்று போகிறாள்.

என் கண்கள் குளமாகின்றன. மூன்று ஆண்டுகள் அவளோடு பழகிய நட்பு... என்னை மீண்டும் மீண்டும் அழ வைத்தே கொண்டிருந்தது.



பிரியாவிடைக்கு வந்து விட்டு அழுது கொண்டிருந்தால்... சந்தோஷப்படுகிற நேரத்தில நீங்கள்...' என்னையும் பிரியந்தியையும் எங்கள் அலுவலகத்தில் வேலை பார்க்கும் சிவராமன் கிண்டலாக கேட்டான்.

பதில் சொல்லும் நிலையில் நாங்கள் இல்லை.

அழுதே வடிந்து கொண்டிருந்தோம்.

'சாப்பாடு ரெடி...' அழைப்பு வந்தது.

வெளிவிறாந்தாவில் கேலி கிண்டல் அழுகையுடன் நின்ற நாம் உள் மண்டபத்திற்குள் நுழைந்தோம்.

சிவராமன் சாப்பாடு பரிமாறுவதில் சுழன்று; சுழன்று வந்து கொண்டிருந்தான்.

எங்கள் அருகில் வந்தவன்... சாப்பிடுங்கள்... உங்களுக்கு ஸ்பெசலாய் சைவக் கோழி சாப்பாடு...' என்றுவிட்டு எங்களை விட்டகன்றான்.

விம்மலுடன் இருந்த நாம் சைவக்கோழி சாப்பாடு என்றவுடன் சிறிது நேரம் அப்படியே இருந்துவிட்டோம்' அப்படியென்ன சைவக்கோழி சாப்பாடு...' எங்களிடம் இப்படியொரு கேள்வி.

எங்கள் அழுகையினை மறந்து ஓடி ஆடிக்கொண்டிருந்த சிவராமனை பிரியந்தி அழைத்தாள்.

சிவா சைவக்கோழி சாப்பாடு என்றீங்களே... அப்படியென்ன சாப்பாடு..' என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராமன் எங்களைப் பார்த்தான். 'நீங்கள் இருவரும் ஒருக்கா நேற்றைய மாதிரி சிரிக்க வேண்டும். எங்க சேர்ந்து சிரியுங்க பார்க்கலாம்...

அப்படி சிரித்தால்தான் இந்த சைவக்கோழி என்ன என்பதை சொல்வேன்" என்றான். மற்றவர்கள் எல்லோரும் எங்களை பார்த்து...

என்னென்னவோ பேசுவதும்; கிண்டல் அடிப்பதுமாக இருந்தார்கள்.

நாங்கள் இருவரும் இந்த சைவக் கோழியை அறியும் சாட்டில் கண்களால் பேசிக் கொண்டோம்.

பிறகென்ன... எப்படித்தான் எங்கள் அழுகை போனதோ?

எங்களை மறந்து வாய்விட்டே சிரித்தோம். எங்களுடன் சிவராமன் மட்டுமல்ல எல்லோரும் சேர்ந்து கொண்டார்கள்.

'இப்ப சொல்லுங்க சிவராமன்... அந்த சைவக்கோழி..' நாங்கள் இருவரும் ஒரே நேரத்தில் கேட்டோம்.

சிவராமன் சிரித்துவிட்டு சொன்னான். "இது அப்படி பெரிய விஷயம் அல்ல. போனவருடம் நான் இங்கு மாற்றலாகி வந்த போது முன்னைய அலுவலக நண்பர்கள் எனக்கு பிரியாவிடை வைக்க ஏற்பாட்டுக் கூட்டம் கூட்டியிருந்தார்கள். நானும் போயிருந்தேன்." "அப்ப... அப்ப..." நாங்கள் சிவராமன் பேச்சை துரிதப்படுத்தினோம்.

அப்பதான் இந்த சைவக் கோழி பிரச்சனை வந்தது. பிரியாவிடைக்கு சாப்பாடு கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்த போது என்ன இறைச்சி சமைப்பது என்ற கேள்வியும் எழுந்தது. எல்லோரும் ஒரே மனதாக கோழி என தீர்மானித்தோம். அப்போதுதான்... எங்கட அலுவலக நண்பர் ஒருவர் தனக்கு சைவக் கோழி சாப்பாடு தர வேண்டும்; அப்படி தராவிட்டால் தன்னால் பிரியாவிடையில் பங்குபற்ற முடியாது என்றார்.

எங்களுக்கு ஒரே குழப்பம். என்னடா இந்த சைவக்கோழி என்னவென்று கேட்டோம். அதற்கு அந்த நண்பர் இப்படி விளக்கம் தந்தார்.

முஸ்லீம் ஆக்கள் கோழியை அறுக்கும் போது தக்பிர் சொல்லி அறுக்கின்றார்கள். அப்படி தக்பிர் சொல்லி அறுக்கப்பட்ட கோழி இறைச்சியையே அவர்கள் உண்பார்கள். நான் சைவம். எனக்கு இப்படியான இறைச்சி தேவையில்லை. தக்பிர் சொல்லாமல் அறுக்கப்பட்ட கோழியே வேணும். அதாவது சைவக்கோழி இறைச்சியே வேணும் என்றார்.

சிவராமன் சொல்லி முடிக்கவில்லை. மண்டபமே ஒரு முறை சிரிப்பில் மூழ்கி அதிர்ந்தது. நாங்களும் எங்களை மறந்து சிரித்தோம்.

**தினமுரசு 22.10.1995**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவின் தவிப்பு

அப்பாவுக்கு வேலை ஓடவில்லை. கந்தோர் பைல்களை புரட்டி, புரட்டி கொண்டிருந்தார். அவரது மனம் குழம்பி இருந்தது. காலையில் நடந்து சம்பவம் அவரை புரட்டி எடுத்துக் கொண்டிருந்தது.

உங்கட மனம் என்ர மகளின் பட்டத்தை அறுத்து விட்டான். பக்கத்து



வீட்டு தேவி அன்றி கத்திவிட்டு போறார். குளித்துக் கொண்டிருந்த அப்பாவுக்கு இது கேட்டது. குளித்து முடிந்ததும் முதல் வேலையாக மகன் சிவ ரங்கேசனை என்ன எதுவென்று விசாரித்தார். இல்லை அப்பா பல தடவைகள் கெஞ்சி போட்டு பட்டத்தின் இழுவையை பார்க்க நூலை தரச் சொல்லி... அவன் அதற்கு பட்டம் விட வக்கில்லாத உனக்கு பட்டத்தின் இழுவை பார்க்க விரும்புதோ... என்றான்.

அப்பா... அழுவை பார்க்க தராட்டிசரி... அதற்காக பட்டம் விட வக்கில்லாத உனக்கு என்று சொன்னது எனக்கு பிடிக்கவில்லை. அதுக்காகத் தான் நூலை அறுத்து விட்டான்...

சிவரங்கேசன் உண்மையை சொன்னான். அப்பாவுக்கு ஆத்திரம் வந்தது. அந்த சொற்கள் வக்கில்லாத உனக்கு அவரை ஆட்டிப் படைத்தது. அந்த ஆத்திரம் சிவரங்கேசன் மேல் விழுந்தது.

அய்யோ அப்பா.... என்னை அடிக்காதேயுங்க... அய்யோ அப்பா... சிவரங்கேசன் குரல் நாலு வீடு தள்ளி கேட்டும் அவரின் சினம் தணியவில்லை. அம்மாதான் அழுது குளறி அப்பாவை தடுத்தார்.

என்ன கடுமையான யோசனை அப்படி கந்தோரில் அப்பாவை பக்கத்து மேசை மாமா விசாரித்தார்.

ஒன்றும் இல்லை?... என்று விட்டு அப்பா நடந்த கதையை கூறினார்.

அதற்கு அந்த மாமா, நீங்கள் செய்தது பிழை, உங்கள் மகன் சொன்னவைகள் உண்மை. பக்கத்து வீட்டுக்காரியின் அந்த சொலுக்காக உங்கட மகனை அடித்தது... பாவம் சிரங்கேசன்... என்று பரிதாபப்பட்டார்.

அப்பாவின் மனம் இன்னும் தவிக்கத் தொடங்கியது. அடித்த கையை வெட்ட வேண்டும் போலிருந்தது. எப்போ வீடு செல்வோம் எப்போ தன் மகனை அரவணைப்போம் என பரிதவித்தார் அப்பா. **பிஞ்சு - 2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரணிகள் இரண்டு....

அடி பிடி நடக்கும் போலவே இருந்தது.

அப்படித்தான் சிவசங்கர் நினைத்தான். ஆனால்...

இரு வினாடிக்குள் அடி பிடி சம்பந்தமான பிரச்சனை இவ்வளவு கெதியாக நின்று விடுமென்று அவன் கற்பனை பண்ணிக் கூட பார்க்க முடியவில்லை.



அவ்வளவு அதிசயம்... பிரச்சனை இதுதான்... பள்ளிக்கூடத்தால வந்த பெட்டைக்கு ஒருவன் சேட்டை விட்டிருக்கின்றான். அதுவும் கொஞ்சம் காரசாரமாகத்தான். இதை பெட்டை தன்னுடைய இரத்த உறவிடம் கூறி இருக்கின்றாள். தமையனும் - பெட்டையும் பெடியனும் நாளாந்தம் சந்திக்கும் இடத்தில் வந்து நின்று இருக்கின்றான்.

வழமை போல 'சம்பவம்' நடந்தது.

ஆனால்....

தன் தங்கையுடன் சேட்டை விட்டவனைப் பார்த்ததும் - தமையன் ஏதும் பேசாமல் பெட்டிப் பாம்பு போல அடங்கி விட்டது தான் பெரிய ஜோக். சம்பவ நேரத்துக்கு முன்னால் அவனை பார்த்து இருக்க வேண்டும். கொலை விழும் போலத்தான் இருந்தது. ஆனால்...

அந்த நடு ரொட்டில் அந்த தமையன் 'சம்பந்தம்' பேசும் அளவுக்கு படி இறங்கியே விட்டான்.

தம்பி நான் வேற யாரோ என்று நினைச்சன். உம்மட அம்மா; அப்பா விட்ட சொல்லி சம்பந்தம் பேசினால் நல்லம்.

சிவசங்கர் கொஞ்ச தூரம் நடந்து இருப்பான். முன்னால் இருவர் பேசிக் கொண்டு போவது அவனின் காதுகளில் விழுந்தது.

'பொடியன் நல்ல வசதி, அரசாங்க உத்தியோகம், நவ்வவன்... வழிய வார சீதேவியை யார் விரட்டுவினம்'

சிவசங்கருக்கும் விஷயம் விழங்கியது. அவன் நினைத்தான்... இந்த இடத்தில கூலிக்குப் போற - வேலைவெட்டியில்லாத - வசதியற்ற - அவன் நல்லவனாக இருந்தாலும் சரி சம்பவத்தோடு சம்பந்தப்பட்டிருந்தால் நிலை - கொலைதான்.

ஆனால்... ஆனால்... நல்ல வசதி... நல்ல அரசாங்க உத்தியோகம்... அந்த காரணிகள் இரண்டும்....

சிவசங்கர் சிந்தனையோடு நடந்தான்.

**மானுடம் - 06.05.1973**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "றம்புட்டான்"

அந்தச் சிறுவன் அதை அதிசயமாகப் பார்த்தான். அதில்....?

"றம்புட்டான்..... மல்வானே றம்புட்டான்.... லாபாய் லாபாய்..." குள்ள வாடியில் இருந்து மரக்கறி வாங்க வந்த கடைக்காரி விலையினைக் கேட்டாள். ஒரு றம்புட்டானை உரித்து வாய்க்குள் போட்டு சுவைத்தாள். "மகே.... அம்மே...."



அந்தச் சிறுவன் எச்சில் ஊற அதைப் பார்த்தான், அதில்.....?

கார் ஒன்று நின்றது. வெளிநாட்டு குரல் போல, விலையைக் கேட்காது எண்ணிக்கையைச் சொன்னார். அதற்கிடையில் அவரின் வாய்க்குள் இரண்டு றம்புட்டான்கள் புகுந்து விட்டன.

அவன் அருகில் வந்தான்... "எனக்கு ஒன்று தாங்க..." கெஞ்சினான்.

கிண்ணியாக்கார வியாபாரி ஒருவர் சுவைத்தபடியே விலையைக் கேட்டுக் கொண்டு, பூரண சுதந்திரத்துடன் இரண்டு றம்புட்டானை எடுத்து தன்னோடு கூட வந்தவருக்கு கொடுத்தார்.

அவன் அந்த றம்புட்டான் கூடையை இன்னும் நெருங்க முடியாத நிலையில்... "எனக்கும்...

பைப்படியில் தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்த நகைக் கடைக்காரப் பெடியன் ஒரு றம்புட்டானை எடுத்துக் கொண்டு நடந்தான்.

அவனுக்கு பொறுக்க முடியவில்லை. கையினை அந்த றம்புட்டான் கூடையில் போட்டான்.

"அம்மோவ்..." அவனின் கதறல் றம்புட்டான் கூடையில் சரிந்திருந்த அவன் பாவ உருவத்தில் இருந்து எழுந்தது.

"றம்புட்டான் மல்வானே றம்புட்டான் லாபாய் லாபாய்...

புதுமைநெஞ்சங்கள்
1977



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# - உணர்ச்சி -

ஓடி வந்த சிறுவனை மடக்கி பிடித்து விட்டான் சிவஞானம்.

திரத்தி வந்தவன் பரபரக்க இறங்கி சைக்கிளை தள்ளி விட்டு, சிறுவனை நோக்கி கைகளை உயர்த்தினான்.

முன் கடைக்குள் இருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த செல்வராசா.... "ஐசே... சின்னப்பெடியன்.... அடிக்காதே..." என்று நாலைந்து முறை சொன்ன பின்ரே, அடித்தவன் இளைத்தபடி... "அண்ணே, அழுகல் தேங்காய் கேட்டான். இல்லண்டு நான் சொல்ல... அம்மாவ இழுக்கிறானே... என்றான்.



"சரி. சரி... பாவம் பொடியன்.." சிவஞானம் இடையில் குறுக்கிட்டு அடித்தவனை திருப்பி அனுப்பி விட்டு தன்னிடம் அடைக்கலம் புகுந்த பெடியனிடம் "என்ன நடந்தது?" என்றான்.

"மாத்தையோ... மம மொக்குத் கீவ நா. லமய தகாய்" பொடியன் தன்மேல் குற்றமில்லாமல் அழுதபடியே வார்த்தைகளை இழுத்தான்.

இத்தனையும் பார்த்துக் கொண்டு நின்ற பியதாச, தன்னோடு தங்கூசி வாங்குவதற்காக கூட்டி வந்த சோமபாலவிடம், "மெயா சிங்கள லமயா வாகே! பேணுவ ஓய்?"

"ஒவ் மெயா சிறிசேனாகே மல்லிகே புத்தா நேத" சோமபால பொடியனின் உறவு முறையினைக் கூறினான்.

"மொனவத மல்லி" அடிவாங்கிய பொடியனை அணுகினான் பியதாச. பொடியன் விக்கி... விக்கி... ஏதோ சொன்னான்.

"பறே தெமிள அப்பே கொள்ளட்ட கல்வாநே..." ஆத்திரத்தோடு பொடியனைக் கூட்டிக் கொண்டு நடந்தான் பியதாச

"அடே பெரிய கரைச்சலுக்கு போறாய்... பொடியன் செய்த பிழைக்கு அடிவாங்கி இருக்கான். நீயென்னடா என்றால் தமிழங்க மேல் பாஞ்சு விழுகிறியே! உனக்கு அறிவில்லையா? வா என்னோட...!"

பியதாசவை தடுத்து நிறுத்திய சோமபாலவின் சிங்கள வார்த்தைகள், தமிழாக மனக்கண்ணில் உருமாறிய போது செல்வராசாவின் நெஞ்சே சில்லிட்டது.

**புதுமை நெஞ்சங்கள் : 1976**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்வுகள்



ஹோட்டல் காரருக்கு ஏதோ அவசரவேலை மத்தியானச் சாப்பாட்டோடு ஹோட்டலை இழுத்து மூட பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால் அவரின் அவதிக்கு அங்கு...

கல... கலப்பாகவே கூட்டம் கூடிக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தோடு கூட்டமாக வாசலில் இரு சிறுவர்கள். ஒரு குழந்தை இவர்களின் பின்னால்;

"ஐயா... தோச இருக்கா...?∴∴ அந்த சிறுசுகளில் ஒன்று மேசைகள் மீது பரப்பப்பட்டிருந்த உணவுக் குமியல்களில் இருந்து விடுபட்டு, தான் ஆசைப்பட்ட உணவினை ஆறுதலாக... ருசித்து உண்ண குரல் எழுப்பியது. இந்தக் குரல்... ஹோட்டல் காரருக்கு மட்டுமல்ல சிவராசனுக்கு முன்னால் அமர்ந்து வடை, பாயாசத்தோடு போராடும் உருவமொன்றுக்கும் கேட்டது.

ஹோட்டல்காரர் காது கொடுக்காது தன் அவசரத்தில் இருந்தார். அத்தோடு, "தோசை" என்ற ஐற்றம் இல்லாதது காரணமாக இருத்தலாம்.

வடை, பாயாசக்காரர் மட்டும் அந்த சிறுசுகளை மிக... மிக உண்ணிப்பாகப் பார்த்தார். சிவராசன் ஏதோ கற்பனை பண்ணி பார்த்தான்.

"ஐயா... தொச இருக்கா...? இந்த அனுங்கல் குரல்களில் தான் எத்தனை வித்தியாசமான ஒலி அதிர்வுகளோ! இந்த ஒலி அதிர்வுகள் சிவராசனையும் தாக்கியது. அவன் நிமிர்ந்து பார்த்தான்.

வடை, பாயாசக்காரர் தன் பார்வையில் இருந்து விடுபட்டு விக்கல் குரல் கொடுத்தார். அது,

"தோசையா... நாளைக்கு வாங்க..." என்ன நக்கல் வார்த்தை இது. இந்த சிறுசுகளின் பசி இந்த வயிற்றுப் பிசாசுக்கு எங்கே தெரியப் போகிறது...

தொண்டைக்குள் கட்டிக்கொண்ட ஒருவித அசட்டுத்துணிவோடு சிவராசன் வடை, பாயாசக்காரனை ஏறிட்ட போது...

அவர் வார்த்தைகள் மட்டுமல்ல... முகத்தில் அரும்பிய புன்னகை மாற்றமும் நக்கலாகவே இருந்தது.

அவர் நக்கலாகச் சிரித்தார்... ஓங்கி அறை கொடுக்கலாம். என்ற நினைவோடு சிவராசன் தன் சாப்பாட்டுக் கையைத் தூக்கிய போது....

"ஐயா... தோச இருக்கா?" மீண்டும் அந்தக் அவலக்குரல் எழுந்து கொண்டிருந்தது.

சிவராசன் எழுந்தே விட்டான்.

**அபியுத்தன்-1988**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சில்வாவிற்கு காவு கம்பு கனக்கிறது. தோளின் முன்னும் பின்னும் நான்கு கதிரைகள் குதிரையாட்டம் போட்டுக் கொண்டிருந்தன. கொத்தி ஒழுங்கையில் இருந்து ஆரம்பித்த 'இந்த பயணம்' நீண்டு கொண்டிருந்தது.

தோளின் கடுப்பால்; மடியில் இருந்த சில்லறைகளை மனதில் எண்ணிப் பார்த்தான். ஒரு மலபார் ரீ, ஒரு சிங்கிள் காட்டா, கங்கா பீடி, மிச்சசில்லறைகள்.

காவு தடியின் பாரம் இன்னும் கணக்கிறது.

"என்னவிலை.." எழு மணத்தியால இடைவெளியின் பின் பதினோராவது ஆள் ஒருவர் சில்வாவிடம் கேட்டார்.

"ஒரு கதிரைக்குப் முன்னூறு. நாலையும் எடுத்தா, ஆயிரம் ரூபா" வயிற்றின் விண் விண்ணென்ற உதைப்பும், தோளின் சுள்... சுள்ளென்ற குத்தும், அவனை விரைவாகப் பதில் சொல்ல வைத்தது.

"இதென்ன பச்சை மரம். ரொயிஸ் வேலை. நாலுக்கும் அறுநூறு தரட்டா, தவிச்ச முசல் அடிக்கும் சாயல்...

சில்வாவின் உடலில் ஒருவித மாற்றம் உறுத்தியது. கடுகடுப்புத் தொடர, டொக்யாட் கேற் வரை நடந்தான்.

இரண்டு நாள் உழைப்பு - காட்டத் தண்ணியோடும் ஒன்றறை முக்கால் இறாத்தல் பாணோடும்உருப்பெற்றதன் விளைவு? அதன் அறுவடை? ஆக, ஆயிரம் ரூபாய்களா? மரத்திற்கு சரி பாதி போக... ஆயுதக் கூலி? மிஞ்சிறது? ஐநூறு ரூபாயில் அவனை நம்பி சீவிக்கிற சீவன்கள்? ஐந்து

"இந்தாப்பா, என்ன விலை?

"ஆயிரத்தி இருநூறு ரூபா..."

"என்னப்பா எல்லாம் மலியிது, நீ" சில்வாவின் கரங்கள்... அதன் மரத்துக் போன உழைப்பின் அறுவடை...

"துரை,, நீங்க உங்க மனச்சாட்சியோட கேளுங்க.. ஒரு நீதி வேணும். உங்களுக்கு அறுநூறு ரூபாக்குத் தந்து என் உழைப்பின் பெறுமதியை நான் குறைக்க விரும்பவில்லை, நீங்க எங்களைப் போல ஏழையளில நயமடையப் பார்க்கிறீங்க... உங்களுக்கு இந்தக் கதிரைகளை தருவதிலும் பார்க்க இதுகள..." சில்வா இடையில் முழித்த போது...

"என்ன செய்வாய்" என்றார் விலை கேட்டவர்..."

இதுகளை அடிச்சு உடைச்சு கொள்ளிக்கு விற்றா நாலு றாத்தல் பாண் வாங்கலாம். அது எங்கட வயிறுகளை நிச்சயமாய் நிரப்பும் உங்கட பிச்சைக்காசு நிரப்ப வேண்டாம்" சில்வா வேகமாக நடந்தான். காவு கம்பு அவனுக்கு கனக்கவில்லை.

**சிந்தாமணி - 1988**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகரீகம் என்று



புடவைக் கட்டுக்கு அவ்வளவு நாகரீகமாக அவள் தெரியவில்லை என்றாலும் இயற்கையழகு என்ற ஒன்றிருக்கிறதே... அதன் வழிப் பார்த்தால்...

அவள் அந்தக் கோலத்திலும் நாகரீகமானவளாகவே தெரிந்தாள். அவளின் ஒவ்வொரு அங்கங்களையும், போர்த்தி அழகிற்கு எடுப்புச் செய்கின்ற புடவையின் அலைவரிசைகளையும் ஒவ்வொன்றாக சொல்லிக் கொண்டு வந்த கார்த்திகேசன் இடையில் நிறுத்திக் கொண்டு...

அவளின் காதுகளை மட்டும் பார்த்தாள்.

கார்த்திகேசனின் பேச்சில் தன்னை ஒட்டிக் கொள்ளாதவள் போல காட்டிக் கொண்டு - உள்மனதில் எரிந்து கொண்ட நாகரீக மயக்கத்தோடு நின்ற அரவிந்தன்...

அரவிந்தனும் அவளின் காதுகளையே பார்த்தாள்.

அவளின் காதுகள் தெரியவில்லை இரண்டு காதுகளையும் மூடி வாரி இழுக்கப்பட்ட மயிர்க்கேசம் அவளின்....

கார்த்திகேசன் திரும்பினான்.

"மச்சான்.... அவள் காதுகளை மறைத்திருக்கிறாள்... நாகரீகமென்று அவள் நினைக்கிறாள் போல..."

"அதில்ல பிரச்சினை... நீ உன்னிப்பாக அவள் காதுகளை பார்க்கவில்லை..."

"ஓம்..."

"அவள் காதுகளில் தோடில்லை... அதை மறைக்கத்தான் இந்த மாதிரி மயிரால்... தவிர வேறெந்த நாகரீக குணமும் அவளிடம் இல்லை...

அரவிந்தன் இந்த சொற்களை ஜீரணிக்க முடிந்த போது தன் மனைவியிடம் சொல்லி அவளின் காதுப் பிரச்சனையினை இந்த நாகரீகம் என்ற போர்வையில் மறைக்கலாமென்று எண்ணிக் கொண்டான்.

ஆனால் கார்த்திகேசன்.....

தூரத்தே போகும் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.

**புதுமை நெஞ்சங்கள் - 1979**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சோடிச் செருப்பு

அந்த மனிதன் மிக அமைதியாகவே கேட்டான். ஆனால் அது கந்தசாமிக்கு சுள்ளென்று சுட்டது. பதில் சொல்ல முடியாத கள்ள நிலையில் அவன் தவித்தான்.

அரைக்கு பதிந்த லோங்சை வயிறுவரை இழுத்துக் கொண்டு தன்னை சமாளிக்க கந்தசாமி முற்பட்டது, அந்த மனிதனுக்கும் பேச வேண்டும் போல இருந்திருக்க வேண்டும். அவன் மள மளவென்று சிங்களத்திலும் பின்னர் புறோக்கின் ஆங்கிலத்திலுமாக கதைத்தான். அவன் பேசுவது கந்தசாமிக்கு நன்றாக விழங்கினாலும் மொழி வித்தியாசமானதால் பேச முடியவில்லை.



கநதசாமியின் இந்த பேச்சுமொழித் தயக்கம், பேசிய மனிதனுக்கு இன்னும் ஆத்திர்ததை ஊட்டியிருக்க வேண்டும். 'மள மள'வென்று அந்த அத்தி மர வேரோடு கிடந்த ஒரு சோடிச் செருப்புக்களை தான் கொண்டு வந்திருந்த கடுதாசியினால் சுற்றி தன் பயணப் பைக்குள் போட்டுக் கொண்டு உடுப்புக்களைத் கழைந்து கன்னியா வெந்நீர் கிணற்றில் குளிக்க ஆயத்தமானான்.

கந்தசாமியின் மனதினில் ஏக்கம். லோங்சைக் போட்டுக் கொண்டு எப்படி வெறுங்காலோடு போக முடியும்? தன்னோடு துணைக்கு வந்த நவத்தோடு கதைத்தான்.

"மச்சான், நான் அப்பவே சொன்னேன். நீதான் சொன்னாய் அந்த செருப்புக்களைப் போடச் சொல்லி. இப்ப பார்த்தியா இவன் என்னை கள்ளனென்று நினைப்பதை..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கந்தசாமி, இது கோணேசர் மகிமை. நானென்ன செய்ய காசக் கொடுத்து அத வேண்டப் பார்ப்பம்..." நவம் சொன்னது அந்த மனிதனுக்கு புரிந்திருக்க வேண்டும், ஆனால் அவனுக்கும் அந்த பேச்சு மொழித் தயக்கம் முற்பட்ட போதும்... துணிந்து பேசலானான்.

"ஐசே... மே அபி சிலிப்பர்... கோணேஸ்வரா ரெம்பிள்..." தன்னுடைய சிலிப்பர் கோணேஸ்வரர் கோயிலில் தொலைந்ததையும் .... இப்போது இங்கு கன்னியா கிணத்தடிக்கு வந்த போது கிடந்ததையும் தான் அவன் சொன்னான்.

"எங்கட சிலிப்பர் நியூவன் அங்கதான் தொலைந்து போச்சு... இது கிடந்தது. நான் போட்டுக் கொண்டு..." கந்தசாமி சமாளித்தான்.

"ஐசே... கம கொய்த? அந்த மனிதன் திடீரென்று கேட்ட போது, கந்தசாமியும், "யாப்பினா" என்றான்... பளிச்சென்று...

"ஒவ்... யாப்பினா மினிசு" அவன் அர்த்தத்தோடு சொல்லி தன்னோடு வந்தவனுடன் ஏதோ கதைத்தான்.

இருவரின் பேச்சினை கவனமாக கவனித்த நவம், கந்தசாமியிடம் சொன்னான்

"இவங்க பேசுறதை பார்த்தாயா? எங்கட அவதிய ஒருவன் மட்டும் உணர்ந்து சிலிப்பரை கொடுக்கச் சொல்கிறான். மற்றவன் 'யாப்பினா மினிசு' என்று துவேசம் கொட்டுறான்... இது எங்கட பிழை. எங்களுக்கும் நல்லா சிங்களம் தெரிஞ்சிருந்தால் இந்த பிரச்சினையை முடிச்சிருக்கலாம். ஆனால்....

"பிரச்சினை முடியுமென்று நினைக்கிறியா..? இல்லை எங்களைப் போல இவையளும் பேச்சுமொழித் தயக்கத்துக்கு விழும் போது நல்லா கஷ்டப்படுவினம். "ஆக, நாம இரண்டு சாராரும் இரு மொழிய தெரிஞ்சு கொண்டால் தான் இந்த பிரச்சினை தீர முடியும். ஆனாலும் பெரும்பான்மை இனம் எப்படி தன் மொழியை விட்டு சிறுபான்மை மொழியை படிக்கப் போகுது? படிக்காது தான் ஏனென்றால் எல்லாரையும் அடக்கி ஆட்சி செய்யிறதும் மொழிவாத துவேச அரசாங்கங்கள் தானே!

'அதுக்கு?" கந்தசாமி சொன்னதுக்கு பதிலாக கேள்வியொன்றை கேட்டு விட்டு நவம் நின்றான்.

"எங்கட செருப்புக்களை அடிச்சுப் பறிப்பம். நாங்கள் இழந்ததை மனிதாபிமானத்தோடு பெறுவதில் இதைவிட இப்ப வேற வழி இல்லை.

**புதுமை நெஞ்சங்கள் : 1978**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம்

அரசாங்க ஆஸ்பத்திரி........

ஆறாம் வார்ட்டுக்கு மாடிப்படியேறி வந்தான் தவராசா. அவனுக்கு அந்த விஷயம் தெரியாது.! வோச்சர் சொன்ன பின்னரே அதற்கென்று இருந்த விளம்பரத்தைப் படித்துப் பார்த்தான்.

போடப்படும் விளம்பரங்களுக்கு அமைய எங்கள் நாட்டில் சரியான ஒழுங்கு முறை இருக்கின்றனவா?" இது தவராசாவுக்கு தெரிந்தவொன்றுதான்.

சினிமா மண்டபத்துக்குள் - "புகைத்தல் இங்கு தடை செய்யப்பட்டுள்ளது" என்றும் இதை மீறினால் என்ன தண்டனையென்றும் விளம்பரப்படுத்தியிருக்கும். அதே போலத்தான்.. அலுவலகங்கள்

"உத்தரவின்றி உட்பிரவேசிக்காதீர்கள்" என்ற விளம்பரமும் நிலைமையோ இவை இரண்டிலும் வேறு எதிர் விதமாகவே இருக்கும் இந்த உதாரணங்கள் அப்போது தவராசாவின் மனதில் நிழலாடத்தான் செய்தன. ஆனால்....வாச்சர் விடுபவனாக இல்லை. இது தவராசாவுக்கு அதிசயமாக இருந்தது. போடும் விளம்பரத்துக்கு தம் கடமையை அந்த வோச்சர் ஒழுங்காகவா செய்கின்றான்? எங்கள் நாடு திருந்தியா விட்டது.?

ஐம்பது சதமொன்றை நீட்னால் அவன் விடுவான் போல தவராசாவுக்கு தெரிந்தது. ஆனாலும் அதற்கு அவன் மனம் இடந் தரவில்லை. வோச்சர் மனநிலை எப்படியோ?

"இளநீர் குரும்பைகளை வாட்டுக்குள் எடுத்துச் செல்லாதீர்கள்" என்று அவன் படித்த விளம்பரத்துக்குத் தக்க அவனுக்கே இளநீர் கொண்டு போகும் வழிமுறை பற்றி வோச்சரே சொல்லித் தந்தான்.



"இளநீர் குரும்பைகளை வாட்டுக்கு வெளியே வைத்து வெட்டி போத்தலில் இளநீரை எடுத்துக் கொண்டு போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயாளிக்கு கொடுக்கலாம்.

முடிவாக, இளநீர்க் குரும்பைகளை வாட்டுக்குள் எடுத்துச் செல்ல முடியாதென்ற நிலையில் வோச்சர் சொன்ன மாதிரியே இளநீரை போத்தலில் எடுத்து வார்ட்டில் கிடந்தசித்தப்பா மகனுக்கு கொடுத்தான் தவராசா.....

பின்னர்....

படுக்கை விரிப்புக்களை சரிப்படுத்தினான். குடிநீரை பிடித்து வந்தான். இன்னும் இத்தியாதிகள்....

"தம்பி, சுடுதண்ணி எடுத்து தாறிங்களா?" மூலைப்பக்க கட்டிலில் கிடந்த கிழவர் தவராசாவிடம் உதவி கோரினார்.

தவராசாவும் மறுக்காது சுடுநீர் எடுப்பதற்காக வெந்நீர் குடுவையுடன் ஆஸ்பத்திரிக்கு வெளியே இருந்த தட்டிக் கடையொன்றுக்கு நடந்தான்.

வருகின்ற வழியில் - சிகரெட் ஒன்றினை பற்ற வைத்துக் கொண்டே வந்தான். தவராசாவைக் கண்டதும் அந்த வாச்சர் சிரித்தான்.

தவராசா தன் மற்றக் கையில் இருந்த சிகரெட் ஒன்றினை அந்த வாச்சரிடம் நீட்டி...

"பற்றுங்கோ.. சும்மா பற்றுங்கோ பிறதர்...."

வாச்சர் தடுமாறியே விட்டான்.

"நீங்க என் மேல் கோபமாக இருப்பீங்க என்று நினைத்தேன். ஆனால் நீங்கள்..." அரைமணி நேரத்துக்கு முன் நடந்த சம்பவத்தை நினைவு படுத்தினான். அது வேற விஷயம்... இது வேற..." தவராசா சொல்லிக் கொண்டே" கைவிரல்களிடையே இருந்து பற்றிக் கொண்டிருந்த - முடியும் தருவாயில் உள்ள சிகரெட் துண்டை பற்றுவதற்காக நீட்டினான்.

வாச்சருக்கு ஒன்றுமே புரியவில்லை... மலைத்தே போனான்... ஆனால் தவராசாவோ...

அந்த சிகரெட் விஷயத்திலேயே கண்ணும் கருத்துமாய் நின்றான்...

**புதுமை நெஞ்சங்கள் : 1979**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகள்

'இனக் கலவரம் முடிந்து விட்டது.

'கோஷ்டி சண்டையென்று' - இதற்கு செய்தித் தலைப்புக் கொடுத்து பிரசுரித்தன பத்திரிகைகள்.

ஆஸ்பத்திரி வார்ட் கட்டிலில் படுத்திருந்தான் தெய்வேந்திரம் அவனுக்கு ஆதரவாக அங்கு ஒருவருமே இல்லை. படுத்துக் கொண்டே; வார்ட்டினுள் ஒருமுறை கண்களை நழுவ விட்டான்.

அவனுக்கு எதிர்ப்புறமாக உள்ள வரிசையின் ஆறாவது கட்டிலில் பியசேன படுத்திருந்தான். அவன் தலையில் கட்டு போடப்பட்டிருந்தது.

சட்டென தெய்வேந்திரம் பார்வையை இழுத்துக் கொண்டபோது.... இரண்டு மணித்தியாலங்கள் கழிந்திருக்கும்.



வயிற்றுக்குள் ஏதோ உழைவு மாதிரி... மூலமும் கடுக்கத் தொடங்கியது.

சிரமப்பட்டே தலையினைத் தூக்கி - குந்திக் கொண்டே நிமிர்ந்தான். காலை அசைக்க முடியவில்லை. முழங்காலுக்கு கீழ் ஏற்பட்ட கத்தி வெட்டு அரை அந்தர் பாரத்தைக் கொண்டது போலிருந்தது. விண்ணெண்ற குத்து; வலி கால் விரல்களைக் கூட மடிக்க முடியவில்லை.

இதை பியசேனா ஐந்து நிமிடமாக பார்த்துக் கொண்டான். அவனுள்ளும் ஏதோவொரு உணர்வு தட்டுப்பட்டிருக்க வேண்டும். கட்டிலில் இருந்து இறங்கி தெய்வேந்திரத்தின் கட்டிலை நோக்கி...

தெய்வேந்திரத்திற்கு திக்கென்றது. "தன்னை இனங்கண்டுதான் வாரானோ? ஏதும் செய்தாலும் செய்து போடுவான். ஒரு வேளை நான் தான்; தன்னுடைய மண்டையை பிளந்தவன். என்பது அவனுக்கு தெரிந்து விட்டதா? சீ.... அந்த இருட்டுக்குள்..." பாதுகாப்புக்காக பக்கத்து மேசையில் கிடந்த முள்ளுக் கரண்டியை மெதுவாக சுரண்டினான். விரல்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைகளில் முள்ளுக்கரண்டி.....

பாதுகாப்புக்கென்று நின்ற பொலிசாரும் அடுத்த வார்ட்டுக்கு.....

"என்ன மச்சான்... என்ன மச்சான்... என்ன வேணும்? கக்கூசுக்கு போறதா?

பியசேனாவின் பதில்; தெய்வேந்திரத்தின் விரல்களில் சுழன்ற முள்ளுக் கரண்டியைக் கழற்றியது.

தெய்வேந்திரம் இதை எதிர் பார்க்கவேயில்லை.

'மச்சான் மெல்ல... மெல்ல... இறங்கு" தனது கையை இடைக்குக் கொடுத்து வளைத்துப் பிடித்து மெதுவாக கட்டிலில் இருந்து தெய்வேந்திரத்தை இறக்கினான் பியசேன.

தெய்வேந்திரத்தின் கண்களில்....

'மெல்ல சூ...ஆ.... மெல்ல" தெய்வேந்திரத்தின் கால் வருத்தம் பியசேனாவின் வாயில் இருந்தே வந்தது. ஒரு தாயின் பாசம்.....

கக்கூசுக்கு போய் திரும்பும் வரை பியசேனாவே; தெய்வேந்திரத்தை....

கட்டில் படுக்கைக்கு ஆயுத்தமாகி விட்ட தெய்வேந்திரம்........ அவன் குரலே விம்மத் தொடங்கியது.

(மாமா.... நாங்கதான்... முந்த நாள் அடிபட்டோமே! அப்படியிருந்தும்... நீங்க என்னை..."

'அது மச்சான். நான் மனிசன் நீயும் மனிசன். உனக்கு கால் ஏலாது. எனக்கு நடக்க ஏலும். உதவி செய்யிறது.... அப்ப- மனிசனென்றால் இது உடனே மனசில வரும்? பியசேன கொச்சைத் தமிழில் சொன்னான்.

தெய்வேந்திரத்தின் நெஞ்சே....

பியசேன போகும் போது சொன்னான். அது?

"மச்சான் நீ தமிழன். நான் சிங்களவன். எங்களுக்குள் எது எப்படி இருந்தாலும் - எங்கட நெஞ்சில இறுகி இருக்கிற இதை யாரேலேயும் மாத்தமுடியாது! நீ வேற... நான் வேற... சரிங்தானே!"

தெய்வேந்திரத்தின் நெஞ்சே... அழவில்லை.

பியசேன ஒரு போராளியாகவே தெரியத் தொடங்கினான்.

**புதுமை நெஞ்சங்கள் - 1980**

**************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை வருகின்றது



மெதுவாகத் தூறிய சரிந்த கூரையின் தூவாணம் இப்போது படிக்கட்டை மட்டுமல்லாது விறாந்தைக்குள்ளும் எட்டிப் பார்க்கத் தொடங்கி விட்டது.

வாசலுக்கு கால் துடைப்பதற்காகப் போடப்பட்டிருந்த அந்த ஊற்றைச் சாக்கு கூட தெப்பமாய் நனைந்து கொண்டே இருந்தது.

இன்றும் குளிரை மட்டுமல்ல, மழையின் அகோரத்தைத் தாக்குப் பிடிக்க முடியாதென்ற நிலையில்; வெளித் தாழ்வாரத்தில் சுவரோடு முட்டிக் கொண்டு நின்ற அந்த வீட்டு நாய் கூட வாசலைக் கடந்து உள்ளே வர எத்தனித்தது.

ஆனாலும் அது திடீரென்று விருந்தைக்குள் புகவில்லை. உள்ளே வர பழக்க தோஷம் காரணமாக இருந்தது. அதை எதிர்த்தாலும்; அத்தோடு அந்த படிக்கட்டோடு நின்று விடுவோமா என்ற நிலையும் அதுக்கு இருந்திருக்க வேண்டும்.

நாய் அப்படி நினைக்காது போனாலும்; அதையே ஒரு காட்சியாக பார்த்துக் கொண்டு; சரிந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்திருந்த அந்த வீட்டுக்கு புதிதாக - மருமகளாக வந்தவள் நினைத்தாள்.

'அடி... அங்காலகோ...' அவளை அதட்டுவது போலவே - அந்த மருமகளுக்கு - மழை இடியோடு ஒத்த அந்த குரல் இருந்தது. சரிந்து பார்த்தாள். அவளின் புது மாமனார் காட்சியளித்தார்.

நாய் வெளியே போய்விட்டது.

"பிள்ளை... நாய்களுக்கு வீட்டுக்குள இடங்கொடுக்கக் கூடாது கொடுத்தால் குசினி வரை வந்து எங்களோட சமமாக பந்தியில் உக்கார்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும்"

மருமகளுக்கு மாமனாரின் பேச்சு புரியவில்லை.

அவள் அந்த நாய்க்காகவே பரிதாபப்பட்டாள். அவளால் அந்த இடத்தில் இருக்கக் கூட முடியவில்லை. தவியாய் தவித்தாள். மழை வர வர கூடிக்கொண்டே இருந்தது. மின்னலும் இடியும் வீட்டு கூரையை பிய்த்தெறிந்து விடுபவன் போல கதிகலக்கின.

மருமகள் எழுந்தே விட்டாள்.

'உஞ்சு வா..."அவள் சத்தம் போட்டதுதான் தாமதம் நாய் உள்ளே வர எத்தனித்த போது....

மாமனார் வந்து குறுக்கிட்டார்.

மருமகள் சொன்னாள் "வீட்டு நாய்கள் குசினியை பாதுகாக்கும் மாமா..."

அது மாமனாருக்கு புரியவில்லை. இவர்கள் இருவரும் பேசிக் கொண்ட அந்த அர்த்தமான பேச்சுக்களை அறிந்த சாயலில் அந்த நாயானது விறாந்தைக்குள் எட்டி கால்களை வைத்தது.

வெளியில் மட்டுமல்ல இப்போது - வீட்டுக்குள்ளும் மழை பெய்யத் தொடங்கியே விட்டது.

**புதுமை நெஞ்சங்கள் : 1980**

*************

# சங்கமம்

"கடலால வந்த களைப்புக்கு ஒரு 'டோஸ்' போட்டால் நல்லா இருக்கும்." மனதுக்குள் நினைத்தான் நவம்.



"தம்பி... இரண்டு 'ராம்' தாடா! என்னடா அளவிலே குறைக்கிறேயே! இந்தா ஒன்றும் ஏறல்ல... இன்னுமொரு 'ராம்' ஊற்றன்...

கிளாஸ் கழுவிக் கொண்டு நின்ற 'சங்கிலி' தனக்குள் சொல்லிக் கொண்டான்... நவத்தைப் பார்த்து?

"தண்ணியால வந்தது தண்ணியாகவே போகுது"

**அபியுத்தன் : 1976**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடியாது....... முடியாது........



'முடியாது...... முடியாது.......' இன்று இந்த நிமிடம் அல்ல, நேற்றும்.... இன்றும், இன்னும் பின் நோக்கிய நாட்கள் ஒவ்வொரு பொழுதிலும்.....

யசோதா... அப்படியோ நிலை குலைந்து போகாமல், தன்னை எந்தப் பிடிக்குள்ளும் அகப்படுத்திக் கொள்ளாமல், துண்டு, துண்டுகளாய் தன் மனதை பிளவு படுத்திக் கொள்ளாமல், துவண்டு துவண்டு அழுது.... அழுது... கண்ணீரை வடித்து... வடித்து..... தன் மேனியை தானே உருக்கி.... உருக்கி....

அவள்.... அந்த கணத்தில் அவனுக்கு... அந்த சிலப்பதிகார கண்ணகிதான்... அல்லது இராமனின் சீதைதான்... இல்லை இல்லை அதற்கும் ஒரு படி மேல் போய் போய்... அவள்... இருபதாம் நூற்றாண்டின் யசோதா... யசோதாதான் அவளைப் போய் நான்... நான்...

சிவராமன் தன்னைத் தானே அறைந்து கொண்டான். யசோதா வடித்த நெருப்புக் குழம்புக் கண்ணீரில் தன் உடலை அமிழ்த்தி... அமிழ்த்தி.... பொரிந்து, பொரிந்து தன் கறையை போக்க போக்க...

கண்ணீர் வராமல் அழுது கொண்டிருந்தான். அடுப்படிக்குள் அந்த அமிழ்ந்த சிரிப்போடு பொட்டெடன வந்த கண்ணீரை மறந்து போன யசோதா இப்போது வந்து விடுவாள்.

அவள் வருவதற்குள்.... வருவதற்குள்...

'முடியாது... முடியாது...' அந்த ஏவகணைக்குண்டுகளின் அதிரடி தாக்குதல்.... தாக்குதல்... அது பட்டு குருதி தெறித்த அவளது உடம்பு...

இன்றும்.... இன்றும்.... உயிரே பறிபோன சவத் தென்புடன்... தென்புடன்... எழுந்து போய்விட எத்தணிக்க.

அவளது கற்பு அறுத்த உடம்பு வெறும் முடமாகி கூனி குறுகி.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னல் நாற்காலி என்ற சவப் பெட்டிக்குள்இருந்து எழும்ப... எழும்ப... மறந்து... மறந்து...

அவள் சவப் பெட்டி பிணமாகத்தான். இப்போது தெரிகிறாள். அவள் போட்டிருக்கும் மாலை மரியாதைகள்... ஆடை அலங்காரங்கள் எல்லாமே... எல்லாமே....

அந்த திருமணமான நான்கு குழந்தைகளின் தாயான அந்த யசோதாவின் முன்பு... முன்பு.... அவள் இளித்தான். அவள் பார்வையிருள் தான் அந்த சவப் பெட்டிக்குள் இருந்து உயிர் பெற வேண்டும். அது மட்டும்...

யசோதா வந்து விட்டாள். அவளால், என்றுமே சிவராமனை மறக்க முடியாது. அவளை அந்த இராணுவ வதை முகாமையில் இருந்து மீட்டெடுத்தவன் தான் சிவராமன். சிவராமன் அத்தனைக்கும் 'ஒரே தெரு' என்ற உறவில் மட்டுமே யசோதாவுக்கு தெரிந்திருந்தான்.

இதெல்லாம் மூன்று வருடங்களுக்கு முன்பாக... முன்பாக நடந்து முடிந்து போன யசோதாவின் வாழ்வின் சில கீறல்கள். இந்த மூன்று வருடங்களும் ஆமி வதை முகாமில் இருந்து வந்த நாள் முதல்... அங்கு படாத அந்த வேதனை... வேதனை... எல்லாமே தன் கனவுகள்... கனவுகள்... கழுத்தை... நெரித்து... இதயத்தை கசக்கிப் பிழிந்தவைகள்.

இருந்த போது... யசோதா உயிருடன் இன்னும் வாழ... ஒன்றைத் தவிர... உடல் பொருள் ஆவி அனைத்தையும் கொடுத்து... அவளை யசோதா என்ற எலும்புக் கூடாகவாவது உயிர் பெற வைத்தவன்... வைத்தவன்... சிவராமன்... சிவராமன்... தான். அதற்காக... அதற்காக...

இந்த நன்றிக் கடன்களுக்காக...

சிவராமன் கற்பிழக்க... யசோதா உடன் படாத போதே...

அவளின் செவிப்பறையில் யசோதா தன் முன் வந்து நின்ற பின்னும்...

முடியாது... முடியாது... என்ற ஏவுகணை குண்டுகளின் அதிரடி... தாக்குதல்கள்...

யசோ... யார்... யாருக்கோ... நீ... உன் உடம்பை விட்டனி... எனக்கு ஒரு தடவை மட்டும்...' சிவராமனின் அந்த பலவீனமான வெற்றிக் குண்டுகள்... குண்டுகள் தான்...

'உன்னை... உன் கணவன் இன்னும் நம்பவில்லை. இனியும் நம்பமாட்டான். நீ சாகும் வரை அவன் கையால் நரக வேதனையை அனுபவிக்க தான் வேண்டும். அந்த நரக வேதனையில் இருந்து மீளவாவது... என்னோடு நீ... ஒரே ஒரு தடவை... ஒரு தடவை மட்டு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யசோதாவின் வைரம், காணாத சிவராமனின் குண்டுகள்... பஞ்சின் தாக்குதல்களை விட மிக... மிக... பலங்குன்றியவை தான் என்பது... சிவராமனின் குண்டுகளை கக்கும் போது அவன் வாய்க்கு தெரியவில்லை.

இன்று... இன்று... தான்... எதை, எதையோ சமாளித்து... சமாளித்துப் போன யசோதா... வாய் திறந்தாள். அவள் கேட்ட முதல் கேள்வி... கேள்விதான்... சிவராமனின் அந்த கூடாத வாய்க்கு அப்போததான் யசோதாவின் 'வைரம்' தெரிந்திருக்க வேண்டும்.

'நான் கற்பிழக்கவில்லை. பாலியல் வல்லுறவுக்கு ஆனவள்... ஆனவள்தான். அதை என் கணவனாலும் புரிந்து கொள்ள முடியவில்லை... எனக்கு உயிர் தந்த உங்களாலுமா கண்டு கொள்ள முடியவில்லை...?'

யசோதாவின் வார்த்தைகள் வெடித்து சிதறி சிவராமனின் உடம்புக்குள் புகுந்து... புகுந்து...

'அந்த பலாத்காரம்... என் உடம்பு அந்த பலாத்காரம்... போர்வை... அந்த போர்வைக்குள்... என் மனம் தனக்குத்தானே போட்டுக் கொண்ட அந்த அகோரமான எதிர்ப்புக்கள்... அதை மீறி... மீறி... என் உடல் வலுவை மீறி.. மீறி.. நான் என் கணவனின் தம்பியை காட்டித்தரவில்லை என்ற குற்றச்சாட்டுக்காக... குற்றச்சாட்டுக்காக... ஏற்படுத்தப்பட்ட பலாத்காரம்... பலாத்காரம்... நான் உண்மையில் என் கணவனுக்கு குற்றவாளியில்ல... என் என் கற்பை அல்ல... என் கணவனதும் கற்பை காத்தவள்... அப்படியான என்னிடம்... நீங்கள்... எனக்கு உயிர் தந்த கடவுளாக மட்டும் இருந்து விடுங்கள். நீங்கள் தந்த உயிருக்காக நித்தம் உங்களை நான் தொழுகின்றேன்.

அந்த வதை முகாமில் மட்டுமல்லாது இந்த வதை முகாமிலும் நீங்கள் தான் என் கடவுள்... அதற்காக... அதற்காக...

நீங்கள்... நீங்கள்... போயும்... போயும்...

தூசு பெறுமதியற்ற இந்த மண் தின்னும் உடம்புக்காக ... நீங்கள்... நீங்கள்... அந்த... கடவுள் ஸ்தானத்தில் இருந்து... இருந்து... இறங்கி.. இறங்கி... என் முன்னால் கற்பிழந்து... கற்பிழந்து... தலை குனிந்து... தலை குனிந்து...

'யசோதா...' அழுதான்... அழுதான்... அந்த அழுகை... அதற்காக அதற்காகத்தானே... இப்போது அவள். முகங்கழுவி.... முகங் கழுவி...

சிவராமன் முன்னால்... முன்னால் 'முடியாது.... முடியாது...' என் மந்திரங்கள்... மந்திரங்கள்... இப்போது... இப்போது...

சிவராமன் என்ற சவம் அசையச் செய்கிறது?

**ஜனனி : 2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அவன் நன்றாக யோசித்துப் பார்த்தான் உணர்ச்சிகள், ஆத்திரங்கள். கோபங்கள்... வெறிகள்.. எல்லாவற்றையும், குப்பைக் கூடைக்குள் பேட்டு விட்டு. ஆறுதலாக இரண்டு பக்க நியாயங்களையும் ஆராய்ந்து பார்த்தான்.

அவனுக்கு இரண்டு பக்க நியாயங்களும் சரியாகவே பட்டன.

ஒரு பக்கம் அவனது தாய், மறுபக்கம் அவன் மனைவி அவன் இருவரையும் இழக்க விரும்பவில்லை. யாருக்காகவும் அவனால் நியாயமும் சொல்ல முடியவில்லை.

அம்மாவின் நியாயம்... அவவின் அழுகை..... அவவின் உளக்கிடங்கில் பொதிந்திருந்த ஆழமான சிந்தனைகள்... எல்லாம் அவனுக்கு ஒரு வெறியை உண்டாகத்தான் செய்தன.

ஆனாலும் நியாயங்கள்.. அந்த சம்பவம் ஏற்பட்ட சூழல் கொண்டு காவிகளின் திரிப்பு..... திரும்ப திரும்ப... "வஞ்சக என்னத்தோடு சொல்லவில்லையென்ற"... ஒரே அசையாத குரல்.... (ஓ) வென்ற அழுகை

சே.... அம்மாவின் வார்த்தைகளுக்கு ஏற்பட்ட "வெறி" மனைவியின் வார்த்தைகளைக் கேட்ட போது... வெறிதான் அவனுக்கு முறிந்ததே தவிர பிரச்சினைக்கு முடிவு" என்ற ஒன்றினைச் சொல்லி அவர்களுக்குள் சமாதானத்தை ஏற்படுத்த முடியவில்லை.

அப்படி மாமி மருமகள் பிரச்சனை பெரிசில்லை.

வீட்டுக்கு வீடு உள்ளது தான். ஆனாலும் சம்பந்தப்பட்டவர்கள் நிலையிலும் இனி... "சம்பந்தப்படப் போகிறவர்கள்" நிலையிலும் அது பெரியது தான்

இந்த "சச்சரவு" ஏற்படுகிறதிற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு... மருமகள் அடுத்த... அடுத்த வீட்டுக்கு பேன் பார்க்க போய் இருக்கிறாள்.

பேன் பார்க்கும் கூட்டம் கூடி... அந்தக் கதை... இந்தக் கதை.... எல்லாம் கதைத்து மயிர் "கொட்டுறதில்ல" தொடங்கி இருக்கினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்ப மருமகள்... என்ற மாமியைப் பார்த்தீங்களா... நல்ல கேசம், மயிரே கொட்டுறதில்லை. எங்களுக்கு அந்த வயசில என்றால் மொட்டை தான்" என்ற மாமியின் கேசத்  தை பெருமைப்படுத்தி" சொல்லி இருக்கிறாள்.

சம்பவம் முடிந்து விட்டது

இரண்டு நாட்களில் பின் மாமி.. என்ற  கொண்டை மயிரைப்பற்றி... நாலு பேருக்கு கேவலமாய் வீடு.... வீடாய் திரிந்து ஏன் கதைக்க வேண்டும்? என்னை பற்றி நாலு வார்த்தை கதைக்காட்டி என்ன விடியாதோ என்ற அழுது விடிய.....

மருமகளோ... நான் அந்த எண்ணத்தோடு சொல்லவில்லை உங்கட "கேசம்" நல்லாகவே உள்ளது அதை பெருமையாகவே சொன்னேன்..." என்று செல்ல.....

என்னைப்பற்றி ஏன் கதைக்க வேண்டும். நான் தான் உனக்கு உதாரணமானவளோ"

"நான் அந்த எண்ணத்தோடு சொல்லவில்லை"

சே... அவனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. அவன் கொழும்புக்கு அவசர, அவசரமாக போய் வர இருந்தான்.

இடையில் கண்ணிவெடி, செக்கிங் என்ற போர்வையில் ஏறி இறங்குதல்... இதனால் அவன் யோசனை பலமாக இருந்தது.

இந்த நிலையில் வீட்டிலே உருவான இந்தப் போராட்டம் அவனுக்கு பெரும் எரிச்சலாகவே இருந்தது.

"என்ன உன்னட்டை சாப்பிட மாட்டன்" என்ற பெரிய குண்டை அவனின் தாய் போட.....

"மாமி சாப்பிடாட்டி நான் வீட்டில் சமைக்கப் போறதும் இல்லை" என்ற மனைவி ஷெல் அடிக்க....

அவனுக்கு ஒன்றுமே, புரியவில்லை.

யார் மேல் அவன் கோபப்பட?

அவனுக்கு....... நடந்த சம்பவத்தை திரித்து... உங்கட கொண்டையைப் பற்றி உங்கட மருமகள் வீடு வீடாய் விற்று வாரா. என்ற தொனியில் நஞ்சை விதைத்த அந்த "சொண்டு காவி" கட்டச்சியின் மேல் தான்...

கோபம்.... கோபமாக வந்தது. மாமியும் - மருமகளும் சமாந்தரக் கோடுகள்.

அவைகள் இணையா.....

என்ற தத்துவத்திற்கு உயிர் ஊட்ட" இன்னும் இந்த சமூகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த "சொண்டு காவிகளை" அவன்.....

ஆத்திரத்தோடு கதிரையை விட்டெழுந்தான்.

**சிந்தாமணி : 1988**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக சொல்ல முடியாது. தயவுசெய் து... பெண் ணுக் கும் மாப்பிள்ளைகளும்... அறுகு அரிசி போட வாங்க"

மனப் பெண்ணின் தந்தை இரண்டு தடவைகள் சொல்லி விட்டு பெண்கள் அமர்ந்திருந்த பக்கம் வந்து தன் மனைவியைப் பார்த்தார்.

"ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக சொல்ல முடியாது. தயவுசெய்து, பெண்ணுக்கும்... மாப்பிள்ளைக்கும்.... அறுகு அரிசி போட வாங்க...."

கணவனின் வார்த்தைகளை தன் "சுருதியில்" சொல்லி விட்டு மணப் பெண்ணின் தாய் மணமேடைக்கருகினில் சென்றாள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொருவர் முகங்களைப் பார்த்தபடி எழுந்தார்கள். மண மேடைக்கு முன்னால் இருந்த குருக்கள் ஆண்கள் முதலில் அறுகு அரிசி போடலாம் என்றார்.

அறுகு அரிசி நட்டம் கைமாறியது.

ஒவ்வொருவர்: ஒவ்வொருவர் ஆக.... அறுகு அரிசியோட... தெரிந்தவர்கள்; தெரியாதவர்களாக.. அந்த திருமணத்தில் ஒரு முக்கிய "காட்சி" நடந்து கொண்டிருந்தது.

இந்த வேடிக்கையை அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தான் துளசிநாதன். அவனுக்கும் ஆசையாகத்தான் இருந்தது.

இதில் என்ன கஷ்டம்? தட்டத்தில் உள்ள அறுகு அரிசியை எடுக்க வேண்டும். மூன்று முறைகள் மணமக்களுக்கு சிரசுமேல் வாழ்த்திப் போட வேண்டும். அவ்வளவு தான்.

ஆண்கள் தலையில் தலைப்பாகை கட்டிக் கொள்ள வேண்டும்.

எழும்ப நினைத்த துளசி எழும்பவில்லை. அருகு அசிரி போட தனது வயது: அதன் தகைமை பற்றி யோசனையாகவும் இருந்தது.

"என்ன துளசி போ... என்ன பேசாமல் மூலையில் இருக்கிறாய்....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகளின் சிறிய தகப்பன் வந்து அவனை வலுகட்டாயமாக எழுப்பினார்.

அவர் முகத்தில் இனம் புரியாத புன்சிரிப்பும் இருந்தது.... அது தனக்குள்ள தகமையை அப்போதுதான் துளசிநாதன் தெரிந்து கொண்டான்? அனுமானின் பலம் அவனுக்கே தெரியாதாம்.

துளசி இடுப்பில் இருந்த சால்வையை அவிழ்த்து தலையில் தலைப்பாகையாகக் கட்டி: அறுகு அரிசி போடும் வரிசையில் போய் நின்றான். அவனுக்கு சந்தோஷமாக இருந்தது.

இன்னும் இருவரின் பின்னார் அவனின் முறை வந்து விடும். அப்போது.. அவனை ஒரு கரம் தடுக்க நிமிர்ந்தான். மணப் பெண்ணின் தகப்பன் தான் அவனைத் தடுத்தவர்.

"தம்பி... உம்மோட ஒரு கதை வாரும்...."

"துளசிநாதன் வேறு பேச்சில்லாது மணமகளின் தகப்பனின் பின்னால்' நடந்தான். அவனுள் ஆயிரம் சிந்தனைகள்?

ஆள் அரவம் இல்லாத இடம் அது.

தம்பி, நான் சொல்றன் என்று குறை நினைக்காதை. நான் பச்சையாக சொல்லிப் பழக்கப்பட்டவன். பச்சையாகவே சொல்றன் என்றபடி துளசிநாதனை பார்த்தார் மணமகளின் தகப்பன்.

பின்ன தம்பி நீ... அறுகு அரசி போடாதை.. அது எனக்கு விருப்பமில்லை....." என்றார்.

சொல்லிவிட்டு அவர் நடக்க ஆரம்பித்தார். துளசிநாதனுக்கு ஏதும் புரியவில்லை. ஏன்? எதற்கு?? என்ற கேள்விகளுக்கு கூட இடம் வைக்காமல் அவர் போய் விட்டாரே!!

துளசிக்கு பெரிய பூகம்பமே உண்டாகி விட்டது. மெல்லியதாக சிறு மயக்கமும் அவனுள்... ஒரு மூலையில் வந்து அமர்ந்தான்.

"எனக்கு அறுகு அரிசி போடத் தகுதி இல்லையா?

அரை மணித்தியாலங்கள் அவனுள் இதே கேள்வி.

"எல்லோரும் சபையில் கலந்து என்னை சிறப்பிக்கவேணும். கேள்வியோடு இருந்த துளசிக்கு விடையாக அந்தக் குரல் ஏதோ புதுபலத்தை தந்திருக்க வேண்டும். எழுந்தான் வேகமாக.

"ஐயா ஒரு கதை"

மணப்பெண்ணின் தகப்பன் "என்ன" என்றார் மண வீட்டில் உள்ள முகங்கள் அவர்களின் பக்கம் திரும்பின.

"என்னையேன் அறுகு அரிசி போட தடுத்தனீங்கள் என்றான் படபடப்போடு துளசிநாதன்.

மணமகளின் தகப்பன் துளசியின் கையை உதறி விட்டு; உன்ர தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தனோடு வாழாதவள் அவளோட பிள்ளையின் கையால என்ர மகளுக்கு அறுகு அரிசி போடவோ?" என்றார் ஆத்திரத்தோடு.

துளசிநாதனுக்கு கலியாண வீடே சுற்றுவது போலிருந்தது. வியர்வை உடம்பில் ஆறாக ஓடியது. ஏற்பட்ட பலம் அவனுள் பல வீனமாக மாறுகிறதா?

அப்படியே அடங்கி கதிரையில் அமர்ந்து விட்டான். தலையை கவிழ்ந்து கொண்டான்.

"தம்பி குறை நினைக்காதை

என்ற குணம் தெரியும் தானே! நான் இருந்த வேலையில் மோட்டுத்தனமாக உன்னைப் புண்படுத்திப் போட்டேன். வா.. வந்து சாப்பிடு..." மணமகளின் தகப்பன் துளசியிடம் மன்னிப்புக் கோரினார்.

"அறுகு அரிசி போட தகுதி இல்லாதவனுக்கு எப்படி இந்த கல்யாண வீட்டில் சாப்பிட மனம் வரும் துளசியின் பலமான வார்த்தைகள் அவனுக்கு மீண்டும் பலத்தைத் தந்தன....

யாருமே எதிர்பார்க்கவில்லை. அவன் "மணமக்களை" நோக்கி நடந்தான். அவனின் கையில் இருந்த நூறு ரூபா தாள் மணமக்களின் கைகளுக்கு மாறியது.

மணமகளின் தகப்பனைப் பார்த்தான்.

"ஐயா.... நான் இந்த கலியாண வீட்டுக்கு வந்தேனே... அதுக்கு நீங்க தந்தீங்களே தண்டனை... அதற்குரிய "அபராதம்" ஆக உரியதை உங்கள் பிள்ளைகளுக்கு தந்து விட்டேன். சந்தோஷம் தானே!!" என்றபடி திரும்பிய துளசிநாதனை......

"தம்பி..... நில்லு..." என்று ஒருவர் அவனைத் தடுத்தார். அவர்? அவனை எழுப்பி அறுகு அரிசி போடச் சொன்னவர் மணமகளின் சிறிய தகப்பன்.

"உன்ர தாய் பல பேரோட வாழ்ந்தவள் தான். ஆனால்.. அந்த பல பேரில் என்ர அண்ணனும் ஒருவர்.." என்றபடி தன் தமையன்... மணமகளின் தந்தையை இனங் காட்டினார் அவர். துளசிநாதன் நிமிர்ந்தான்.

அந்த பெரியவரை.... தன்னை அறுகு அரிசி போட விடாமல் தடுத்த அந்த பெரியவரை....

துளசி முகம் இப்போது............ அந்த பெரியவரின் முகமே தாழ்ந்திருந்தது.

"தண்டனை" தான் நிறைவேறி விட்டதே"

இனியேன் அவன்?

துளிசிநாதன் நிமிர்ந்து நடந்தான்.

**சிந்தாமணி : 5.6.1988**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு டயறி

ஜெயத்தால் நம்பவே முடியவில்லை. அந்தப் பிள்ளை அப்படிச் செய்வாளா? சே..... இருக்காது... அப்படி இருந்தால் ஏன் அந்தப் பிள்ளை, டயறியில அப்படி எழுதியிருக்க வேண்டும்.

நேற்று மாலை ஜெயம் கண்டு எடுத்த டயறி இப்போதும் அவளின் கைக்குள் தான் இருக்கின்றது.

டயறியின் மடித்து விடப்பட்ட அந்தப் பக்கங்களைப் புரட்டினாள். அதில், "அவர் என்னைப் பார்த்தார். நான் பார்க்காதது போலிருந்தேன். பின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் அவரை நினைத்துப் பார்த்தேன்.

"சைக்கிளில் என்னைக் கொஞ்சிக் கொண்டு போனார். எனக்கு என்னவோ போல் இருந்தது.

"அன்று விடியக் காலையில் ஒரு இன்பக் கனவு கண்டேன் அதில் அவர் என்னைக் கட்டி அணைத்தார்......."

டயறியை மூடி வைத்து விட்டு சமையல் கட்டுக்கு வந்தாள் ஜெயம்.

"சே.... நல்லாப் படிக்கிற பிள்ளை. இந்த நாசமாய்ப் போற றோட்டுச் சுற்றிதெரு நாய்களால கெட்டு சீரழியப் போகுதே........ இதை அவளின் தாயிடம் சொன்னால்..."

தெருக்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. சமையல் கட்டு ஜன்னல் ஊடாக வருபவர் யாரென்பது ஜெயத்திற்குத் தெரிந்தது.

பக்கத்து வீட்டுப் பாக்கியம் அக்கா.

"இதை இவவிடம் சொல்லி அந்தப் பிள்ளையின் தாயிடம் சொல்ல வைத்து..... சே....... இது அம்பலத்திற்கு வந்தால் கெட்ட பேர் அந்தப் பிள்ளைக்குத்தானே! காதோடு காதாக இந்த டயறி இரகசியம் முடியவேண்டும்..... கண்டெடுத்த டயறி அந்தப் பிள்ளைக்கு வினைவைக்க உபயோகமாக இருக்கக்கூடாது......"

பாக்கியம் அக்காவை கதைத்து அனுப்பி விட்டு கோடிப் பக்கம் விறகுக்குப் போனாள் ஜெயம்.

அப்போது டயறியின் இன்னொரு பக்கம் அவளின் ஞாபகத்துக்கு வந்தது.

"ரதியின் பேர்த்டே இன்று அதற்குப் பிரசண்டாக அவரை ஏற்குமாறு ரதி என்னிடம் சொன்னாள். நான் ஏதும் கூறவில்லை."

"ஓ..... அந்த ரதியிடம் முழு விபரத்தையும் கேட்டு விட்டால்...."

பின்னேரம் பாடசாலை விட்ட பின்னர் ரதிதான் ஜெயத்தின் வீட்டுக்கு வந்தாள்.

"கதையை எப்படித் தொடங்கி முடிப்பது?"

ஜெயம் எவ்வளவோ முயற்சித்தும் அவளால் அந்த டயறி பற்றி பேசவே முடியவில்லை. ரதியும் போய் விட்டாள்.

அந்த டயறியும் அதன் பக்கங்களும் அவளைக் குடைந்து கொண்டிருந்தன.

வீட்டு வாசலுக்கு வந்தாள் ஜெயம்.

அதோ.....

அந்தப் பிள்ளையின் தாய் தானே!! இவவைக் கூப்பிட்டு, டயறியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து.......

துணிவை வரவழைத்து வீட்டுக்குள் ஓடிச்சென்று டயறியை எடுத்து வந்தாள் ஜெயம்

ஆனால், அவள் வருவதற்குள் அந்தப் பிள்ளையின் தாய், ஜெயத்தின் வீட்டு வாசலைக் கடந்து போய் விட்டாள்.

கூப்பிடுவோமா..... விடுவோமா...... ஜெயத்திற்குத் துணிவு வரவில்லை.

டயறி மீண்டும் பழைய இடத்துக்குப் போக, அவள் கதிரையில் வந்து அமர்ந்தாள்.

முற்றவெளிக்கு விளையாடப் போன ஜெயத்தின் மூத்தவன் கிணற்றடிக்குப் போய் முகம் கழுவுவதும், ரியூசனால் வந்த கடைசி மகன் வீட்டு முற்றத்து மல்லிகைப் பந்தலோடு நிற்பதுவும், யாரோ ஒருவரோடு முன்னறையில் இருந்து கணவர் வாய் சண்டை போடுவதும்........

இவை எதுவும் ஜெயத்தின் சிந்தனைகளைக் கலைக்கவேயில்லை. அவளுடைய எண்ணமெல்லாம் அந்த டயறியைச் சுற்றியே இருந்தது.

"எனக்கும் குமர் இருக்கு இந்த "டயறிக் குமரும்" கெடக் கூடாதது. அதற்கு......! அவளின் முடிவுக்குள் கட்டுப்படாத அன்றைய டயறிப் பிரச்சினை இறுக...... இறுக........

"ஜெயம்...... வெள்ளைத் தாளும் பேனாவும் கொண்டு வா.... " கணவரின் உறுமல் ஜெயத்தை உலுப்பியது.

மள மளவென்று மூத்த மகனின் மேசையடிக்கு ஓடினாள். வெள்ளைத் தாள் ஒன்றைக் கிழிப்பதற்கு கொப்பிகளைத் தடவத் தொடங்கினாள்.

அப்போது.......?

அந்தச் சிறப்பு நிற உறை போட்ட கொப்பிக்குள்........ "இது யாருடைய படம்....?"

"இது..... இது... டயறி.... அதில் உள்ள பக்கங்கள்.... அந்தப்பிள்ளை.... மூத்த மகன்... படம்....." ஜெயத்தின் மனம் படபடக்கத் தொடங்கியது.

"அந்தப் பிள்ளையின் டயறி சொல்லும் கதாநாயகன் என் மூத்த மகனா?

உடல் பதற.... உடனடியாக ஒரு தீர்வைக் கண்டு விட வேண்டுமென்று வேகத்துடன் அந்த டயறியை எடுத்துக் கணவரிடம் காட்ட ஓடினாள் ஜெயம்.

ஆனால்......!

அந்த டயறி...... ஜெயத்தின் மூத்த மகனின் கைகளுக்கு எப்பவோ அகப்பட்டு விட்ட சங்கதி அவளுக்கு எங்கே தெரியப் போகின்றது?

**சிந்தாமணி : 10.12.1988**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தணல்



திருக்கோணேஸ்வரத்தில் திருவிழா தொடங்கி விட்டது. ஊர்வல வீதி அலங்கரிப்புக்கு காசு சேர்க்கத் தொடங்கி விட்டார்கள். அவர்கள் கொண்டு வந்த லிஸ்ற்றில் நூறு ரூபா என்று எழுதினார். கடை முதலாளி சிவராசா. அதைக் கடையில் வேலை செய்து கொண்டிருந்த தவம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். காசு சேர்க்க வந்தவர்கள் விடை பெற்றுச் சென்றனர்.

நடனங்கள்... பைலாக்கள்... இன்னிசைக் கச்சேரிகள்....... சின்ன மேளங்கள் இவைகளும் அவர்களுடன் விடைபெற்றுக் கொண்டன.

நவம் முதலாளியின் முன் நின்று மரியாதையுடன் கேட்டான் "ஐயா போடுறதுக்கு உடுப்பில்லை ஒரு சேட் வாங்க வேணும்".

கோபத்துடன் நிமிர்ந்த முதலாளி "அதுக்கு......"! என்று கேட்க அவன் "இருபது ரூபா தாங்க......." என்றான் தயக்கத்தடன் "இங்க நடக்கிற வியாபாரம் உனக்குத் தெரியும் தானே இந்த நிலையில் இதைக் கேட்டால்....."

நவம் தலையைச் சொறிந்தான். "என்ன நிற்கிறாய், போய் வேலையைப் பார்" என்றார் முதலாளி. "கோணேசர் ஊர்வலத்துக்கு நூறு ரூபாய் போட்டியள். நான் உங்களட்டை வேலை செய்யிறனான். உடுக்க இலையென்று சேட் கேட்டால்...." அப்படியானால்... சரி.... இன்றைக்கு மத்தியான பஸ்சில் ஏற பெட்டி படுக்கையைக் கட்டு..... கணக்கைப் பார்க்கிறேன்" என்றார் முதலாளி.

நவம் அதிர்ந்து போனான்.... அப்போது.... கடவுள் படத்துக்கு சாம்பிராணி போட்டுக் கொண்டிருந்தவனின் கண்களில் கண்ணீர் சுரந்தது. சாம்பிராணித் தட்டுக்குள் சிவந்து... கொண்டிருந்த செந்தணலுள் இருந்து புகைந்த புகையினாலோ அல்லது சக தொழிலாளியின் இன்னல் கண்டவர்க்க உணர்வாலோ தெரியவில்லை.

**கலாவல்லி : 1977 வைகாசி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான்.. அவள்..

குறுங்கதைகள்

திருமலை சுந்தா

01.01.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org